வன்கொடுமை தடுப்புச் சட்டம் 30 வருட செயலாக்கம் ஒரு மீளாய்வு

# தமிழ்நாடு தரவரிசை அறிக்கை



குடிமக்கள் விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழு
தமிழ்நாடு

## வன்கொடுமை தடுப்பு சட்டம் 30 வருட செயலாக்கம் ஒரு மீளாய்வு

# தமிழ்நாடு தரவரிசை அறிக்கை

குடிமக்கள் விழிகண் மற்றும் கண்காணிப்பு குழு

**வன்கொடுமை தடுப்பு சட்டம் 30 வருட செயலாக்கம் ஒரு மீளாய்வு**

**தமிழ்நாடு தரவரிசை அறிக்கை**

**செம்மையாக்கம்: எட்வின், இயக்குனர், HRF**

செப்டம்பர் 2020

Creative Commons License 4.0

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை**

m: 86680 91454 ; e: justice@hrf.net.in ; w: hrf.net.in

## 30 ஆண்டுகள்... நிறைவேற்ற வேண்டிய வாக்குறுதிகள்

31 மார்ச் 2020, பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைதடுப்பு) விதிகளின் 25 வது ஆண்டு நிறைவைக்குறிக்கிறது. 11 செப்டம்பர் 1989இல் இயற்றப்பட்ட வன்கொடுமை தடுப்பு சட்டத்திற்கு அதன் விதிகள் உயிரோட்டத்தைக் கொடுத்தன. மனித உரிமை பாதுகாவலர்கள் இச்சட்டத்தினால் மகிழ்ச்சியடைந்து, அதனை தனது இருதயத்தில் வைத்தனர். இது அநேகமாக நாட்டின் முதல் 'குடிமக்களின் சட்டம்' ஆகும். முப்பது வருடங்கள் ஆகியும் கீழ்மட்ட அளவில் பதிவுகள் பல்வகையாக வேறுபட்டுள்ளது.

இந்தச் சட்டமும் விதிகளும், அரசியலமைப்பு சட்டவிதிகளுக்கு உட்பட்டதா என்று இந்திய உச்சநீதிமன்றம் வரையிலான சவால்களிலிருந்து பிழைத்துக்கொண்டது. சிவில் சமூக அமைப்புகளும் மனித உரிமை பாதுகாவலர்களும் அதன் 20வது ஆண்டு விழாவில் சட்டம் மற்றும் விதிகளின் செயல்பாடுகள் குறித்து நாடு தழுவிய அளவில் மீள்பார்வை செய்தனர். மீள்பார்வைகண்டுபிடித்தது என்னவெனில், சட்டம் மற்றும் விதிகளின் பெரும்பாலான விதிகள் பயன்படுத்தப்படவில்லை, பல புதிய குற்றங்கள் சேர்க்கப்பட வேண்டும் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாக்கப்படவேண்டும். இதன் விளைவாக சட்டம் மற்றும் விதிகள் விரிவாக முற்றிலுமாக சரிசெய்யப்பட்டு 2014ல் ஒரு அவசரச்சட்டமாகவும், 2016ல் பாராளுமன்றம் மூலமும் மாற்றப்பட்டன. திருத்தப்பட்ட சட்டம் மற்றும் விதிகள் முறையே 26 ஜனவரி மற்றும் 14 ஏப்ரல் 2016 அன்று அறிவிக்கப்பட்டன.

அமலாக்கப் பிரிவு மற்றும் நீதிநிர்வாகத்திலுள்ள சாதிய கூட்டமைவு மக்கள் பிரச்சாரத்தின் வெற்றியை இன்னும் ஊனமுற்றதாக்குகிறது. இந்தசட்டம் மாநில, மாவட்ட மற்றும் துணைப்பிரிவு அளவிலான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக் குழுக்களை குறிப்பிட்ட செயலாக்க விதிகளுடன் மாநிலத்திற்கு ஜனவரி மற்றும் ஜூலை, மற்றும் மாவட்ட மற்றும் துணைப்பிரிவு அளவிலான குழுக்களுக்கு காலாண்டு என்று பரிந்துரைத்தாலும், மாநில கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக் குழுவானது சட்டத்தின் 30 ஆண்டு வரலாற்றில் 4 முறை மட்டுமே சந்தித்தது, அது 60 முறை சந்தித்திருக்கவேண்டும். பொதுநலன் வழக்கு நிலுவையில் இருப்பதால் நீதிமன்றம் உத்தரவிட்ட கூட்டத்திற்காக அது கடைசியாக சந்தித்தது. சில மாவட்டங்கள் மட்டுமே துணைப்பிரிவு அளவில் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக் குழுக்களை அமைத்துள்ளன. மாவட்ட கண்காணிப்பு

மற்றும் மேற்பார்வைக் குழுக்களின் செயல்பாடுகள் விரும்பத்தக்க அளவுக்கு இல்லை. தேவையான அறிக்கைகள், மதிப்புரைகள் அல்லது தகவல்கள் இல்லாமல் சந்தக்கின்றனர், அந்த கூட்டங்களில் கலந்து கொண்ட சிலர் அவர்களை தேநீர் மற்றும் பிஸ்கட் கூட்டங்கள் என்று ஏளனமாகக் குறிப்பிடுகின்றனர்.

காலண்டர் ஆண்டுகளுக்காக 2018 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இந்தச்சட்டத்தை அமல்படுத்தியதை மீள்பார்வை செய்ததில், தண்டனை விகிதம் ஒற்றை இலக்கங்களில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான எண்ணிக்கையிலான பல கட்டாய அறிக்கைகள் சட்டத்தின் முழு வரலாற்றுக் காலத்திலும் ஒருபோதும் அனுப்பப்படவில்லை. மேலும் ஒப்பீட்டளவில் இளநிலை ஜூனியர் ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் கூட இந்தச் சட்டத்தை தண்டனையுடன்கூட செயல்படுத்த கடமைப்பட்டபோதும் கூடுதல் தலைமைச் செயலாளரின் நேரடி அறிவுறுத்தல்களைப் புறக்கணித்தனர்.

கூடுதல் காவல் துறை தலைமை இயக்குநர் மாநிலத்தின் தலைமைச்செயலாளரிடம் கூறும்போது, 'அரசு வழக்குரைஞர்கள்/ சிறப்பு அரசு வழக்குரைஞர்கள் மோசமான செயல்திறன் மற்றும் ஒத்துழைப்பு இல்லாதது வன்கொடுமை வழக்குகளில் தண்டனை விகிதத்தை உயர்த்துவதற்கான முக்கிய தடையாகும்' மற்றும் வழக்குரைஞர்களின் இயக்குனர் ஒப்புக்கொள்வது மட்டுமல்லாமல் வலியுறுத்துவது என்னவெனில் 'கடமைகளை அலட்சியம் செய்ததற்காக சட்டத்தில் அரசு ஊழியர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்பட்டிருந்தாலும் அரசு வக்கீல்கள் தேவையான அளவு செயல்படுவதில்லை, அரசு வழக்குரைஞர்கள், சிறப்பு வழக்குரைஞர்கள் அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறார்கள், அவர்களின் அணுகுமுறை பல வழக்குகளில் நடுநிலைமையோடு இருந்ததில்லை, அவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் பெரும்பாலும் தண்டனையில் போய் முடிவதில்லை' என்று குறிப்பிடுகிறார். மேலும் அவர் கூறும்போது நீதித்துறையை குற்றம் சுமத்துவது போன்று தோன்றுகிறது. 'சிறப்பு நீதிமன்றங்கள் / அமர்வு நீதிமன்றங்கள் பெரும்பாலான வழக்குகளை அற்ப காரணங்களுக்காக விடுவிக்கின்றன' காவல்துறை, வழக்குரைஞர்கள், நீதித்துறை அல்லது சாதாரண குடிமக்களின் அரசியல் தலைமை பற்றி மேலும் எதுவும் சொல்ல வேண்டியதில்லை.

இந்த தறுவாயில்தான் 'நித்திய கண்காணிப்பு என்பது சுதந்திரத்தின் விலை' என்ற வார்த்தைகள் சுதந்திர குடிமக்கள் கண்காணிப்புடன்

இருக்கவேண்டும் என வாழ்க்கையை எடுத்துக்கொள்ள வைக்கிறது. மாநிலம், மாவட்டம் மற்றும் துணைப்பிரிவு கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக் குழுக்கள் கண்காணிப்புடன் இல்லாவிட்டால், அதன் குடிமக்கள் அதன் வரையரைகளை அறியாமல் சுதந்திர குடிமக்களாக இருப்பார்கள். முதல் தமிழ்நாடு வருடாந்திர மாநில அமலாக்க அறிக்கையை (TASIR) வெளியிட்ட முன்னோடி சமூகநீதி சாம்பியன் பி.எஸ்.கிருஷ்ணனின் வற்புறுத்தலின் பேரில், இந்தயோசனை குடிமக்களின் விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கள் (CVMC) வடிவத்தில் மாநில மற்றும் மாவட்ட அளவிலுள்ள மாநில அமைப்புகளின் செயல்பாடுகளை நிழலாடுவதற்கும் கண்காணிப்பதற்கும் ஏற்படுத்தப்பட்டது. திரு.கிருஷ்ணனின் ஆன்மா இன்னும் நம்மை வழிநடத்துகிறது.

இது கடந்த பத்தாண்டுகளின் பரந்த சூழலில் வைக்கப்பட்டுள்ள இரண்டாவது ஆண்டு அறிக்கை ஆகும். முன்புபோலவே, அனைத்து தரவுகளும் மாவட்ட மற்றும் மாநிலத் துறைகளின் உத்தியோகபூர்வ மூலங்களிலிருந்தும், மாநில மற்றும் தேசிய குற்றப்பதிவுகள் பணியகங்களிலிருந்தும் வந்தன. அரசு கண்காணிப்பு அமைப்பு முறைகளின் செயல்பாட்டிற்கு இதுபோன்ற உறுதியான ஆதாரங்களை வெளிக்கொணர்வதும், நமது தேசத்தின் ஸ்தாபகக்கொள்கைகளின்படி, பட்டியல் சமூகங்களுக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட அரசு ஊழியர்கள் தங்கள் கடமைகளை திறம்பட நிறைவேற்ற உதவுவதும் எங்கள் நோக்கமாகும்.

ஜேய்பீம்.

**தீப்தி சுகுமார்**
பொதுசெயலாளர்
தமிழ்நாடு குடிமக்கள் விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழு
11செப்டம்பர்2020

# நன்றி

சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அவற்றின் உண்மையான அமலாக்கதிற்கும், அதில் கடந்த 30 ஆண்டுகளில் அரசுஇயந்திரங்களின் கடமைகள்மற்றும் செயல்பாடு ஆகியவற்றிற்கும் இருக்கும் இடைவெளிகளின் மீது கவனம் செலுத்துகிறது இந்தமதிபெண் அட்டை. தமிழகஅரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் பட்டியல்சாதியினர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைதடுப்பு) சட்டம் 1989 மீதானவருடாந்திர அறிக்கை [இனி வருடாந்திர அறிக்கை என்றுமட்டும் இங்கு குறிப்பிடப்படும்] உட்படபல்வேறுமாநில, மத்தியஅரசு அறிக்கைகள் மற்றும் துறைகளிலிருந்து தகவல் உரிமைச்சட்டம் வாயிலாக பெறப்பட்டவையே இதிலுள்ளதகவல்கள். வழக்கத்திற்குமாறாக, தமிழகத்தின் வருடாந்திர அறிக்கையும், மாநில, மாவட்ட விழிப்புணர்வுமற்றும் கண்காணிப்பு குழுவின் கூட்ட அறிக்கைகளும், மாநில குற்ற ஆவணக் காப்பக அறிக்கைகளும் இணையத்தில் கிடைக்கவில்லை.

இதில், முடிந்தவரையில், அரசு அறிக்கைகளில் உள்ளவற்றை சொற்பிறழாது, அதேபடி மேற்கோள்காட்டியுள்ளோம். துறைக்குதுறை ஒரே தகவல்களில் வேறுபாடுகள் இருப்பதே இதிலுள்ள மாறுபாடுகளுக்கு காரணம்.

இப்பணி, மூத்த ஒருங்கிணைப்பாளர் சித்ரா, ஒருங்கிணைப்பாளர்கள் ஹால்சியன் மற்றும் ரேவதி, இணை ஒருங்கிணைப்பாளர்கள் முருகேஷ், முத்துராணி, ரோஷன், சரவணன் ஆகியோர் அடங்கிய HRF குழுவினரால் சாத்தியமாயிற்று. இவர்கள் தங்களிடமிருந்து கோரப்பட்டபணிகளுக்கும் அப்பால் பல வேலைகளை மேற்கொண்டு, அச்சுநகலாகவும் இணையவழிதகவலாகவும் கிடைத்த பல்வேறு தரவுகளை தேடிக் கண்டுபிடித்து, அதனை ஒன்று சேர்த்து, பகுப்பாய்வு செய்து, வாசிக்கத்தக்க வடிவத்தில் வழங்கும் பெருமுயற்சியில் ஈடுபட்டனர்.

இம்முயற்சி HRFன் துணைஇயக்குனர் ப. தமிழரசி அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டது. HRF குழுவினருடன் இணைந்து செயலாற்றி, தயாரிப்பு மற்றும் தரசோதனை ஆகியவற்றை ஒருங்கிணைத்ததுடன், இவரே இப்புத்தகம் மற்றும் அதன் உறையையும் வடிவமைத்து, அதன் வெளியீட்டை திட்டமிடவும் செய்தார். தொலைப்பேசியில் மேற்கொள்ளவேண்டிய செயல்பாடுகள் அனைத்தையும் கவனித்துக்கொண்டதுடன், பணியிலுள்ள (அ) ஓய்வுபெற்ற அதிகாரிகள் மற்றும் இதரநபர்களை சந்தித்து, அவர்களிடமிருந்து கூடுதல் தகவல்களைப் பெற்றுத்தந்தவர் மூத்த ஒருங்கிணைப்பாளர் சித்ரா. தகவலுரிமைச் சட்டப்படி விண்ணப்பங்கள் அனுப்பி, அதில் முறையானதொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டவர் ஒருங்கிணைப்பாளர் ரேவதி. ஹிதில் அவருக்கு திறம்பட உதவியவர் ரோஷன். மாவட்ட குடிமக்கள் விழிப்புமற்றும் கண்காணிப்பு குழுவின் உறுப்பினர்களும் தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் அனுப்பினர். ஹிணை ஒருங்கிணைப்பாளர்களான ரோஷன், முருகேஷ், சரவணகுமார் ஆகியோர் தகவல்களை வகைப்படுத்தி, அதற்கு வடிவம் கொடுத்தனர். பகுப்பாய்வின் முதல்வரைவை சரவணகுமார் செய்தார்.

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தவர்கள் அந்தோணிபிரான்சிஸ் பிராங்க்ளின், கிருஷ்ணவேணி, நடராஜன், நீதிராஜன், சபிதா ஆகியோர் ஆவர். தமிழ் பிரதியில் பிழைதிருத்தம் செய்தவர்கள் தமிழரசி மற்றும் முருகேசன். ஆங்கில பிரதியை சரிபார்த்ததும் பிழைதிருத்தம் செய்ததும் HRF ஒருங்கிணைப்பாளர் ஹால்சியன் பெர்னாண்டஸ் ஆவார்.

இந்த மதிப்பெண் அட்டையை வெளிக்கொணர்வதில் எங்களுக்கு மிகுந்த அர்பணிப்புடனும் ஆர்வத்துடனும் உதவிய இவர்கள் அனைவருக்கும் எங்களது நன்றிகள்.

எட்வின்
11 செப்டம்பர் 2020

# பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைதடுப்பு) சட்டம், 1989 தமிழகத்தில் செயலாக்கம் – மீளாய்வு

## முக்கிய கண்டுபிடிப்புகள்

2001 முதல் 2018 வரை தமிழகத்தில் எஸ்சி மற்றும் எஸ்டிகளுக்கு எதிராக 28,336 குற்றங்கள் பதிவாகியுள்ளதாக என்சிஆர்பி தரவுகள் காட்டுகிறது. குற்றச்சாட்டுகளில் முடிவடைந்த மொத்த குற்றத்தீர்ப்புகள் குறைந்தது ஒரு குற்றம் சாட்டப்பட்சநடவர் 4,398 மற்றும் அனைத்து குற்றம் சாட்டப்பட்டவர்களும் விடுவிக்கப்பட்ட வழக்குகள் 12,896 ஆகும். 1989 முதல் 2018 வரையிலான காலம் (தரவு கிடைத்த கடைசி ஆண்டு), தமிழ்நாட்டில் பட்டியல் சமூகங்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதில் தமிழகத்தின் சுவடுப்பதிவு வியத்தகு மாற்றங்களைக் கண்டது.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது மற்றும் குற்றத் தீர்ப்புகளில் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழகம் படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளது. இப்போது குற்றப்பத்திரிகை மற்றும் குற்றத்தீர்ப்பு விகிதம் இரண்டிலும் தேசியசராசரியை விட பின்தங்கியிருக்கிறது. 2001–ம் ஆண்டிலிருந்து 2018–ம் ஆண்டில் பதிவான வழக்குகளின் எண்ணிக்கை சுமார் 39% குறைந்துள்ளபோதிலும், நிலுவையில் உள்ள புலனாய்வுகள் கிட்டத்தட்ட 291–லிருந்து 571 வழக்குகளாக இரட்டிப்பாகியுள்ளன.

குற்றப்பத்திரிகை தாக்கல் விகிதம் மற்றொரு ஆபத்தான போக்கைக் காட்டுகிறது. குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்வதில் தேசியசராசரியில் தமிழகம் முதலிடத்தில் இருந்தாலும், 2013, 2012 முதல் பல ஆண்டுகளில் பட்டியல் சாதியினருக்கு (91.3 vs 91.8) மற்றும் 2013 முதல், பட்டியல் பழங்குடியினருக்கு (92.3 vs 94.2) எதிரான குற்றங்களுக்கான ஆரம்பகட்ட குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்வதில் தேசியசராசரியைவிட தமிழகம் குறைந்துவிட்டது. அதேநேரத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தவழக்குகள் 2001–ல் 1,935 வழக்குகளிலிருந்து 50% குறைந்து 2018–ல் 963 வழக்குகளாக குறைந்துள்ளது.

இதேபோல், குற்றத்தீர்ப்பு விகிதம் எஸ்சி–க்கு (38.9%) 2001–ல் அகில இந்திய விகிதத்தைவிட (34%) அதிகமாக இருந்த போதிலும், 2007–ம் ஆண்டிலிருந்து இது வியத்தகு முறையில் குறைந்துள்ளது, இது எஸ்சிகளுக்கு தேசியசராசரியான 31%–லிருந்து 16% ஆகவும் மற்றும் எஸ்டிகளுக்கான குற்றத்தீர்ப்புகள் 17% vs 29% ஆகவும் இருந்தது.

இதிலிருந்து உண்மையில் ஒருபோதும் மீளவில்லை, இது தேசிய அளவில் எஸ்சி—க்கு 8% மற்றும் 26% மற்றும் 2016—ம்ஆண்டில் 11% VS 31%, மற்றும் 2018—ம் ஆண்டில் ST களுக்கு 0% [இது 2001—ம் ஆண்டில் STகளுக்கு 0% ஆக இருந்தது].

தரவுகள் சில குழப்பமான நீண்டகால போக்குகளை வெளிப்படுத்துகிறது.

**பதிவு:**

1. பி.சி.ஆர்.ஏ—ன் கீழ்வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை.
2. க்ஷகாலை வாரத்திற்கு ஒன்றுக்குமேல் அதிகரித்துவருகிறது.
3. கடந்த சில ஆண்டுகளில் கற்பழிப்புகள் அதிவேகமாக அதிகரித்துவருகின்றன. 2016ல் 41, 2017ல் 56, மற்றும் 2018ல் 73 முறையே 37% மற்றும் 23% அதிகரிப்பு, மற்றும் இரண்டு ஆண்டுகளில் 78% ஒட்டுமொத்த அதிகரிப்பு.
4. கடந்த நான்கு ஆண்டுகளில் கலவரம் வாரத்திற்கு இரண்டுக்கும் மேலாக அதிகரித்துவருகிறது, 2015 மற்றும் 2017—ம் ஆண்டுகளில் ஒவ்வொரு இரண்டுநாட்களுக்கும் ஒரு கலவரம் ஏற்பட்டது.
5. 2014—ல் 0 முதல் 912 லிருந்து 115 2015], 149 2016], 93 2017] மற்றும் 2018—ம் ஆண்டில் 78 வரையும் 2014க்கு பின்னர் வன்கொடுமை தடுப்புசட்டத்தின் கீழ் மட்டுமே அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

**புலனாய்வு:** 59% வழக்குகளில், அறுபது நாட்களுக்குள் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படவில்லை [விதி7 (2)]. சரியான நேரத்தில் புலனாய்வை முடிக்காததற்கான எழுத்துப்பூர்வ விளக்கம் விதி [72(a)] வழங்கப்படவில்லை. அறிக்கையை திரும்ப அனுப்பாததற்காக புலனாய்வு அதிகாரி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**நிவாரணம்:** 89% வழக்குகளில் 1984—ம் ஆண்டில் [1,759], நிவாரணம் மற்றும் மறுவாழ்வு தொகை சம்பந்தப்பட்ட நபர்களுக்கு ஏழு நாட்களுக்குள் செலுத்தப்படவில்லை [விதி12 (4)]. ஞில வழக்குகளில், 7 முதல் 8 ஆண்டுகளாக இது செய்யப்படவில்லை. வரவு—செலவு மதிப்பீடுகளில் அதிக நிதி ஒதுக்கப்படுவதால், இந்த அம்சத்தில் கவனம் செலுத்தப்படுகிறது. ரூ.2 பில்லியன் ஒப்பளிக்கப்பட்ட ஒரு விரிவான தடுப்பு அணுகுமுறையுடன் 30%—ம் அதிகமான பட்டியல் சாதி மக்கள் தொகைகொண்ட கிராமங்களின்

அடிப்படை உள்கட்டமைப்பை மேம்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

**செலவுகளை ஈடு செய்தல்:** பயண மற்றும் பராமரிப்பு செலவுகள் (TAME) உடனடியாக அல்லது மூன்று நாட்களுக்குள் ஈடு செய்யப்படவேண்டும். அநேகம்பேர் சட்டப்படி மூன்று நாட்களுக்குள் அதைப் பெறுவதில்லை. ஞில மாவட்டங்களில் எந்தவொரு செலவுகளும் ஈடு செய்யப்படவில்லை. சமீபத்திய ஆண்டுகளில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டாலும், சென்னை, திருச்சி, மற்றும் திருநெல்வேலி காவல்துறை கண்காணிப்பாளர்கள் இதுவரை TAME செலவுகளை ஈடு செய்யவில்லை. திருநெல்வேலி நகரம் மற்றும் திருச்சி நகரம் ஆகியவை ஒரு நபருக்குக் கூட திருப்பிச் செலுத்தாத மாவட்டங்கள். சென்னை, கரூர், நாமக்கல், திருவாரூர் ஆகியவை 2013 முதல் எந்தக் கட்டணத்தையும் கொடுக்கவில்லை.

**குற்றத்தீர்ப்புகள்:** தண்டனைவிகிதம் 2001—ல் கிட்டத்தட்ட 40% ஆக இருந்த போதிலும், இப்போது அது ஒற்றை இலக்கம் அல்லது குறைந்தது இரட்டை இலக்கங்களுக்கு நழுவியுள்ளது. அறிவிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 2001—லிருந்து 2018—ல் சுமார் 39% குறைந்துள்ள நிலையில், நிலுவையில் உள்ள புலனாய்வுகள் கிட்டத்தட்ட 291 முதல் 571 வழக்குகளாக இரு மடங்காக அதிகரித்துள்ளன. முழுமையான எண்ணிக்கையில், குற்றப்பத்திரிகை வழக்குகள் 2001—ல் 1,935 வழக்குகளிலிருந்து 50% குறைந்து 2018—ல் 963 வழக்குகளாக குறைந்துள்ளது.

**மேல்முறையீடுகள்:** இந்த காலகட்டத்தில் ஆயிரக்கணக்கான விடுவித்தல்கள் இருந்தபோதிலும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மேல்முறையீடு செய்து உயர்நீதிமன்றங்களில் விடுவிக்கப்பட்ட போதிலும், ஒரு வழக்கை கூட அரசு மேல்முறையீடு செய்யவில்லை. வருடாந்த அறிக்கைகளில் உள்ள நிலையான குறிப்பு 'விடுவிக்கப்பட்டதற்கு எதிராக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய முறையீடுகள் குறித்து சட்டபூர்வமான கருத்து கோரப்படுகிறது' என்றிருக்கிறது.

**கைகளால் துப்புரவு செய்தல்:** கைகளால் துப்புரவு செய்வதன் பரவல் மற்றும் அளவைப் பற்றி அரசு அறிந்திருந்தாலும், இந்த சட்டத்தின் கீழ் சில வழக்குகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன, அதுவும் கூட இறப்புக்குப் பின் மற்றும் மறுக்க முடியாத சான்றுகள் இருந்தால் மட்டுமே.

**சிறப்பு நீதிமன்றங்கள்:** 12 மாவட்டங்கள் மற்றும் 3 ஆணையரகங்களை உள்ளடக்கிய மதுரை, சிவகங்கை, தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, விழுபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் 38 பிரத்யேக சிறப்பு நீதிமன்றங்களில் (பி.சி.ஆர்.ஏ மற்றும் வன்கொடுமை தடுப்புசட்டத்தின கீழ்) ஏழு மட்டுமே தமிழகம் அமைத்துள்ளது. எட்டு கூடுதல் பிரத்தியேக சிறப்பு நீதிமன்றங்கள் அனுமதிக்கப்பட்டன மற்றும் 2016—ம் ஆண்டிலேயே பட்ஜெட் ஒதுக்கப்பட்டது, ஆனால் ஐந்து வருடங்கள் கழித்து, இவற்றில் ஒன்று மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது.

**மாநில அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழு (SVMC):** 2013ஆம் ஆண்டிலிருந்து இக்குழு ஒரு முறை மட்டுமே கூட்டப்பட்டுள்ளது. விதிப்படி, 49 கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவேண்டும். ஆனால், இன்றைய தேதிவரை 4 கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டுள்ளன. முதலமைச்சர் ஜெயலலிதா 2 கூட்டங்களைக் கூட்டினார், முதலமைச்சர் கருணாநிதி ஒரு கூட்டத்தைக் கூட்டினார். தற்போது முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஒரு கூட்டத்தை கூட்டியுள்ளார். ஆட்சியில் இருந்த கட்சிகள் வாரியான நிலவரம் வருமாறு: அதிமுக, தான் நடத்தவேண்டிய 29 கூட்டங்களில் 3 கூட்டங்களை நடத்தியது. திமுக, தான் நடத்த வேண்டிய 20 கூட்டங்களில் ஒரே ஒரு கூட்டத்தை மட்டுமே நடத்தியுள்ளது.

**மாவட்ட விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் (DVMC):** 2010 முதல் 2018 வரை 1,152 (65%) டி.வி.எம்.சி கூட்டங்களில் 744 மட்டுமே நடத்தப்பட்டன. நுடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கையில் முற்போக்கான அதிகரிப்பு உள்ளது, சென்னை, திருவள்ளூர் மற்றும் திருவண்ணாமலை ஆகியவை 2018—ம் ஆண்டில் சட்டபூர்வமாக ஆண்டுக்கு நான்கு கூட்டங்களை விட அதிகமாக நடத்துகின்றன. இருப்பினும், குழு உறுப்பினர்களுக்கு முன் கூட்டியே நிகழ்ச்சி நிரல் வழங்கப்படவில்லை. மேலும், செயல்திறன் மதிப்புரைகள் செய்யப்படாததால், உறுப்பினர்களுக்கு தங்கள் கடமைகளைச் செய்யத் தேவைப்படும் தகவல்கள் கிடைப்பதில்லை. இதன் விளைவாக டிஎஸ்பிக்கள் மற்றும் எஸ்பிபிக்கள் (அரசியல் நியமனங்கள்) பூஜ்ஜிய குற்றத் தீர்ப்புகளுடன் தங்களின் செயல்பாட்டிலிருந்து சுதந்திரமாக வேலையில் இருக்கிறார்கள்.

**துணைப்பிரிவு விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் (SdVMC):** விதி 17Aக்கும் கூடுதலாக துணைப்பிரிவு விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவை அனைத்து மாவட்டங்களிலும் அந்தந்த

மாவட்ட ஆட்சியர் அமைப்பதற்கான அரசாங்க உத்தரவை(G.O Ms) No 6, AD&TWDept dated 20 January 2015) கூடுதல் தலைமைச் செயலாளர் வழங்கியுள்ளார். 2018 ஆம் ஆண்டிற்கான மாநில ஆண்டு அறிக்கையின்படி, 32 மாவட்டங்களில் ஐந்து (16%) மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. ஹிதில் திண்டுக்கல் 4 கட்டாயக் கூட்டங்களில்[3], கிருஷ்ணகிரி[2], திருச்சி[2], திருநெல்வேலி[2], மற்றும் திருவாரூர் [4]. மொத்தமாக பார்க்கும்போது வெறும் 3% கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டுள்ளது. இது தண்டனை விகிதத்தைவிட மோசமானது.

**காலவரையறை அறிக்கைகள் மற்றும் மீள்பார்வைகள்:**

1. ***மாதாந்திர அறிக்கைகள்*** [விதி 4[4]] தகவல் அறியும் கோரிக்கைகளுக்கான பதில்கள், [அரசாங்க கடிதம் எண் 8486 / ஆர்டிஐ எண் 82 / பிஏ 1 / 2020-2, 17 ஜூலை 2020 தேதியிட்டது] அரசால் எதுவும் பெறப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றன.
2. ***வழக்குகளின் காலாண்டுமதிப்பாய்வுகள்*** [விதி 7 [3]] [ஆர்டிஐ கோரிக்கைகளுக்கான பதில்கள் 26 ஆகஸ்ட் 2020 தேதியிட்டது] காலாண்டு அறிக்கைகள் இன்னும் பெறப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றன.
3. ***சிறப்பு அரசு வக்கீல்களின் செயல்திறன்*** மீள்பார்வைகள் [விதி14[2]] செய்யப்படவில்லை. எஸ்.வி.எம்.சி 2013 முதல்சந்திக்கவில்லை [தற்போது செப்டம்பர் 2020ல் அவசர அவசரமாக கூட்டப்பட்டுள்ளது] என்பதால், AD & TWD-ன் சிறந்த முயற்சிகள் இருந்தபோதிலும், [விதி 14[2]]ன் கீழ் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் மீள்பார்வைகள் நடைபெறவில்லை.
4. ***காலவரையறை அறிக்கைகள்*** தகவல் அறியும் கோரிக்கைகளுக்கான பதில்கள் இந்த ஆண்டுகளில் [விதி 12 [7]]ன் கீழ் அறிக்கைகள் சிறப்பு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படவில்லை, அல்லது திருத்தப்பட்ட சட்டத்தின் பிரிவு 15ஏ-ன் கீழ் எந்தவொரு உத்தரவும் நீதிமன்றங்களிலிருந்து அரசால்பெறப்படவில்லை என்பதைக் காட்டுகிறது.

**அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை:** கடமையிலிருந்து தவறுதல் மற்றும் / அல்லது திறமையின்மை ஆகியவற்றுக்கான ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகள் இருந்தபோதிலும், பிரிவு 4 [2]-ன் கீழ் [தமிழ்நாடு 2010-2018 ஆண்டு

அறிக்கைபடி] எந்தவொரு அதிகாரிக்கும் எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மீள்பார்வைக் குழுவின் உத்தியோகபூர்வ நிகழ்ச்சிக் குறிப்புகளில் இருப்பதுபோல சிறப்பு அரசு வழக்குரைஞர்கள் கடமையிலிருந்து தவறுதல் மற்றும் ஒத்துழையாமை என்ற காரணங்களுக்காக யாரும் அகற்றப்படவில்லை.

**வன்கொடுமைகளுக்கு எளிதில் பாதிக்கப்படக்கூடிய கிராமங்கள்:** 2007 முதல் 2018 வரை, வன்கொடுமைகளுக்கு எளிதில் பாதிக்கப்படக்கூடிய கிராமங்களில் (APV) 2017—ல் 168 ஆக உயர்வில் இருந்தது படிப்படியாக, 2018—ல் ஒன்றுமில்லை என்று குறைந்தது. வன்கொடுமைகளுக்கு உட்பட்ட கிராமங்கள் 2011—ல் 136 ஆக இருந்து 2014—ல் 323 ஆகமாறியுள்ளன. 2012—ம் ஆண்டில் 370 ஆகக் குறையும் போக்கைக் காட்டிய மொத்த APV—கள் மற்றும் செயலற்ற APV—களின் எண்ணிக்கை 2013—க்குப் பின்னர் 396—லிருந்து 2018—ல் 592 ஆக உயர்ந்துள்ளது. 196 கிராமங்களின் அதிகரிப்பு, கிட்டத்தட்ட 50% அதிகரிப்பு, இது மிகவும் பரவலான, குறைந்த தீவிரசமூகமோதலைக் குறிக்கிறது. இது ஒரு நல்ல அறிகுறி அல்ல, மேலும் அதிகரிக்கும் என்று மட்டுமே எதிர்பார்க்க முடியும்.

**எதிர்பாரா நிலைக்கான மாதிரி திட்டம்** இன்றுவரை திருத்தப்பட்ட சட்டம் மற்றும் விதிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது, இது செப்டம்பர் 1, 2017 அன்று மாநில அரசிதழில் அறிவிக்கப்பட்டது. இது ஆங்கிலம் மற்றும் தமிழ் இரண்டிலும் கிடைக்கிறது.

**தமிழில் மொழிபெயர்ப்பு:** சட்டம் மற்றும் விதிகள்திருத்தப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, கூடுதல் தலைமைச் செயலாளர் அதை விரைவுபடுத்தக் கோரியபோதிலும், சட்டத்தின் தமிழ்மொழிபெயர்ப்பு மற்றும் விதிகள் இன்னும் செய்யப்படவேண்டியுள்ளது [மறுஆய்வுக் கூட்டம், 26 மார்ச் 2019].

**சாட்சிகளின் பாதுகாப்பு:** பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வழக்குகளின் குற்ற விசாரணையின் போது பிறழ்வதாக குற்ற வழக்குத்தொடர்வு இயக்குநர் ஒப்புக்கொள்கிறார் [26 மார்ச் 2019]. பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் விரோதமாக மாறுவதற்கான காரணம் குற்றவாளிகளின் வற்புறுத்தலும் அச்சுறுத்தலும் ஆகும். திருத்தம் செய்யப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகும், சட்டத்தின் பிரிவு 15ஏ—வை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் இன்னும் நடைமுறையில் இல்லை.

## முக்கிய பரிந்துரைகள்

**ஒரு ஒட்டு மொத்த சமூக, தடுப்பு அடிப்படையிலான அணுகு முறையை நிறுவுங்கள்:** இந்தசட்டத்தின் கீழ்குற்றங்களை 'வகுப்புவாத' மற்றும் 'சட்டம் ஒழுங்கு' பிரச்சினைகள் என்று கருதுவதிலிருந்து தமிழகம் விலகிச் செல்லவேண்டும். இந்த அணுகுமுறையானது வழக்குகளை பதிவு செய்வதில் அடக்குமுறைக்கு வழிவகுத்து, பதிவு செய்யப்படும்போது, தீவிரம் குறைந்த பிரிவுகளின் கீழ் அவற்றை பதிவு செய்கிறது. 30% க்கும் மேற்பட்டபட்டியல் சமூகங்களைக் கொண்ட கிராமங்களில் அடிப்படை உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் தடுப்புக்கான புதிய அணுகுமுறை ஒரு வழியாகும். மற்றொன்று வெகுஜன விழிப்புணர்வு, விரைவானநீதியை உறுதி செய்வதற்காக குடிமைச் சமூகத்துடன் கூட்டுசேருவது.

**சட்டத்தை அமுல்படுத்துங்கள், நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்:** 24 மணி நேரத்திற்குள் குறிப்பிட்ட இடத்திற்கு செல்லுதல் மற்றும் மாவட்ட குற்றவியல் நடுவர் (டி.எம்) மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் (எஸ்.பி) ஆகிய இருவருக்கும் புலனாய்வு செய்வது கட்டாயமாகும். (விதி 12(1)) மற்றும் (தமிழ்நாடு எதிர்பாராநிலைக்கான திட்டம்). இந்த பூர்வாங்க புலனாய்வுக்குப் பின்னர், முதல்தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்படுவதை எஸ்பி உறுதி செய்யவேண்டும் (விதி 12 (2)), மற்றும் நிவாரணம் குறித்த அறிக்கையை சிறப்பு நீதிமன்ற நீதிபதிக்கு டி.எம் அனுப்பவேண்டும் (விதி 12 (7)). டி.எம் மற்றும் எஸ்.பி.—யின் வருகை ஒரு சட்டம் மற்றும் ஒழுங்கு தேவையைவிட மிக அதிகம். இது சிறந்த அச்சுறுத்திக் கட்டுப்படுத்தும் மற்றும் நம்பிக்கையை வளர்க்கும் வழிமுறையாக இருக்கும்.

**அனைத்து வழக்குகளையும் பதிவு செய்தல்:** முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்யப்படுவதற்கு முன்னர் எஸ்.பி. மற்றும் டி.எம். பூர்வாங்க புலனாய்வை நடத்த வேண்டுமென்று(விதி 12 (1))மற்றும் (12 (2)) வழங்குகிறது. அனைத்து வழக்குகளும் பொருத்தமான பிரிவுகளில் பதிவு செய்யப்படவேண்டும். இந்த அறிக்கையில் அனைத்தும் அரசாங்க தரவுகளிலிருந்து காணக்கூடிய தரவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் கொலை, கொலைமுயற்சி, கற்பழிப்பு மற்றும் கற்பழிப்பு முயற்சி ஆகிய நீர்த்துப்போகச் செய்த வழக்குகளை எளிதில் வெளியில் எடுக்க முடியும். ழுதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை என்பது காவல் துறையினரின் திறனைப்பற்றிய ஒரு மோசமான கருத்து அல்ல என்றும், அனைத்து வழக்குகளையும் பதிவு

செய்ததற்காக அபராதம் விதிக்கப்படாது என்றும் அவர்களுக்கு கல்விகற்பிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

**பாதிக்கப்பட்டவர்கள், தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகளை உறுதிசெய்க:** அநேக குற்ற விடுதலைகள் நீதி தவறுவதற்கு, பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் பிறழாகமாறுவதே காரணம் என்று அதிகாரப்பூர்வ பதிவுகள் ஒப்புக்கொள்கின்றன. இதன் முதன்மைக் காரணம் சட்டத்தின் பிரிவு 15ஏ உள்ளார்ந்த பொருளுடன் அமுல்படுத்தப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு மீது நம்பிக்கை இருந்தால், அவர்கள் பிறழாக மாறமாட்டார்கள்.

**பாதிக்கப்பட்டவர்களின் வழக்கறிஞர்களை ஆதரிக்கவும்:** இதேபோல், பாதிக்கப்பட்டவர் தங்களுக்கு விருப்பமான வழக்கறிஞரைத் தேர்ந்தெடுக்கும் போது, மாநில ஒத்துழைப்பு ஓரளவில் குறைவாக இருக்கிறது. அவர்கள் அரசு ஊழியர்களா அல்லது தப்பிப்பிழைத்தவரால் தேர்ந்தெடுக்கப்பட்டார்களா என்பதைப் பொருட்படுத்தாமல், காவல்துறையினருக்கும் வழக்கறிஞர்களுக்கும் இடையில் நல்ல ஒத்துழைப்பு இருக்க வேண்டிய தேவை இருக்கிறது. குறைந்தபட்சம் ஒரு சட்ட உதவியாளரின் செலவுகளை ஈடுசெய்ய தனிப்பட்ட வழக்கறிஞர்களின் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும்.

**சரியான நேரத்தில் பணம் கொடுங்கள்:** செலவுகளை ஈடு செய்தல் மற்றும் நிவாரணம் ஈடு செய்தல் ஆகியவை கடினமாக இருக்கிறது. சில ஈடு செய்தல்கள் ஒருபோதும் நடப்பதில்லை. சில நிவாரணம் ஏழு நாட்களுக்குள் செலுத்தப்படவேண்டியது, ஏழு அல்லது எட்டு ஆண்டுகளுக்குமேல் தாமதமாகிறது. பாதிக்கப்பட்டவர்களில் பலர், குறிப்பாக கொடூரமான குற்றங்களால், பொருளாதாரரீதியாக நிலையற்ற அடுக்குகளிலிருந்து வருவதால், ஒவ்வொரு நாளும் பல வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றன. ஈடு செய்தல்கள் ஒரேநாளில் நடைபெறவேண்டும், மற்றும் மாநில அரசால் வரையப்பட்ட தமிழக இடையேற்பாடு திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலவரையறுக்குள் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு செய்யப்படவேண்டும்.

**அனைத்து அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படுவதை உறுதி செய்க:** சட்டத்தின் ஒவ்வொரு அறிக்கையும் ஒரு குறிப்பிட்டநோக்கத்திற்காகவும், வேறுபட்டமுடிவிற்காகவும் இருப்பதால், வெவ்வேறு நோக்கங்களைக் கொண்ட மற்றவற்றுடன் அவைகளை இணைக்கமுடியாது, கூடாது. உதாரணமாக, [விதி 7 (3)] இன் கீழ் புலனாய்வு அதிகாரி மேற்கொண்ட அனைத்து வழக்குகளின் நிலைப்பாட்டையும் காலாண்டு மீள்பார்வை செய்வதன் நோக்கமும் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் (எஸ்.ஜே.எச்.ஆர்)

பிரிவுலிருந்து பெறப்பட்ட தினசரி சட்டம் ஒழுங்குநிலை அறிக்கைகளிலிருந்து மிகவும் வேறுபட்டது. இதேபோல், விதி 7 (2)(ஏ) இன் கீழ் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதை உறுதிசெய்வதால் 60 நாட்களில் குற்றப்பத்திரிக்கைகள் தாக்கல் செய்யப்படுவதைத் தடுக்கும் தடைகளை நன்கு புரிந்துகொள்ளவும், பணியாளர்களை சிறப்பாக நிறுத்துவதற்கான முடிவெடுப்பதற்கான தகவல்களை பெறவும், சிறந்த தரமான இயக்க நடைமுறைகளை(எஸ்ஓபி) வடிவமைக்கவும் உதவும். விதி 12 (7)–ன் கீழ் உள்ள அறிக்கைகள் கிட்டத்தட்ட முதல்தகவல் அறிக்கைகளாகும், மேலும் அவை 'மெய்ம்மை தவறு' நடப்பதை குறைக்க வழிவகுக்கும், எனவே அவை அதிக செயல்பாட்டுதிறன் கொண்டவை.

**அனைத்து சட்டரீதியான மீள்பார்வைகளும் நடத்தப்படுவதை உறுதி செய்க:** மீள்பார்வைகள் நடுப்பகுதி திருத்தங்களுக்கு உதவுகின்றன மற்றும் பின்னாய்வுகளின் தேவையைத் தடுக்கின்றன. விதி 14 (2)–ன் கீழ் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் சிறப்பு அரசு வழக்குரைஞர்களின் (எஸ்.பி.பி) கட்டாய செயல்திறன் மீள்பார்வைகளை ஒழுங்குமுறையாக செய்தால், செயல்படாத எஸ்.பி.பி–களை விதி 4 (3)ன் கீழ் களையெடுக்க முடியும். தங்களால் அரசியல் நியமனம் பெற்றவர்கள் திறமையற்றவர்கள் மற்றும் கடமை தவறியவர்கள் மற்றும் கீழ்ப்படியாமை ஆகியவற்றில் குற்றவாளிகள் என்று பதிவு செய்வதில் ஏற்படும் குற்ற உணர்வை தவிர்ப்பது மட்டுமல்லாமல், மிக முக்கியமாக, குற்றத் தீர்ப்பு விகிதங்கள் உயர்ந்து நீதி வழங்கப்படும்.

**கட்டாய எஸ்.வி.எம்.சி, டி.வி.எம்.சி மற்றும் எஸ்.டி.வி.எம்.சி கூட்டங்களை நடத்துங்கள்:** அனைத்து வி.எம்.சி கூட்டங்களுக்கும் குறிப்பிட்ட நாள்காட்டி தேதிகளை வெவ்வேறுநிலைகளில் (கிராமசபா தேதிகள் போல்) நிச்சயிக்கவும். எஸ்.வி.எம்.சி கூட்டங்கள் நடத்தப்படாததால், பெரும்பாலான சட்டரீதியான மீள்பார்வைகளும் நடத்தப்படவில்லை. பெரும்பாலான எஸ்.டி.வி.எம்.சிக்கள் கூட அமைக்கப்படவில்லை. டி.வி.எம்.சி கூட்டங்களின் எண்ணிக்கையில் வரவேற்கத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், பெரும்பாலான சட்டரீதியான அறிக்கைகள் குழுவின் உறுப்பினர்களுடன் முன்கூட்டியே ஒரு புறம் இருப்பினும் பகிரப்படாமல் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இந்த கூட்டங்கள் அமல்படுத்துதல் கட்டமைப்பின் அத்தியாவசிய கூறுகளாகும்.

**அனைத்து சட்டரீதியான அறிக்கைகளையும் பொது தளத்தில்வைக்கவும்:** வன்கொடுமை தடுப்புசட்டத்தில் பலசட்டரீதியான அறிக்கைகள் உள்ளன. முதல்தகவல் அறிக்கை ஏற்கனவேநிகழ்நிலையில்(ஆன்லைனில்) உள்ளது. துகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் உள்ளார்ந்த பொருளில் தேவைப்படும் பிற அறிக்கைகளையும் நிகழ்நிலையில் கேட்காமலேயே வைக்கலாம். இந்தசட்டத்தின் கீழ் உள்ள இயங்கமைப்புகளின் செயல்பாட்டிற்கு இது அதிகவெளிப்படைத்தன்மையையும் அதிகசெயல்திறனையும் கொண்டுவரும்.

**சிறப்பு பரிந்துரைகள்**

**புலனாய்வுகள்**

செயல்திறனின் வீழ்ச்சி கவனிக்கப்படவேண்டிய சில முறைமை சார்ந்த சிக்கல்ககளை நிவர்த்தி செய்யவேண்டியதைக் குறிக்கிறது. கொடூரமான குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் கவனம் செலுத்துவதற்கான ஒரு புதிய வியூகத்தை ஏடிஜிபி ஷைலேஷ்குமார் யாதவ் வெளியிட்டுள்ளார் [நிகழ்ச்சிக் குறிப்புகள்22 அக்டோபர் 2019, (AD&TW PA1, DEPT).வளங்கள் அரிதாக இருப்பின், அது முன்னோக்கி செல்லும் பாதையாக இருக்க முடியும். ஆனால் தாமதத்திற்கான எழுத்துப்பூர்வ விளக்கங்கள் இல்லாத நிலையில், ஒரு அறிவார்ந்த யூகத்தை கூட செய்யமுடியாது.

1. விதி 7 [2 [ஏ]]—ல் கட்டாயப்படுத்தப்பட்ட எழுத்துப்பூர்வ அறிக்கைகள் எழுதப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும்.
2. குற்றப்பத்திரிகை தயாரிப்பதிலுள்ள உற்பத்தித்திறனின் 50% திடீர் வீழ்ச்சி [2001ல் 1,935 முதல் 2018ல் 963 வரை] நிவர்த்தி செய்யப்படவேண்டும்.
3. செயல்திறனின் வீழ்ச்சியோடு கூட முழுமையான வீதங்களுக்கும் மற்றும் தேசிய சராசரியையும் நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

**வழக்கு விசாரணைகள்**

1. அனைத்து வழக்குகளும் முன்னுரிமையில், தினசரி அடிப்படையில் விசாரிக்கப்படவேண்டும்.
2. குற்ற விடுதலையான அனைத்து வழக்குகளும் தானாக வழக்கமான ஒன்றாக மேல்முறையீடு செய்யப்படவேண்டும்.
3. இந்திய உச்சநீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் அமைக்கப்பட்ட மாநில மற்றும் மாவட்ட உயர்மட்டக் குழுவின் முடிவுகளின் அடிப்படையில் செயல்படாத சிறப்பு அரசு வழக்குரைஞர்கள் மற்றும் புலனாய்வு அதிகாரிகள் அகற்றப்படவேண்டும் [குஜராத் மாநிலம் எதிராக கிஷன்பாய்] [2008—ல் மாநில மற்றும் மாவட்ட அளவில் தமிழக அரசின் குற்றவியல் மேல்முறையீட்டு எண் 2008—ன் 1485] (vide Ms) No.956, Home Pol) 12] துறை. தேதி 23.12.2015 மற்றும் 24.03.2016].
4. சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் பிரத்தியேக சிறப்பு நீதிமன்றங்களில் சரியான தகுதியுள்ள நீதிபதிகள் மட்டுமே நியமிக்கப்படுவார்கள், இதனால் சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் 'பெரும்பாலான வழக்குகளை

அற்பமான காரணங்களுக்காக விடுவிக்காது' (குற்றவழக்குத் தொடர்வு இயக்குநர் ஐ.சி) டி.ஆர்.எஸ். ராமமூர்த்தி, மீள்பார்வைக் கூட்டம் 26 மார்ச் 2019 அன்று நடைபெற்றது).

**செலவு ஈடு செய்தல்(TAME)**

1. செலவு ஈடு செய்தலின் தேங்கிக் கிடப்பதை துடைக்க பட்ஜெட்டில் ஒரு சிறப்பு ஒதுக்கீட்டை செய்யுங்கள், உடனடியாக தேங்கிக்கிடப்பதை துடைக்கவும்.
2. எதிர்காலத்தில், முந்தைய ஆண்டில் TAME—க்காக செலவிடப்பட்ட உண்மையான தொகையில் 120% பட்ஜெட் ஒதுக்கீடுகளை செய்யுங்கள்.
3. எந்தவொரு வழக்கிலும் செலவு செய்த மூன்று நாட்களுக்கு மிகாமல் ஒரேநாளில் தொகை வழங்கப்படுவதை உறுதி செய்யவேண்டும். வேறுவார்த்தைகளில் கூறுவதானால், விதி(11 (6))—ஐ உள்ளார்ந்த பொருளில் பின்பற்றவும்.
4. காலாண்டு அல்லது இடைவெளியில் அல்லது மோசமான, நீண்ட அல்லது ஒழுங்கற்ற, தற்காலிக இடைவெளியில் பணம் வழங்குவதை விடுத்து ஒன்றாக இணைத்துச்செய்யும் பணம் கொடுக்கும் நடைமுறையை நிறுத்துங்கள்.

**புனர்வாழ்வு**

1. செலவுஈடு செய்தலின் தேங்கிக்கிடப்பதை துடைக்கபட்ஜெட்டில் ஒரு சிறப்பு ஒதுக்கீட்டை செய்யுங்கள், உடனடியாக தேங்கிக்கிடப்பதை துடைக்கவும்.
2. எதிர்காலத்தில், முந்தைய ஆண்டில்TAME—க்காக செலவிடப்பட்ட உண்மையான தொகையில் 120% பட்ஜெட் ஒதுக்கீடுகளை செய்யுங்கள்.
3. ஒருவாரத்திற்குள் தொகை வழங்கப்படுவதை உறுதிசெய்க. வேறுவார்த்தைகளில் கூறுவதானால், விதி 12 (4) மற்றும் விதி 15 (1) இன் கீழ் மாநில இடையேற்பாடு திட்டத்தை உள்ளார்ந்த பொருளில் பின்பற்றவும்.
4. காலாண்டு அல்லது இடைவெளியில் அல்லது மோசமான, நீண்ட அல்லது ஒழுங்கற்ற, தற்காலிக இடைவெளியில் பணம் வழங்குவதை விடுத்து ஒன்றாக இணைத்துச் செய்யும் பணம் கொடுக்கும் நடைமுறையை நிறுத்துங்கள்.
5. நிலம் மற்றும் வீடு தொடர்பான நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக, ஒரு நிலவங்கியைத் தொடங்கி, ஒவ்வொரு மாவட்டத்திலும் சில ஆயத்த அடுக்குமாடி குடியிருப்புகளை இருப்புவைக்கவும்.

**மீள்பார்வைகள் மற்றும் எடுத்த நடவடிக்கை குறித்த அறிக்கைகள்**

இந்த சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் செயல்திறன் குறித்து அவ்வப்போது மீள்பார்வைகள் இல்லை என்பதை பன் மடங்கான தகவல் அறியும் உரிமைகோரிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன. ஆகவே, அவர்களிடம் 'சரியான ஆர்வமும் புரிதலும்' (விதி 13 (1)) உள்ளதா, அல்லது திறமையாவது உள்ளதா என்பதை அணுகுவது கடினமாகிறது. தண்டனை குற்றத் தீர்ப்புகளின் படி, அவர்கள் நிச்சயமாக இரண்டையும் கொண்டிருக்கவில்லை. ஆனாலும், அவர்களில் ஒருவர் கூட நீக்கப்படவில்லை.

1. குாலவரையறை மீள்பார்வை செய்யப்படவேண்டும், திறமையற்ற அதிகாரிகள் அகற்றப்படவேண்டும். எஸ்.பி.பி மற்றும் புலனாய்வு அதிகாரியைப் பொறுத்தவரை, இது உயர்மட்ட மாவட்ட அளவிலான குழுக்களின் முடிவுகளின் அடிப்படையிலானது (கிஷன்பாய் வழக்கில் இந்திய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து) விதி 12 (4) இல் குறிப்பிடப்பட்டுள்ள தரநிலைகள், தமிழ்நாடு இடையேற்பாடு திட்டத்தை சரியான நேரத்தில் கடைபிடிப்பது மற்றும் சட்டத்தின் பிரிவு 15ஏ ஆகியவற்றின் அடிப்படையில் TAME வழங்கல், நிவாரணம், மறுவாழ்வு மற்றும் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் மற்றவர்களுக்கும் இது செய்யப்படலாம்.
2. விதி 13 (2)—ல் குறிப்பிடப்பட்டுள்ள தரங்களுக்கு ஏற்ப, வன்கொடுமைக்கு எளிதில் பாதிக்கப்படக்கூடிய கிராமங்கள் மற்றும் தாலுகாக்களில் பணியமர்த்தப்பட்ட அதிகாரிகள் இணக்கமாக செயலாற்ற வேண்டும். அனைத்து மட்டங்களிலும், குறிப்பாக காவல்துறை பதவியில், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினரின் போதுமான பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும். இதுகுறித்து கோரப்பட்ட தகவல்கள் மறுக்கப்பட்டன, ஆனால் உள்கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடுகளும் கூட இருப்பதாகத் தெரியவில்லை.

**மாநில விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள்**

இந்தச் சட்டத்தை செயல்படுத்துவதில் எஸ்.வி.எம்.சி—க்கள் முழு மாநில அமைப்புகளுக்குமான தொனியை அமைத்தன. ஏனவே தேவையான அனைத்து மீள்பார்வை அறிக்கைகள் மற்றும் செயல்திறன் மதிப்பீடுகள் ஏற்கனவே செய்யப்பட்டு வருவதால் அவை கால முறைப்படி தவறாமல் நடத்தப்படவேண்டும்.

1. ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் நிர்ணயித்த தேதிகளில் எஸ்.வி.எம்.சி கூட்டங்களை நடத்துங்கள்.

2. ஒவ்வொரு ஆண்டும் 28 ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் எஸ்.வி.எம்.சி கூட்டங்களை நடத்துவது ஒரு வழியாகும்.
3. வழக்குகளின் நிலை [புலனாய்வு, வழக்குவிசாரணை, படிகள் மற்றும் செலவுஈடு செய்தல்], எஸ்பிபி—க்கள் மற்றும் ஐஓக்—களின் செயல்திறன் [மீள்பார்வை, மற்றும் அவர்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களை சரியான நேரத்தில் மற்றும் போதுமான இழப்பீடு மற்றும் மீட்டெடுப்புடன் கட்டியெழுப்புதல்] பற்றிய அனைத்து மீள்பார்வை அறிக்கைகளும் உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே கிடைக்கின்றன என்பதை உறுதிப்படுத்தவும்.

**மாவட்ட விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள்**

டி.வி.எம்.சி இந்தச் சட்டத்தை செயல்படுத்துவதைக் கண்காணிக்கும் முக்கிய மாநில வழிமுறைகளில் ஒன்றாகும்.

1. காலாண்டு டி.வி.எம்.சி கூட்டங்கள் நிர்ணயித்த தேதிகளில் முன்னுரிமையாக ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் [21—ல்] மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ஒரே மாதிரியாக தவறாமல் நடத்தப்படவேண்டும், இது ஒரு வாரம் கழித்து நடைபெறும் அவர்களின் மாநில விவாதங்களுக்கான கலந்துரையாடலுக்கு ஊட்டமளிக்கும்.
2. அனைத்து சட்டரீதியான அறிக்கைகளும் டி.வி.எம்.சி உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே வழங்கப்படவேண்டும் [வழக்குகளின் நிலை — புலனாய்வு, வழக்குவிசாரணை மற்றும் TAME, SPP—கள் மற்றும் IO—களின் செயல்திறன் மீள்பார்வை, மற்றும் அவர்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களை சரியான நேரத்தில் மற்றும் போதுமான இழப்பீடு மற்றும் மீட்டெடுப்புடன் கட்டியெழுப்புதல்].
3. அனைத்து டி.வி.எம்.சி உறுப்பினர்களும் அவர்களின் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் கடமைகள், அவர்கள் பெறதகுதியான அறிக்கைகள் மற்றும் மீள்பார்வைகள் மற்றும் அவர்களின் கருத்துக்கள் எவ்வாறு பதிவு செய்யப்படும் என்பது உள்ளிட்ட தகவல்கல் முன்கூட்டியே பயிற்றுவிக்கப்பட்டிருக்கவேண்டும்.
4. அனைத்து டி.வி.எம்.சிகளும் 2020—ம் ஆண்டில் மறுசீரமைக்கப்படவேண்டும். தகுதியான அரசு சாரா உறுப்பினர்கள் விண்ணப்பிக்க பரந்த விளம்பரம் வழங்கப்படவேண்டும்.

**துணைப்பிரிவு விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு**

1. சமூகமட்டத்தில் இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதைக் கண்காணிப்பதற்கான முக்கிய வழிமுறையாகும்.
2. காலாண்டு கூட்டங்கள் கிராமசபா கூட்டங்களைப்போல் நிலையான தேதிகளில் தவறாமல்ந டத்தப்படவேண்டும். மாவட்ட டி.வி.எம்.சி கூட்டங்கள் கூடுவதற்கு ஒரு வாரம் முன்னதாக அவை நடத்தப்படலாம், அதாவது 14 ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில்.
3. அனைத்து சட்டரீதியான அறிக்கைகளும் உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே வழங்கப்படவேண்டும்.
4. அனைத்து உறுப்பினர்களும் தங்களின் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் கடமைகள், அவர்கள் பெறதகுதியுடைய அறிக்கைகள் மற்றும் மதிப்புரைகள் மற்றும் அவர்களின் கருத்துக்கள் எவ்வாறு பதிவு செய்யப்படும் என்பது உள்ளிட்ட அனைத்தும் பயிற்றுவிக்கப்பட்டிருக்கவேண்டும்.
5. அனைத்து எஸ்.டி.வி.எம்.சிகளும் 2020 ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப்படவேண்டும். தகுதிவாய்ந்த பஞ்சாயத்து உறுப்பினர்கள் தாங்கள் முன்னாள் அலுவலர்கள் என்பதை அறிந்து கொள்ளவும், சந்திப்பு தேதிகள் மற்றும் பிறமுன்னேற்றங்கள் குறித்து அறிந்து கொள்ளவும் பரந்தவிளம்பரம் வழங்கப்படவேண்டும்.

**உயிர் பிழைத்தவர் மற்றும் சாட்சி பாதுகாப்பு**

உயிர் பிழைத்தவர்கள், சாட்சிகள் மற்றும் தகவல் கொடுப்பவர்களின் பாதுகாப்பு என்பது வன்கொடுமை தடுப்பு திருத்தச் சட்டத்தின் அத்தியாயம் IVA, பிரிவு 15A—ன் முக்கியசட்டதிருத்தமாகும். இது நீதியின் முடிவுகளுக்குமட்டுமல்லாமல், சட்டத்தின் ஆட்சியில் சமுதாயத்தில் விலக்கப்பட்ட சமூகங்களின் நம்பிக்கையை அரசு எந்திரங்கள் நடுநிலைமையோடு தக்கவைத்துக்கொள்ள உள்ளார்ந்த பொருளில் செயல்படுத்தப்படவேண்டும்.

1. முதல் தகவல் அறிக்கை / புகாரில் ‘சம்பந்தப்பட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்கள்’ (என்.ஜி.ஓ) பெயரிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து, தலையீட்டின் அனைத்து நிலைகளிலும் அவற்றை வளையத்திற்குள் வைத்திருங்கள். இந்த நபர்களை உயிர்பிழைத்தவர்கள், நீதிமன்றங்கள் மற்றும் காவல்துறையினர் அவர்களின் கடமைகளை சிறப்பாக நிறைவேற்ற அவர்களுக்கு வழங்கப்படும் உதவி ஆகியவற்றில் நீதிமன்ற நண்பராக கருதவேண்டும்.

2. நீதிமன்றங்கள் அவ்வப்போது பிறப்பிக்கும் உத்தரவுகள் எழுத்துப்பூர்வமாக இருக்கவேண்டும், மேலும் துணைப்பிரிவு, மாவட்ட மற்றும் மாநில அளவில் விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டங்களில் விவாதிக்கப்படவேண்டும்.

## 1. தமிழ்நாட்டில் பட்டியல் வகுப்பினர், பட்டியல் பழங்குடியினர்

இந்தியாவில் பரப்பளவு அடிப்படையில் 11வது பெரிய மாநிலம் தமிழ்நாடு. மக்கள் தொகை அடிப்படையில் 6வது பெரிய மாநிலம். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையின்படி நாட்டின் மொத்தமுள்ள பட்டியல் சாதிமக்களில் (SC) கிட்டத்தட்டப் பாதிப்பேர் 4 மாநிலங்களில் உள்ளனர். இந்தியாவின் மொத்த SC மக்களில் 7.2 சதவீதத்தினருடன் தமிழகம் அந்த 4 மாநிலங்களில் நான்காவது இடத்தில் உள்ளது. உத்தரப்பிரதேசத்தில் 20.5 சதவீதத்தினரும், அதையடுத்து மேற்குவங்கத்தில் 10.7 சதவீதத்தினரும், பீகார் மாநிலத்தில் 8.2 சதவீதத்தினரும் உள்ளனர். இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் ST மக்கள் 16.6 சதவீதம் உள்ளனர். 2011ன் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 7 கோடியே 21 லட்சம். இதில் ST மக்கள் எண்ணிக்கை 1 கோடியே 44 லட்சம் 20.01%.

இந்தியாவில் பட்டியல் பழங்குடிகள் (ST) எண்ணிக்கை 10 கோடியே 45 லட்சம் (மொத்த மக்கள் தொகையில் 8.6%). சுமார் 8 லட்சம் (7,94,697) ST மக்களைக் கொண்டுள்ள தமிழகம் இந்தியாவின் ST மக்கள் தொகையில் 23வது இடத்தில் உள்ளது. 32 மாவட்டங்களைக் கொண்ட தமிழ்நாட்டின் 20 மாவட்டங்களில் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். தமிழ்நாட்டு மக்கள் தொகையில் ST மக்கள் விகிதம் 1.1% ஆகும்.

அட்டவணை 1 : தமிழ்நாட்டில் SC/ST மக்கள் தொகை 2011)

| Sl | | SC | | ST | | மொத்த தமிழ்நாடு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தொகை | % | தொகை | % | தொகை | % |
| 1 | மொத்தம் | 14,438,445 | 20.01% | 794,697 | 1.10 % | 72,147,030 | 100% |
| 2 | ஆண்கள் | 7,204,687 | 49.90% | 401,068 | 50.47% | 36,137,975 | 50.08% |
| 3 | பெண்கள் | 7,233,758 | 50.10% | 393,629 | 49.53% | 36,009,055 | 49.91% |
| 4 | நகர்ப்புறம் | 4,962,970 | 34.37% | 134,417 | 16.91% | 34,917,440 | 48.39% |
| 5 | கிராமப்புறம் | 9,475,475 | 65.63% | 660,280 | 83.09% | 37,229,590 | 51.61% |

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள SC/ST மக்களில் 76,27,387 பேர் பெண்கள். 76,05,755 பேர் ஆண்கள். பாலினவிகிதாச்சாரப்படி பெண்கள்தான் ஆண்களைவிட அதிகம். SC/ST மக்களில்சுமார் 67 சதவீதத்தினர் கிராமப் பகுதிகளில் வசிக்கின்றனர்.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் மொத்தமுள்ள SC மக்களில் மிக அதிகமான சுமார் 36 சதவீதத்தினர், விழுப்புரம் (10,15,716), காஞ்சிபுரம் (9,48,081), வேலூர் (8,21,646), சென்னை (7,79,667) ஆகிய மாவட்டங்களில் உள்ளனர். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்தமுள்ள ST மக்களில் மிக அதிகமானவர்கள் சேலம் (1,19,369), திருவண்ணாமலை (90,954), வேலூர் (72,955), விழுப்புரம் (74,859), தருமபுரி (63,044) ஆகிய மாவட்டங்களில் உள்ளனர்.

## 2. SC/ST மக்களுக்கு எதிரான வன்கொடுமை குற்றங்களின் நிலை

*சட்டத்தின் பிரிவு 3, சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்களை பட்டியலிடுகிறது. 2016 திருத்தத்தால் மேலும் குற்றங்கள் அடையாளம் காணப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளன.*

இந்தச் சட்டம் தொடர்பான புள்ளிவிவரத் தகவல்களைச் சேகரிப்பதற்காக, ஒவ்வொரு அலகுக்கும் ஒரு புள்ளிவிவர ஆய்வாளர் இணைக்கப்பட்டுள்ளார், அவருக்கு உதவ எஸ்.ஜே.எச்.ஆர் அலகுகளின் ஊழியர் உள்ளார். (ஆண்டு அறிக்கை 2016)

**அட்டவணை 2a : SC/ST மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் முக்கிய குற்றங்கள் 2001–2010**

| வ. எ | குற்றங்கள் | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | குடியுரிமைபாதுகாப்பு சட்டம்,1955 | 22 | 79 | 202 | 71 | 12 | 84 | 6 | 3 | 2 | 3 |
| 2 | கொலை | 38 | 34 | 16 | 25 | 30 | 26 | 39 | 31 | 27 | 22 |
| 3 | கொலைமுயற்சி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 4 | கற்பழிப்பு | 29 | 34 | 30 | 25 | 21 | 22 | 30 | 19 | 11 | 11 |
| 5 | கற்பழிப்புமுயற்சி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 6 | பெண்கள்மீதானதாக்குதல்அடக்கத்தைசீற்றப்படுத்துதல் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 7 | கடத்தல் | 16 | 10 | 6 | 2 | 2 | 3 | 3 | 2 | 8 | 1 |
| 8 | பின்தொடர்தல் | – | – | – | – | – | – | – | – | – | – |
| 8 | வழிப்பறி | 5 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 10 | கொள்ளை | 1 | 2 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 3 |
| 11 | எரியூட்டல் | 21 | 10 | 0 | 3 | 11 | 9 | 15 | 8 | 4 | 4 |
| 12 | கடுமையாககாயப்படுத்துதல் | 424 | 253 | 175 | 163 | 142 | 147 | 206 | 152 | 110 | 149 |
| 13 | கலவரம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 14 | பிறஐபிசிகுற்றங்கள் | 1105 | 1064 | 350 | 196 | 162 | 255 | 397 | 221 | 107 | 191 |
| 15 | SC/STமொத்தம்(PoA) | 684 | 688 | 782 | 698 | 839 | 469 | 1064 | 1195 | 1064 | 1280 |
| 16 | SC/STமொத்தம் | 2345 | 2174 | 1562 | 1183 | 1219 | 1015 | 1760 | 1632 | 1334 | 1664 |

*ஆதாரம்: தேசியகுற்றஆவணக் காப்பகம்; (பின்தொடர்வதுஒருதனிகுற்றமாக 2016 வரைகண்காணிக்கப்படவில்லை)*

| அட்டவணை 2ஆ : பட்டியல் சாதியினர் (SC) மற்றும் பட்டியல் பழங்குடி (ST) மக்களுக்கு எதிராக செய்யப்படும் முக்கிய குற்றங்கள் 2011-2018 | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ.எ | குற்றங்கள் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
| 1 | குடியுரிமை பாதுகாப்பு சட்டம்,1955 | 12 | 9 | 1 | 8 | 1 | 4 | 1 | 6 |
| 2 | கொலை | 29 | 38 | 29 | 44 | 49 | 57 | 51 | 46 |
| 3 | கொலைமுயற்சி | 0 | 0 | 0 | 36 | 69 | 78 | 59 | 46 |
| 4 | கற்பழிப்பு | 14 | 36 | 30 | 33 | 44 | 41 | 58 | 73 |
| 5 | கற்பழிப்புமுயற்சி | 0 | 0 | 0 | 1 | 5 | 1 | 0 | 2 |
| 6 | பெண்கள் மீதான தாக்குதல் அடக்கத்தை சீற்றப்படுத்துதல் | 0 | 0 | 0 | 13 | 46 | 25 | 42 | 11 |
| 7 | கடத்தல் | 7 | 4 | 5 | 7 | 12 | 8 | 8 | 9 |
| 8 | பின்தொடர்தல் | - | - | - | - | - | 1 | 4 | 0 |
| 8 | வழிப்பறி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 10 | கொள்ளை | 4 | 2 | 12 | 1 | 2 | 3 | 0 | 1 |
| 11 | எரியூட்டல் | 4 | 6 | 6 | 16 | 14 | 2 | 5 | 3 |
| 12 | கடுமையாக காயப்படுத்துதல் | 221 | 208 | 271 | 4 | 3 | 5 | 12 | 10 |
| 13 | கலவரம் | 0 | 0 | 0 | 39 | 186 | 113 | 171 | 108 |
| 14 | நிற ஐபிசி குற்றங்கள் | 108 | 223 | 174 | 398 | 1215 | 888 | 238 | 459 |
| 15 | SC/ST மொத்தம்(PoA) | 1015 | 1148 | 1340 | 1504 | 1760 | 1306 | 1383 | 1422 |
| 16 | SC/ST மொத்தம் | 1414 | 1674 | 1868 | 1564 | 1812 | 1310 | 1384 | 1428 |
| *ஆதாரம்: தேசிய குற்ற ஆவணக்காப்பகம்; (பின்தொடர்வது ஒரு தனி குற்றமாக 2016 வரை கண்காணிக்கப்படவில்லை)* | | | | | | | | | |

மேலே உள்ள அட்டவணைகள் குற்றங்களை பதிவு செய்வதை மறைப்பதற்கான தெளிவான சான்றுகளாகும். 2013 வரை, கொலை மற்றும் கற்பழிப்பு இரண்டும் மிகவும் 'வெற்றிகரமான குற்றங்கள்' — அதுவரை 'கொலை முயற்சி' அல்லது 'கற்பழிப்பு முயற்சி' என்ற ஒரு வழக்கு கூட இல்லை. 'கற்பழிப்பு முயற்சிகள்' எண்ணிக்கை ஒற்றை இலக்கங்களில் உள்ளன, மேலும் 'அவரது தன்மானத்தை மானபங்கப்படுத்தும் நோக்கத்துடன் பெண்கள் மீது தாக்குதல்'

செய்வதில் ஒரு ஏற்றம் இருக்கிறது. தலித் மற்றும் ஆதிவாசி பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மிகச்சிறந்த அளவில் அற்பமாக்கப்படுகிறது, அல்லது பெரும்பாலும் சாதாரணமானதாக ஆக்கப்படுகிறது என்பதற்கு இது தெளிவான குறியீடுகளாகும்.

தரவுகள் சில குழப்பமான நீண்டகால போக்குகளை வெளிப்படுத்துகிறது:

1. குடிமை உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை.

2. கொலை வாரத்திற்கு ஒன்றுக்குமேல் அதிகரித்துவருகிறது.

3. கடந்த சில ஆண்டுகளில் கற்பழிப்புகள் அதிவேகமாக அதிகரித்துவருகின்றன. 2016—ல் 41, 2017—ல் 56, மற்றும் 2018—ல் 73 — 37% மற்றும் 23% முறையே அதிகரித்திருக்கிறது, மற்றும் ஒட்டுமொத்ததிரளாக இரண்டு ஆண்டுகளில் 78% அதிகரித்திருக்கிறது.

4. கடந்த நான்கு ஆண்டுகளில் கலவரம் வாரத்திற்கு இரண்டுக்கும் மேலாக அதிகரித்துவருகிறது, 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு இரண்டு நாட்களுக்கும் ஒரு கலவரம் நடைபெற்றுள்ளது.

5. ஒரு வினோதமானபோக்கு என்னவென்றால், 2014—க்கு பின்னர் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் மட்டுமே பதிவு செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை, 2014—ல் 0 முதல் 912, 2015ல் 115, 2016ல் 149, 2017ல் 93 மற்றும் 2018—ல் 78 என்று செல்கிறது.

வழக்கமாக, பதிவு செய்யப்பட்ட குற்றங்கள் மற்றும் தண்டனைகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு பாராட்டப்பட வேண்டியது. ஆனால் இந்த விஷயத்தில் அது அவ்வாறு இல்லை, ஏனென்றால், அவ்வாறு செய்ய முடியாதபோது மட்டுமே வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன என மேலே உள்ள புள்ளிவிவரங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

குடிமை உரிமைகள் பாதுகாப்புச்சட்டம் 1955—ன் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றங்களான வன்முறையில், கடத்துதல் மற்றும் கடத்தல், கூட்டுக்கொள்ளை, வழிப்பறி, தீவைப்பு, கடுமையான காயங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை 2011 முதல்படிப்படியாகக் குறைந்துவிட்டன. ஆனால் கொலை, கற்பழிப்பு, கலவரம், பிற ஐபிசி குற்றங்கள் போன்ற முக்கிய குற்றங்கள் ஒரு தலைகீழ் போக்கைக் காட்டுகின்றன. இது உலகளாவிய குற்ற முறைமைகளுக்கு மிகவும் ஒவ்வாத ஒன்றாகும். கண்ணுக்குத் தெரியாத குற்றங்களை பதிவு செய்வதும், பதிவை மறுக்கமுடியாதவற்றை மட்டுமே பதிவு செய்வதும் செயலில் ஒடுக்குமறையை வெளிப்படுத்துகிறது.

2018 ஆம் ஆண்டிற்கான நிகழ்நிலை அறிக்கையின்படி, தமிழகத்தில் பட்டியல் சமூகங்களுக்கு எதிரான குற்றங்களாக மொத்தம் 1,428 குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன, இது 2019–ல் பதிவு செய்யப்பட்ட 1,384 குற்றங்களைவிட 3% அதிகரித்துள்ளது. கொலை மற்றும் கொலை முயற்சி 10% குறைந்துள்ளது. கற்பழிப்பு சம்பவங்கள் 23% அதிகரித்துள்ளன. நிற ஐபிசி குற்றங்கள் 93% அதிகரித்துள்ளன. இது முடிந்தவரை இது சட்டத்தை செயல்படுத்தாததற்கான ஒரு வலுவான குறியீடாகும்.

## 3.வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் விதிகளின்படி வழக்குகளை பதிவு செய்தல்

### 3.1. ஒரு பார்வை

2001 முதல் 2018 வரையிலான தரவுகளில் அதிக எண்ணிக்கையிலான பெரிய குற்றங்களான கொலை[631] மற்றும் கடுமையான காயம் [2,655] பதிவு செய்யப்பட்டுள்ளன. கற்பழிப்பு முயற்சி மற்றும் கொலை முயற்சி போன்ற குற்றங்கள் பதிவு செய்யப்படவில்லை, மற்றும் அவரது தன்மானத்தை புண்படுத்தும் நோக்கத்துடன் பெண்கள் மீதானதாக்குதல் சமீபகாலம் வரைபதிவு செய்யப்படவில்லை. பெரும்பாலான குற்றங்கள்[7,751] பிற ஐபிசி குற்றங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. பட்டியல் சமூகங்களுக்கு, குறிப்பாக ஆதிவாசிகளுக்கு[எஸ்.டி] எதிரான குறைந்த பதிவுகள் குற்றம் இல்லாததைக் காட்டுகிறது என்பதைக்காட்டிலும் பரவலாக குறைவாகப் பதிவு செய்யப்படுகிறது என்று பொருள்படுகிறது.




சுவாரஸ்யமாக, இந்தச்சட்டத்தின் விதி 18–ன்கீழ் தமிழக அரசு தயாரித்த 2011 முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான ஆண்டு அறிக்கைகள், வழக்குகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பிற்குக் காரணம் வழக்குகள் இலவசமாக பதிவு செய்யப்படுவதாலும், மற்றும் பணநிவாரணம் உட்படசட்டத்தின் பல்வேறு விதிகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை அதிகரிப்பதாக கூறுகிறது.

2003, 2006, 2009, 2011, 2014 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட குற்றங்களின் குறைவு என்பதன் பொருள் அந்த

ஆண்டுகளில் விழிப்புணர்வு அல்லது பணநிவாரணம் குறைந்து வருவதா என்பது தெளிவாக இல்லை. இல்லையெனில், தப்பிப்பிழைத்தவர்கள், சமூகம் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இது அவதூறு விளைவிப்பதாகும், மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள காவல்துறை கண்காணிப்பாளர் ஒரு குறிப்பிட்ட இடபுலனாய்க்குப்பிறகு (விதி 12 2) எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யக்காரணமாக இருப்பதால், அவர்கள் ஊழலிலும் கூட்டுச்சதியிலும் இருப்பதாக ஒப்புக்கொள்வது போலாகிறது.

**3.2 தமிழ்நாட்டின் தரவரிசையுடன் இந்தியாவில் எஸ்.சி மற்றும் எஸ்.டி. மக்களுக்கு எதிரான சம்பவங்கள்(1995 – 2018):**

இந்தியாவுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் பட்டியல் பழங்குடியினர் வெறும் (0.76%) 21 வது தரவரிசை) மற்றும் மாநிலத்தில் 1% மட்டுமே உள்ளனர். பட்டியல் சாதியினர் மாநிலத்தில் 20% ஆக உள்ளனர். ஆனால் தமிழ்நாடு தேசிய அளவில் மொத்தத்தில் 7.7% மற்றும் மக்கள் தொகை அடிப்படையில் நான்காவது இடத்தில் உள்ளது.

எஸ்சி மற்றும் எஸ்டிகளுக்கு எதிராகமொத்தம் 37,084 குற்றங்கள் 1995 முதல் 2018 வரை தமிழகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 36,111 எஸ்.சி.க்களுக்கு எதிரான குற்றங்களும், 973 எஸ்.டி.க்களுக்கு எதிரான குற்றங்களும் ஆகும். 2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பட்டியல் சமூகங்களுக்கு எதிராக அதிக எண்ணிக்கையிலான குற்றங்கள்(2,345) பதிவாகியுள்ளன. ழுதிவு செய்யப்பட்ட மிகக்குறைந்த எண்ணிக்கையானது(998) 1999–ல் இருந்தது. ழுதிவு செய்யப்பட்ட குற்றங்களில் நிறைய ஏற்ற இறக்கங்கள் உள்ளன. இது சில ஆண்டுகளில் சிறப்புகவனம் செலுத்தப்படுவதைக் குறிக்கிறது. மற்றவைகளில் அவ்வளவாக இல்லை.

மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழகத்தின் தேசிய குற்ற ஆவணக் காப்பக அறிக்கை (என்.சி.ஆர்.பி) நிலைப்பாட்டை பகுப்பாய்வு செய்யும்போது(குறைவுசிறந்தது), 1996ல் எஸ்.சி.க்களுக்கு எதிராக பதிவுசெய்யப்பட்ட குற்றங்கள்(4), 1997ல் இந்தியாவில் எஸ்.டி.களுக்கு எதிரானது(6). எஸ்.சி.க்களுக்கு எதிரான குற்றங்களில் மிகக்குறைந்த தரவரிசை 2016–ல் மற்றும் 2017 ல் (11) ஆகவும், 2001ல் இந்தியாவில் எஸ்.டி.க்களுக்கு எதிரான குற்றங்கள் (17) ஆகவும் இருந்தது. பட்டியல் சாதியினருக்கு எதிரான தேசிய அளவிலான குற்றங்களுக்கு தமிழகம் தொடர்ந்து அதன் மக்கள்தொகை பங்கைவிட குறைவாகவே பங்களிப்பு செய்கிறது.

| அட்டவணை 3: SC/ST– களுக்கு எதிரான குற்றங்கள் (995 –2018) | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ.எ | ஆண்டு | தமிழ்நாட்டின் மொத்த நிகழ்வுகள் | | | இந்தியாவின் மொத்த நிகழ்வுகள் | | | TN Ranking | | PCIT | |
| | | (SC) | (ST) | மொத்தம் | (SC) | (ST) | மொத்தம் | (SC) | (ST) | (SC) | (ST) |
| 1 | 1995 | 1293 | 36 | 1329 | 32,996 | 1 | 1995 | 1293 | 36 | 1329 | 32,996 |
| 2 | 1996 | 1812 | 85 | 1897 | 31,440 | 2 | 1996 | 1812 | 85 | 1897 | 31,440 |
| 3 | 1997 | 1403 | 227 | 1630 | 27,944 | 3 | 1997 | 1403 | 227 | 1630 | 27,944 |
| 4 | 1998 | 1562 | 31 | 1593 | 25,638 | 4 | 1998 | 1562 | 31 | 1593 | 25,638 |
| 5 | 1999 | 883 | 105 | 988 | 25,093 | 5 | 1999 | 883 | 105 | 988 | 25,093 |
| 6 | 2000 | 1296 | 9 | 1305 | 25,455 | 6 | 2000 | 1296 | 9 | 1305 | 25,455 |
| 7 | 2001 | 2336 | 9 | 2345 | 33,501 | 7 | 2001 | 2336 | 9 | 2345 | 33,501 |
| 8 | 2002 | 2097 | 77 | 2174 | 33,507 | 8 | 2002 | 2097 | 77 | 2174 | 33,507 |
| 9 | 2003 | 1495 | 67 | 1562 | 26,252 | 9 | 2003 | 1495 | 67 | 1562 | 26,252 |
| 10 | 2004 | 1156 | 27 | 1183 | 26,887 | 10 | 2004 | 1156 | 27 | 1183 | 26,887 |
| 11 | 2005 | 1206 | 13 | 1219 | 26,127 | 11 | 2005 | 1206 | 13 | 1219 | 26,127 |
| 12 | 2006 | 991 | 24 | 1015 | 27,070 | 12 | 2006 | 991 | 24 | 1015 | 27,070 |
| 13 | 2007 | 1743 | 17 | 1760 | 30,031 | 13 | 2007 | 1743 | 17 | 1760 | 30,031 |
| 14 | 2008 | 1618 | 14 | 1632 | 33,615 | 14 | 2008 | 1618 | 14 | 1632 | 33,615 |
| 15 | 2009 | 1312 | 22 | 1334 | 33,594 | 15 | 2009 | 1312 | 22 | 1334 | 33,594 |
| 16 | 2010 | 1631 | 33 | 1664 | 32,712 | 16 | 2010 | 1631 | 33 | 1664 | 32,712 |
| 17 | 2011 | 1391 | 23 | 1414 | 33,719 | 17 | 2011 | 1391 | 23 | 1414 | 33,719 |
| 18 | 2012 | 1647 | 27 | 1674 | 33,655 | 18 | 2012 | 1647 | 27 | 1674 | 33,655 |
| 19 | 2013 | 1845 | 23 | 1868 | 39,408 | 19 | 2013 | 1845 | 23 | 1868 | 39,408 |
| 20 | 2014 | 1546 | 18 | 1564 | 47,064 | 20 | 2014 | 1546 | 18 | 1564 | 47,064 |
| 21 | 2015 | 1782 | 30 | 1812 | 45,003 | 21 | 2015 | 1782 | 30 | 1812 | 45,003 |
| 22 | 2016 | 1291 | 19 | 1310 | 40,801 | 22 | 2016 | 1291 | 19 | 1310 | 40,801 |
| 23 | 2017 | 1362 | 22 | 1384 | 43,203 | 23 | 2017 | 1362 | 22 | 1384 | 43,203 |
| விருதுநகர் | 99 | 84 | 149 | 24 | 78 | 10 | 98 | 56 | 598 |
| மொத்தம் | 1289 | 1164 | 1110 | 1488 | 1341 | 1663 | 2067 | 1573 | 11,695 |
| Source: NCRB | | | | | | | | | |

நலவாழ்வும், அடிப்படைவசதிகளும் உறுதிசெய்யப்பட்டால் வன்கொடுமைகளின் எண்ணிக்கை குறையும் என்பதைதமிழக அரசு அங்கீகரிக்கிறது (22 அக்டோபர் 2019 அன்றையகூட்டத்தின் அறிக்கை). 30%க்கு கூடுதலாக பட்டியல் இனத்தவர் வசிக்கும் கிராமங்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க, மொத்தம் 2 பில்லியன் ரூபாய் (2018–2019லும் 2019–2020லும் தலா ஒரு பில்லியன் ரூபாய்) அனுமதிக்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் பங்குபெற்ற, கிராமமேம்பாடு மற்றும் ஊராட்சித் துறையின் இயக்குனர் முனைவர் திரு. பழனிசாமி, இணைச் செயலர் திரு ஆர். ஜேசுதாஸ் கென்னடி மற்றும் கூடுதல் இயக்குனர் திருமிகு ராஜஸ்ரீ ஆகியோர் பரிந்துரையை ஏற்று, உரிய நடவடிக்கை எடுக்க ஒப்புக்கொண்டனர். இது உறுதி செய்யப்படவேண்டும்.

**பரிந்துரைகள்:**

1. நிவாரணம் மற்றும் மறுவாழ்விற்காக வழங்கப்படவேண்டிய தொகைவழங்கப்படாமல் ஏற்பட்டுள்ள பின்னடைவை நீக்க, ஒற்றை–தவணை வழிவகை ஒன்று ஏற்படுத்தி, பின்னடைவை உடனடியாக சரிசெய்யவேண்டும்.

2. வருங்காலங்களில், கடந்த ஐந்து நிதிஆண்டுகளில் மறுவாழ்விற்காக செலவிடப்பட்ட சராசரிதொகையின் 120% ஒதுக்கீடுகள்கொண்ட வருடாந்திர பட்ஜெட்டை தயாரிக்கவேண்டும்.

3. ஒரு வாரத்திற்குள் தொகைவிநியோகிக்கப்படுவதை உறுதிசெய்யவேண்டும். அதாவது, விதி 12(4) மற்றும் விதி 15(1)ன் கீழ் ஆன திட்டம் முழுமையாக பின்பற்றப்படவேண்டும்.

4. அளிக்கப்படும் தொகையை, மொத்தமாக சேர்த்து காலாண்டுவரியாக, அல்லது அதனினும் நீண்ட, அப்போதப்போது நிர்ணயிக்கும் கால இடைவெளிகளில் விநியோகிக்கும் போக்கை கைவிடவேண்டும்.

5. நிலம் மற்றும் வீடுசம்மந்தமான மறுவாழ்வு அளிப்பதற்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுவைத்தலும், ஆயத்தமான குடியிருப்புகளை இருப்பில்வைத்துக்கொள்வதும் அவசியம்.

## 8. வழக்குத் தொடருவதற்கான பணிகளைத் தொடங்கவும் அல்லது வழக்கு நடப்பதை கண்காணிப்பதற்காகவும் நியமிக்கப்பட்ட அதிகாரிகள்

*(நடைபெறுகிற வழக்குகள், வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் சட்டப்பிரிவுகளுக்குமாறாக இருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்காக, வழக்கு தொடர்வதற்கான பணிகளைத் தொடங்கவும் வழக்கு நடப்பதைக் கண்காணிப்பதற்காகவும் நியமிக்கப்பட்ட அதிகாரிகள்: பட்டியல் சாதியினர் பழங்குடியினர் பாதுகாப்புக்குழு அமைத்தல் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 21((2)iv) மற்றும் 1995இல் உருவாக்கப்பட்ட அதன் விதிகளில் எட்டாம் எண் விதிக்கு ஏற்றவகையில்)*

வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தை அமலாக்குவதற்கும் அதனை கண்காணிப்பதற்குமான திறன்மிக்க நிர்வாககட்டமைப்பை தமிழ்நாடு எழுத்து அளவில் உருவாக்கியிருக்கிறது என்பதை கீழ்க்கண்ட துணைப்பிரிவுகள் காட்டுகின்றன. மாற்று அமைப்புகளையும் இணையான அமைப்புகளையும் உருவாக்காமல் அரசாங்கத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையை பின்பற்றுகிறது. தமிழக அரசின் பொறாமைப்படும் அளவுக்கான நிர்வாகரீதியான நன்மதிப்புக்கு ஏற்ப இது அமைந்துள்ளது.

தமிழகத்தின் இந்த நிர்வாகத்திறன் என்பது நடைமுறையில் திறன்மிக்க செயல்பாடுகளாக மாறவில்லை என்பதும் இங்கே குறிப்பிட்டுச் சொல்லவேண்டியிருக்கிறது. குற்றங்களின் விகிதம் பற்றியும் அந்தக் குற்றங்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனைகளின் விகிதம் பற்றியும் பேசுகிறமுந்தைய பகுதியில் நாம் பார்த்ததைப் போல, செயல்பாட்டுதிறன் என்பது உண்மையில் நிர்வாகத் திறனின் பங்கில் குறைந்துள்ளது.

### 8.1. மாநில பட்டியல்வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் ஆணையம்

தமிழ்நாட்டில் பட்டியல் வகுப்பினருக்கான ஆணையம், பட்டியல் பழங்குடியினருக்கான ஆணையம் இரண்டுமே இல்லை. இந்த

ஆணைகளை அமைப்பது இச்சட்டத்தின்படி கட்டாயமானதல்ல. ஆகவே, அதன் வரம்புக்கு அப்பாற்பட்டதாக இது உள்ளது.

**8.2.மாநில உயர்நிலை அதிகாரி**

விதி 9ன் படி மாநில அளவில் மாநில அரசுக்கான ஒரு செயலர் மட்டத்தில் ஒரு உயர்நிலை அதிகாரியை அரசாங்கம் நியமிக்கவேண்டும். அவர் பொதுவாக SC/ST பிரிவுகளைச் சேர்ந்தவராக இருத்தல் நலம்.

சட்டத்தின் விதிகளைச் செயல்படுத்துவதற்காக மாவட்ட குற்றவியல் நடுவர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட வேறு அதிகாரியின் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக இந்த அதிகாரிநியமிக்கப்படுவார். சட்டத்தின் ஏற்பாடுகளை செயல்படுத்துவதற்கான மாவட்ட குற்றவியல் நடுவர், காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட இதரஅதிகாரிகளின் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக உயர்நிலை அதிகாரியாக அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலர் நியமிக்கப்பட்டுள்ளார். *(அரசாணை எண் Ms.18, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைPA, தேதி 20.1.2003).*

மாநில உயர்நிலை அதிகாரி:
ஓடெம் டாய் I.A.S.,
அரசு கூடுதல் தலைமை செயலாளர்.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
தலைமைச் செயலகம், சென்னை –600 009

தகவல்உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட பதில்களின் படி இந்த அலுவலகத்திற்கு மாதாந்திர, காலாண்டு மற்றும் அரையாண்டு அறிக்கைகள் அளிக்கப்படவில்லை. விதி(3xi)ன் படி, சிறப்பு அரசு வழக்குரைஞர்கள், விசாரணை அதிகாரிகள் ஆகியோரின் செயல்பாடுகள் குறித்த சட்டப்பூர்வமான அறிக்கை அளித்தல், விதி(73)ன் படி இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பான அறிக்கை அளித்தல் ஆகிய பணிகள் நடைபெறவில்லை என்பதை இது காட்டுகிறது.(தகவல் உரிமைச்சட்ட பதில் எண்.23047/RTI/எண்.1/PoA2/2017–1, தேதி: 5.1.2018).

சட்டத்தின் செயலாக்கத்தையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அமைப்புகளின் செயல்பாடுகளைக்கண்காணிப்பதில் மாநில

உயர்நிலை அதிகாரி நியமனம் எந்த அளவிற்குப் பயனுள்ளதாக இருக்கிறது என்ற கேள்வியை இது எழுப்புகிறது.
இருந்தாலும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும் காலாண்டு மறு ஆய்வுகள் நான்கு முறை 2019இல் நடத்தப்பட்டன. அவைநடந்தாலும் அவற்றில் சிறப்பு அரசு வழக்கறிஞர்கள் மற்றும் புலனாய்வு அதிகாரிகளின் குறிப்பான செயல்பாட்டு அறிக்கைகள் கிடைக்கவில்லை. கூடுதலாக, பட்டியல் சாதியினருக்கான தேசிய ஆணையத்தின் மறுஆய்வுக் கூட்டத்தின் தயாரிப்புப் பணிகளுக்காக ஒரு கூட்டம் நடைபெற்றுள்ளது.

### 8.3.பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் பாதுகாப்புபிரிவு

*ஒவ்வொரு மாநிலமும் ஒரு பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகள் பாதுகாப்பு பிரிவை ஏற்படுத்தியாகவேண்டும் [பிரிவு 21(2)iv ] மற்றும் விதி[8].*

சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு (SJHR) என்பது பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் பாதுகாப்புக்கான பிரிவாகும். சமூகஉரிமைகள்பாதுகாப்புசட்டம் –1955, பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல்பழங்குடியினர் (வன்கொடுமைதடுப்பு) சட்டம் – 1989, விதிகள் 1995 (2015, 2016 திருத்தங்கள்) ஆகியவை செயலாக்கப்படுவதை இந்தப் பிரிவு மேற்பார்வையிடுகிறது.

காவல்துறை கூடுதல்தலைமை இயக்குநர் (ADGP), காவல்துறை துணைதலைமை ஆய்வாளர் (DIG), சென்னையிலுள்ள SJHR உதவிதலைமை ஆய்வாளர் ஆகியோர் இந்தச் சட்டம் செயலாக்கப்படுவதை மேற்பார்வையிடுகிறார்கள். அனைத்து மாவட்டங்களிலும் ஆணையர் அலுவலக வட்டாரங்களிலும் SJHR மையங்கள் செயல்படுவதையும் இவர்கள் மேற்பார்வையிடுகிறார்கள். SJHR தலைமையகம் சென்னை, மயிலாப்பூரில் உள்ள காவல்துறை தலைமை இயக்குநர் (DGP) அலுவலகவளாகத்தில் உள்ளது.

இந்த பாதுகாப்புக்குழுவின் தற்போதைய தலைவர்

திரு. சைலேஷ்குமார் யாதவ், ஐபிஎஸ்
காவல்துறையின் கூடுதல்தலைமைஇயக்குநர்,
சமூகநீதிமற்றும் மனிதஉரிமைகளுக்கான தலைமையகம்,
காவல்துறையின் தலைமைஇயக்குநர் அலுவலகவளாகம்,
மயிலாப்பூர் – 600 004.

**8.4. சிறப்பு அலுவலர்கள் [மாவட்ட அளவில்]**

*சட்டத்தின் விதிகள் செயல்படுத்தப்படுவதற்குப் பொறுப்பான மாவட்ட குற்றவியல்நடுவர், காவல்துறைகண்காணிப்பாளர் அல்லது இதரஅதிகாரிகள் ஆகியோரின் பணிகளையும் பல்வேறு குழுக்கள் மற்றும் SC/ST பாதுகாப்புபிரிவின் பணிகளையும் ஒருங்கிணைப்பதற்காக அடையாளம் காணப்பட்ட பகுதிகளின் சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும் எனவிதி 10 கூறுகிறது.*

தமிழக அரசு அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் சமூகஉரிமைகள் பாதுகாப்பு சட்டம் 1955, SC/ST (வன்கொடுமை தடுப்பு] சட்டம் ஆகியவற்றின் முறையான செயலாக்கத்திற்கான சிறப்பு அதிகாரிகளாக நியமித்துள்ளது *[அரசாணை எண் Ms.96, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைPA, தேதி10.8.2006].*

**8.5. மாவட்ட அளவிலான செயலாக்கம்**

சமூகஉரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955, பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகள் [வன்கொடுமை தடுப்பு] சட்டம் 1989 ஆகிய இரண்டு சட்டங்களும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் காவல்நிலையங்களாலும் செயல்படுத்தப்படுகின்றன. அத்துடன், SC/ST மக்களுக்கு எதிரான வன்கொடுமைகளை விசாரிக்க 38 DSP பணியிடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் SJHR பிரிவில் ஆணையர் வட்டாரத்திலும் ஒரு DSP, அவருக்கு உதவுவதற்கான பணியாளர்களுடன் நியமிக்கப்பட்டுள்ளார் *[அரசாணை எண் Ms.189, உள்துறைகாவல். 2,தேதி 25–02–2014 மற்றும் அரசாணை எண் Ms.934, உள்துறை காவல்.1, தேதி 21.12.2015].* தளமட்டத்தில் அவர்கள் ஆணையர்/SP நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளனர். மாநில அளவில் சட்டம் ஒழுங்குப் பிரிவு ADGP கட்டுப்பாட்டில் உள்ளனர். வழக்குகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க SJHR பிரிவின் ADGP உள்ளார்.

**8.6. சிறப்பு காவல்துறை பதவிகள்**

*விதி 8[iii]ன் கீழ் SC/ST பாதுகாப்பு மையத்தின் பரிந்துரை அடிப்படையில் சிறப்பு காவல்பணியிடங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.*

தமிழ்நாட்டில் SC/ST மக்களுக்கு எதிரான குற்றச்செயல்களை விசாரிக்க சிறப்பு காவல்நிலையங்கள் ஏற்படுத்தப்படவில்லை. அனைத்து உள்ளூர் காவல்நிலையங்களும், SJHR அலுவலர்கள் உதவியோடு, வழக்குகளைப் பதிவுசெய்து விசாரணை மேற்கொள்ளலாம்.

காவல்நிலையங்கள் இச்சட்டத்தைச் செயல்படுத்துவது 38 மாவட்டத் தலைமையகங்கள்/ஆணையர்வட்டாரங்களில் உள்ள 38 SJHR மையங்களால் கண்காணிக்கப்படுகிறது. ஒவ்வொரு மையத்திற்கும் ஒரு DSP தலைமை வகிக்கிறார்.

**8.7 குற்றப் பதிவேடுகளும் புள்ளிவிவரங்களும்**

சமூகநீதி மற்றும் மனிதஉரிமைகள் பாதுகாப்புத்துறை பொறுப்பாளராக இருக்கும் காவல்துறையின் கூடுதல்தலைமை இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ள தேவையான பணியாட்களில் ஒரு பொருளாதாரவியலாளரும் சமூகவியலாளரும் இருக்கின்றனர். அவர்களின் பணி இத்தகைய வழக்குகளை ஆராய்வது தான் என்று தமிழக அரசின் ஆண்டறிக்கைகள் கூறுகின்றன. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் அடிப்படையிலான புள்ளிவிவரங்களை சேகரிப்பதற்காக ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் இந்தத் துறையில் உள்ளார். அவருக்கு மற்ற பணியாட்கள் உதவி வருகின்றனர்.

ஆனாலும், பொதுமக்கள் தெரிந்துகொள்வதற்காக வெளிப்படுத்தப்படுகிற இத்தகைய குற்றப் பதிவேடுகள் மிகவும் மேலொட்டமானதாக உள்ளன. காவல்துறையின் இணையதளத்திலும் அவற்றை வெளியிடுவதில்லை. இத்தகைய பணிநியமனங்கள் பற்றியும் அவர்களால் செய்துமுடிக்கப்பட்ட பணிகளின் விவரங்கள் பற்றியும் சிறிதளவுதான் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குற்றப் பதிவேடுகள் வெளியிடப்படும்போது அவை நீண்டகாலம் தாமதித்தபிறகு வெளியிடப்படுகின்றன என்பது அவற்றைப் பற்றிய இன்னொரு நோக்கமாக கருதப்படுகிறது. காவல்நிலையங்களிலிருந்து வருகிற பதிவேடுகளை கணினிமயமாக்கி, அவற்றை பல தரவுகளோடு ஒப்பிட்டு மாநில குற்றப்பதிவேடுகள் நிறுவனத்தின் தரவுகளோடு ஒருங்கிணைக்கிறபோது, இத்தகைய காலதாமதங்கள் மேலும் அதிகமாகிவிடுகின்றன. *[உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைதுறை, நீதிநிர்வாகம், கோரிக்கை எண் 3, சட்டமன்றத்தில் வைக்கப்படுகிறகொள்கை அறிக்கைக்குறிப்பு – 2019 – 2020].*

**குடிமக்கள் விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் (CVMC) பரிந்துரைகள்:**

இந்தச் சட்டத்தின் கீழ்நியமிக்கப்படுகிற அதிகாரிகளின் செயல்பாட்டுத் திறன் பற்றி குறிப்பிட்ட காலவரம்புகளுக்கு இடையில்

நடத்தவேண்டிய மறுஆய்வுகள் எதுவும் நடத்தப்படுவதில்லை என்பதை வருடாவருடம் கேட்கப்படுகிற, பல்வேறுவகையான தகவல்உரிமைச் சட்டத்தின் அடிப்படையிலான கோரிக்கைகள் மூலமாக தெரியவருகிற விவரங்கள் வெளிப்படுத்துகின்றன. தலித் மக்களும் பழங்குடிமக்களும் எதிர்கொள்கிற பிரச்சனைகள் தொடர்பான புரிதலும் அவற்றை தீர்க்கவேண்டிய சரியான தகுதியும் இத்தகைய அதிகாரிகளுக்கு இருக்கவேண்டும் என்று வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் விதி எண் 13 (1) விதிக்கிறது. அத்தகைய புரிதலும் தகுதியும் இத்தகைய அதிகாரிகளுக்கு இருக்கிறதா என்பதைப் பற்றிய மறு ஆய்வுகள் எதுவும் நடத்தப்படுவதில்லை என்பதால் இத்தகைய அதிகாரிகளுக்கு அத்தகைய புரிதலும் தகுதியும் இருக்கிறதா என்பதை தெரிந்துகொள்ள முடிவதில்லை. வன்கொடுமைகள் வழக்குகளில் தண்டனைகள் பெறுவோரின் விகிதங்களைப் பார்த்தால், இவை இரண்டுமே இத்தகைய அதிகாரிகளிடம் போதாமையாக இருக்கிறது என்று தோன்றுகிறது. ஆனாலும் கூட இத்தகைய எந்த ஒரு அதிகாரியும் இதுவரையிலும் பணியிலிருந்து நீக்கப்படவில்லை.

**குடிமக்கள் விழிப்பு மற்றும் கண்காணிப்பு கூட்டம் கீழ்கண்டவற்றை வலியுறுத்தி பரிந்துரை செய்கிறது.**

1. குறிப்பிட்ட காலவரம்புகளுக்கு ஒரு முறையிலான மறு ஆய்வுகள் நடத்தப்படவேண்டும். இந்தப் பணிக்குத் தேவையான திறன்கள் இல்லாத அதிகாரிகள் நீக்கப்படவேண்டும். சிறப்பு அரசு வழக்கறிஞரும் புலன் விசாரணை அதிகாரியைப் பொறுத்தமட்டில் மாவட்ட அளவிலான உயர்மட்ட குழுக்களின் கண்டறிதல்களின் அடிப்படையில் இருக்கவேண்டும். உச்சநீதிமன்றம் கிசன்பாய் வழக்கில் வழங்கிய தீர்ப்புக்கு ஏற்ப, அத்தகைய குழுக்களை அமைக்கவேண்டும் என்று (RC.No.053884/Crime.43)/2014 தேதி: 26.04.2016, அன்று தமிழ்நாடு காவல்துறையின் தலைமை இயக்குநர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் இத்தகைய குழுக்கள் நிறுவப்பட்டிருக்கவேண்டும். மற்ற அதிகாரிகளைப் பொறுத்தவரையில், வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 15Aஇன் படியும், வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் அமலாக்கத்துக்காக தமிழக அரசு

உருவாக்கியிருக்கிற வருமுன்காக்கும் திட்டத்தின் படியும் அதுவிதிக்கிற காலக்கெடுவின்படியும், வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் விதிகளில் எண் (124) விதிக்கிற வேலைத்தரங்களின் அடிப்படையில் நிவாரணங்கள், மறுவாழ்வு பணிகள், பாதுகாப்பு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதன் அடிப்படையிலும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் தொடர்பான முடிவுகள் எடுக்கப்படவேண்டும்.

2. வன்கொடுமைகள் நடைபெறக்கூடிய கிராமங்கள், தாலுகாக்களில் பணி அமர்த்தப்டும் அதிகாரிகள், வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் விதி எண் (132) இல்விதித்துள்ளபடியான திறன்களும் தகுதிகளும் கொண்டவர்களாக தேர்வு செய்யப்பட்டிருக்கவேண்டும். போதுமானபட்டியல் சாதியினரும் பழங்குடிமக்களும் அனைத்து மட்டங்களிலும் பணி அமர்த்தப்படவேண்டும். இத்தகைய விவரங்கள் கேட்கப்பட்ட போது அவைமறுக்கப்பட்டுள்ளன. ஆனால் இத்தகைய விவரங்கள் தொடர்பாக காவல்துறையின் உள்ளே எந்தவொரு கண்காணிப்பும் கட்டுப்பாடுகளும் நடத்தப்படுவதாகவும் தெரியவில்லை.

# 9. கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக் குழுக்கள்

*[வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் பாகம் IVA, பிரிவு 15A, துணைப்பிரிவுii, அத்துடன் இணைந்ததாக விதி 16, 17]*

## 9.1. மாநில அளவிலான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக் குழு [SVMC]

*விதி[161]ன் படி மாநில அரசு உயரதிகார கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக் குழுவை அமைக்கவேண்டும். விதி 162]: உயரதிகார கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக் குழு ஒரு காலண்டர் ஆண்டில் குறைந்தது 2 முறை, ஜனவரி, ஜூலை மாதங்களில், சட்டத்தின் விதிகள் செயல்படுத்தப்படுவதை ஆய்வு செய்வதற்காகக் கூடவேண்டும்.*

உயர் அதிகாரம் கொண்ட மாநில அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு உருவாக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அது இந்தச் சட்டம் வந்ததிலிருந்து 4முறை மட்டும்தான் கூடியிருக்கிறது. கடைசியாக 2013 ஜூன் மாதம் தான் கூடியிருக்கிறது என்று அரசின் தகவல்கள் கூறுகின்றன. *[அரசாங்கத்தின் கடிதம் எண். 8481/RTI No.78/PA1/2020-1.தேதி – 17 ஜூலை 2020]*

2014ஆம் வருடம் டிசம்பர் 16இல் வெளியிடப்பட்ட அரசு ஆணையின் அடிப்படையில் [அரசு ஆணை Ms.No.95, தேதி 16 December 2014 ஆண்டறிக்கை 2016, பிற்சேர்க்கை (V)] நிறுவப்பட்ட, மாநில அளவிலான தயார்நிலை மற்றும் கண்காணிப்புக் குழு ஒருபோதும் கூடியதே இல்லை. மாநில அளவிலான இந்த உயர் அதிகாரக் குழு வன்கொடுமைகள் வழக்குகளை மறு ஆய்வுசெய்யும் நடைமுறையும் மோசமானதாக இருக்கிறது என்பதை தகவல்உரிமைச் சட்டத்தின் கீழ் எழுப்பப்படும் கேள்விகளுக்கான எதிர்வினைகள் வெளிப்படுத்துகின்றன. 2013 ஆம் வருடத்திலிருந்து இந்தக் குழு கூடியதேஇல்லை என்பது மட்டும் அல்ல, அரசாங்கத்தின் மிகவும் உயர் மட்டங்களில் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் பற்றியும் அதன் விதிகள் பற்றியும் இதயம் அற்ற அலட்சியமும் அக்கறையின்மையும் தான் தொடர்ச்சியான முறையில் எப்படி நீடிக்கிறது என்பதை அதன் செயல்பாடுகள் பற்றிய காலவரிசையிலான முன் விவரங்கள் இருக்கின்றன.

*...இந்த விவகாரத்தைக் கையாளும் அதிகாரி கூறியதாவது: மாநில அளவிலானதயார் நிலை மற்றும் கண்காணிப்பு கூட்டத்துக்கான தேதியையும் நேரத்தையும் நிச்சயிக்குமாறு கேட்டுக்கொள்ளும் கோப்பு ஜூலை மாதம் 2018இல் மாண்புமிகு முதலமைச்சரின்*

*அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து முதலமைச்சரின் இரண்டாம் முதன்மைச் செயலாளர், ஆதிதிராவிடர் நலத்துறையின் இயக்குநரை தொலைபேசியில் அழைத்து, நடைபெற உள்ளகூட்டத்தின் விவாதப்பொருள்களில் சேர்க்க வேண்டியவை பற்றிய சிலவழிகாட்டல்களை வழங்கினார். அதனால், அத்தகைய வழிகாட்டல்களையும் சேர்த்து விவாதப்பொருள்களை உருவாக்குமாறு 2018 ஆகஸ்ட் மாதம் 27 தேதியிட்ட அரசுகடிதம் மூலமாக ஆதிதிராவிட நலத்துறை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார். அதன் அடிப்படையில் கூட்டத்தைக் கூட்டுவதற்கான தேதியை நிச்சயிப்பதற்கான கோரிக்கையும் அரசாங்கத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது.*

இதற்குப்பிறகு சட்டமன்றத்தின் இடைத் தேர்தல்கள் மீது கவனம் திரும்பிவிட்டது. 22 சட்டமன்ற இடங்களுக்கு நடைபெற்ற அந்த தேர்தல்களில் வெற்றி பெறுவதுஎன்பதுஅரசாங்கத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதாக இருந்ததால், மாநில அளவிலான தயார்நிலை மற்றும் கண்காணிப்பு கமிட்டியை நடத்துவதற்கான அரசியல்சாசன அடிப்படையிலான கடமை என்பது காணாமல் போய்விட்டது.

மாநில அளவிலான 2018 ஆம் ஆண்டறிக்கையின் [பத்தி, 9, 2019 பிப்ரவரி 7 அன்று நடந்த கூட்டத்திற்குப் பிறகு எழுதப்பட்டிருக்கலாம்] கீழ்கண்டவாறு கூறுகிறது.

*“ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால், 2017ஆம் ஆண்டில் மார்ச் மாதம் 16ஆம் தேதி வெளியிடப்பட்ட, புதிய அரசாணை Ms. எண் 16இன், அடிப்படையில், மாண்புமிகு தமிழகமுதல்வரின் தலைமையில் உயர் அதிகாரம் கொண்ட, மாநிலஅளவிலான தயார்நிலை மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. 2019 நாடாளுமன்றத் தேர்தல்களும் 22 சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களும் நடைபெற்று முடிந்தபின்னர், புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் கொண்டதாக, உயர்மட்டக் குழுவை மறுசீரமைக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. அத்தகைய மறு கட்டமைப்பு நடந்தபிறகு நடப்பு ஆண்டில் விரைவாகநடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.”*

2019 ஆம் ஆண்டின் முற்பகுதியில், ஆண்டறிக்கை எழுதப்பட்டபோது வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் விதி 18 விதித்துள்ள கட்டாய காலக்கெடுவுக்கு ஏற்ப, ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1 ஆம் தேதிக்கு

முன்னர், மத்திய அரசுக்கு ஆண்டறிக்கை மாநில அரசால் அனுப்பப்படுகிறது]. தேர்தல்கள் என்பவை குறிப்பிட்ட காலஇடைவெளியில் வந்துபோய்க்கொண்டிருக்கிற விவகாரங்கள். ஆவற்றை காரணமாகச் சொல்லிகொண்டு, அரசு எனும் கப்பல் தொடர்ந்து பயணிப்பதை தடுத்துநிறுத்தி நடுக்கடலில் அரசை நிறுத்திவைத்திருக்கமுடியாது. தேர்தல்கள் முடிந்த பிறகு ஒரு வருடம் கழிந்தபிறகும், மாநில அளவிலான உயர் அதிகாரம் படைத்த குழுவின் கூட்டங்கள் எதுவும் நடத்தப்படவில்லை.

இன்று வரையில் கணக்கில் எடுத்துக்கொண்டால், கட்டாயமாக நடத்தவேண்டிய 49 கூட்டங்களில்வெறும் மூன்று மட்டும்தான் [6.1%] நடத்தப்பட்டுள்ளன.

10 மாவட்டங்களில் இருந்து 4150 கையெழுத்துக்கள் இணைக்கப்பட்டு, அனுப்பப்பட்ட நினைவூட்டல்களுக்கு பிறகு தற்போது ஒரு கூட்டம் மட்டும் நடத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 15: எஸ்.வி.எம்.சி (SVMC) கூட்டங்கள் நடத்தப்பட்டதற்கான முதலமைச்சர்களின் அறிக்கைஅட்டை**

| Sl | முதல்அமைச்சர் | SVMC கூட்டங்கள்நடத்தப்பட்டவை | கட்டாயகூட்டங்கள் | சதவித இணக்கம்% | பதவிஏற்றதேதி | பதவிவிலகியதேதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | டாக்டர்எம்.கருணாநிதி | 0 | 10 | 0.00% | 13.05.1996 | 13.05.2001 |
| 2 | ஓ.பன்னீர்செல்வம் | 0 | 1 | 0.00% | 14.05.2001 | 20.09.2001 |
| 3 | டாக்டர்ஜெ.ஜெயலலிதா | 0 | 1 | 0.00% | 21.09.2001 | 01.03.2002 |
| 4 | டாக்டர்எம்.கருணாநிதி | 0 | 8 | 0.00% | 02.03.2002 | 12.05.2006 |
| 5 | டாக்டர்ஜெ.ஜெயலலிதா | 1 | 10 | 10.00% | 13.05.2006 | 14.05.2011 |
| 6 | ஓ.பன்னீர்செல்வம் | 2 | 7 | 28.57% | 16.05.2011 | 28.09.2014 |
| 7 | ஓ.பன்னீர்செல்வம் | 0 | 1 | 0.00% | 29.09.2014 | 22.05.2015 |
| 8 | டாக்டர்ஜெ.ஜெயலலிதா | 0 | 3 | 0.00% | 23.05.2015 | 05.12.2016 |
| 9 | ஓ.பன்னீர்செல்வம் | 0 | 1 | 0.00% | 06.12.2016 | 15.02.2017 |
| 10. | எடப்பாடிபழனிசாமி | 1 | 7 | 14.28% | 16.02.2017 | In office |
| | மொத்தம் | 4 | 49 | 8.16% | | |

Source: RTI reply No.643/Special.B/2016–1, Dated: 10.5.2016, No.5634/PA–1/RTI No.56/2016–2, Dated: 14.6.2016, No.1309/Special.B/2017–1, Dated: 12.7.2017from Public Special–B) Department, Government of Tamil Nadu; Government Letter No. 8481/RTI No.78/PA1/2020–1. Dated 17 July 2020.

**அட்டவணை 16: எஸ்.வி.எம்.சி (SVMC) கூட்டங்கள் நடத்தப்பட்டன: கட்சிவாரியான அறிக்கைஅட்டை**

| Sl | கட்சி | கட்டாயமாகநடத்த ப்படவேண்டியவை | நடத்தப்பட்டது | % |
|---|---|---|---|---|
| 1 | திமுக | 20 | 1 | 5% |
| 2 | அதிமுக | 29 | 3 | 10% |
| | மொத்தம் | 49 | 4 | 8% |

**குடிமக்கள் விழிப்பு மற்றும் கண்காணிப்பு கூட்டம் கீழ்கண்டவற்றை வலியுறுத்தி பரிந்துரைசெய்கிறது**

இந்தச் சட்டத்தை செயல்படுத்துவதில் மாநில அரசின் முழுமையான நிர்வாககட்டமைப்புக்கும் தேவையான ஒரு செயல்முறை வடிவத்தை வழங்குவதே இத்தகைய உயர்மட்ட அதிகாரம் படைத்த குழுக்கள் அமைப்பதன் நோக்கம். எனவே, ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள மறுஆய்வு அறிக்கைகளோடும் செயல்திறன் மதிப்பீடுகளோடும் அவைதவறாமல் நடத்தப்படவேண்டும்.

1. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரியிலும் ஜூலையிலும் நிச்சயிக்கப்பட்ட தேதிகளில் மாநில அளவிலான உயர்மட்ட தயார்நிலை மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டங்களை நடத்துங்கள்.

2. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஜூலை மாதங்களின் 28 ஆம் தேதிகளில்கூட்டங்களை நடத்தலாம் என்று நிச்சயிப்பதையும் ஒரு வாய்ப்பாக முயன்றுபார்க்கலாம்.

3. வழக்குகளின் நிலை பற்றிய அனைத்து மட்டங்களிலான மறு ஆய்வு அறிக்கைகளும் புலன் விசாரணைகள், நீதிமன்றவிசாரணைகள், உதவிகளாககொடுக்கும் நிதிகள், சிறப்பு அரசு வழக்கறிஞர்கள் மற்றும் விசாரணை அதிகாரிகளின் செயல்திறன் பற்றிய மறுஆய்வு அறிக்கைகளும், வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டோரின் வாழ்வும், அவர்களின் வாழ்வாதாரங்களும் சரியானநேரத்திலும் போதுமான இழப்பீட்டோடும் மீட்டு எடுத்துகட்டியெழுப்பட்டிருப்பது பற்றிய அனைத்து மறுஆய்வு அறிக்கைகளும் உயர் மட்ட குழுவின் உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்தும் வகையிலும் மாநில அளவிலான உயர்மட்டக் கூட்டங்கள் நடைபெறவேண்டும்.

**9.2 மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு**

*வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் அடிப்படையிலான, தயார்நிலை மற்றும் கண்காணிப்புக்கான மாவட்ட அளவிலான குழுக்களின் தலைவர்களாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உள்ளனர். மேலும் அவற்றை வருடத்திற்கு நான்கு முறையாவது நடத்தவேண்டும் என்கிறது சட்டத்தின் விதி 17 1]].*

**மாவட்டவாரியாக நடத்தப்பட்ட டி.வி.எம்.சி கூட்டங்களின் எண்ணிக்கை(2016 - 2018)**



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை 22.2.1996 ஆம் தேதியில் வெளியிட்டுள்ள அரசாணை (Ms) எண் 33இன் அடிப்படையில் மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்களின் கூட்டங்கள் ஒவ்வொரு காலாண்டிலும் வருடத்திற்கு நான்குமுறை நடத்தப்படவேண்டும். எனவே, தமிழ்நாட்டின் 32 மாவட்டங்களில் ஆண்டுக்கு 128 மாவட்ட கூட்டங்கள் நடத்தப்படவேண்டும், 2010 முதல் 2018 வரை 1152 கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவேண்டும். இருப்பினும், 744 கூட்டங்கள் (65%) மட்டுமே நடத்தப்பட்டிருக்கின்றன.

2010 முதல் 2013 வரையிலான மாநில அளவிலான ஆண்டறிக்கைகள் கூறியதாவது

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை 15.02.2007 அன்றுவெளியிட்டுள்ள அரசாணை எண்.37 இல் ஆணை பிறப்பித்திருப்பதற்கு ஏற்றவகையில், மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது மாவட்ட அளவிலான தயார்நிலை மற்றும் கண்காணிப்புக் குழுவின் கூட்டத்தை,*

*அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் நடத்தவேண்டும் என்று மாநில அரசு ஏற்கனவே கடுமையான அறிவுறுத்தல்களை பிறப்பித்துள்ளது. அந்தக் கூட்டங்களில், வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தை அரசுநிர்வாகம் அமலாக்குகிறவிதத்தை மறுஆய்வு செய்யவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்களையும் மறுவாழ்வுப் பணிகளையும் மறுஆய்வு செய்வதற்கும், வன்கொடுமைகள் தொடர்பான வழக்குகள் தொடர்பான மற்றவிவகாரங்களைப் பற்றி கலந்தாலோசனை நடத்தவும் வேண்டும் என்றும் மாநில அரசு அறிவுறுத்தியிருக்கிறது.*

*உண்மைத் தரவுகளை தவறாக எடுத்துக்கொண்டதன் அடிப்படையில் போடப்படும் தவறான வழக்குகளையும் வேகமாக விசாரித்து தீர்ப்பதையும் உறுதிப்படுத்தவேண்டும் என்று அது அறிவுறுத்தியுள்ளது.*

மாநில அளவிலான 2014 மற்றும் 2015 ஆண்டறிக்கைகளில் கூடுதலாக குறிப்பிடப்பட்டிருப்பது வருமாறு,

*“வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தை அமலாக்குவதை மறுஆய்வு செய்யும் வகையில் மாநில அரசின் தலைமைச் செயலாளர் தனிக் கவனம் செலுத்தும் வகையில், சட்டம் மற்றும் ஒழுங்கு கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்படுகின்றன. மாவட்ட அளவிலான தயார்நிலை மற்றும் கண்காணிப்புக் கூட்டங்கள் எத்தனை முறைகள் நடத்தப்பட்டன என்பது இத்தகைய கூட்டங்களில் பரிசீலிக்கப்படுகின்றன. கூட்டங்களை நடத்தாத மாவட்டங்களுக்கு வழிகாட்டல்கள் தரப்படுகின்றன.”*

2016 ஆண்டின் அறிக்கை குறிப்பிடுவதாவது,

*மாவட்ட குழுக்களின் கூட்டங்களையும் மற்றகூட்டங்களையும் முறையான காலஇடைவெளிகளுக்கு இடையில் நடத்தவேண்டும் என்று வலியுறுத்துவதற்காக மட்டுமே ஒரு காணொளிகருத்தரங்கம் மாவட்ட நிர்வாகத்தோடு நடத்தப்பட்டது.*

இரண்டு மற்றும் மூன்று கூட்டங்களை மட்டும் நடத்திய மாவட்ட ஆட்சியர்கள், கூட்டங்களை தவறாமல் நடத்தவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான மாநில ஆண்டு அறிக்கைகள் கூடுதலாக குறிப்பிடுகின்றன. கடந்த ஒன்பது ஆண்டுகளில் மாநில அளவிலான கூட்டங்களைவிட, மாவட்ட அளவில் நடந்த கூட்டங்கள் அதிகமானவை. கட்டாயமாக நடத்தவேண்டிய கூட்டங்களில், சுமார் 65 சதவீதம் வரை நடந்துள்ளன. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் வரலாற்றுரீதியான குறைந்த அளவான 41 சதவீதம் அளவுக்கு கூட்டங்கள் நடப்பது குறைந்தது. 2012 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே 48 சதவீதம் மற்றும் 41 சதவீதமாக, ஒன்பது ஆண்டுகால மாநில அரசின் சராசரியான 65 சதவீதத்திலிருந்து குறிப்பிடத்தக்க சரிவுகள் இருந்தன என்பதைத் தரவுகள்காட்டுகின்றன. இதற்கு 2011 தேர்தல்களும், 2016ல் தமிழக முதல்வரின், அகாலமரணமும் காரணமாகஇருக்கலாம். 2016 ஆம் ஆண்டில் ஐந்து மாவட்டங்களில் ஒரு கூட்டம் கூட நடத்தப்படவில்லை. ஒன்பது மாவட்டங்களில் ஒரே ஒரு கூட்டம்தான் நடத்தியிருக்கின்றனர்.

2010 ஆம் வருடம் முதல் 2018 வருடம் வரை, கோயம்புத்தூர் மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான கூட்டங்கள் நடத்தப்பட்டன. கட்டாயம் நடத்தவேண்டிய 36 கூட்டங்களில் 31 கூட்டங்களை கோயம்புத்தூர் மாவட்டம் நடத்தியிருக்கிறது. அடுத்தபடியாக, தர்மபுரி மாவட்டத்தில் 29 கூட்டங்களும், ஈரோடு மாவட்டத்தில் 29 கூட்டங்களும் நடந்துள்ளன. மிகக் குறைவாக, திருநெல்வேலி மாவட்டத்தில் 18 கூட்டங்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 19 கூட்டங்களும், புதுக்கோட்டையில் 19 கூட்டங்களும் நடந்துள்ளன.

சட்டப்படியாக கட்டாயம் நடத்தவேண்டிய கூட்டங்களில் 75 சதவீதம் 2010இல் நடைபெற்றுள்ளன. மொத்தம் 96 கூட்டங்கள் மாவட்ட அளவில் நடைபெற்றுள்ளன. அனைத்து மாவட்டங்களும் தலா மூன்று கூட்டங்களை நடத்தின. 2011ஆம் ஆண்டில் 103 கூட்டங்கள் நடத்தப்பட்டன. இது 80 சதவீதம் ஆகும். ஏழு மாவட்டங்கள் ஒரு வருடத்தில் கட்டாயம் நடத்தவேண்டிய நான்கு கூட்டங்களையும் நடத்திமுடித்தன. 2012 ஆம் ஆண்டில், இந்தப் போக்கில் கூர்மையான சரிவு ஏற்பட்டது. 61 மாவட்டக் கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டன. எந்த மாவட்டமும் கட்டாயம் நடத்தவேண்டிய எண்ணிக்கையில் கூட்டங்களை நடத்தவில்லை. பத்து மாவட்டங்கள் தலா ஒரு கூட்டத்தை மட்டுமே நடத்தின. 2013 ஆம் ஆண்டில் 78 கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டன. இது 60 சதவீதம் ஆகும். மூன்று மாவட்டங்கள் மட்டுமே கட்டாயமாக நடத்தவேண்டிய நான்கு கூட்டங்களையும் நடத்திமுடித்திருந்தன.

2014 ஆம் ஆண்டில், 69 மாவட்டக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இரண்டு மாவட்டங்களில் நான்கு கூட்டங்களும் நடந்தன. திருச்சி மாவட்டம் 2014இல் ஒரு கூட்டத்தைக்கூட நடத்தவில்லை. 2015 ஆம் ஆண்டில், 80 கூட்டங்கள் (இது 62.5 சதவீதம் ஆகும்) நடத்தப்பட்டன. ஏழு மாவட்டங்கள் நான்கு கூட்டங்களையும் நடத்தின. 2016 இல் 53 மாவட்டக் கூட்டங்கள் (இது 41 சதவீதம்) மட்டுமே நடத்தப்பட்டன. திருச்சி மாவட்டம் மட்டுமே நான்கு கூட்டங்களையும் நடத்தியது. ஆறு மாவட்டங்கள் எந்தஒரு கூட்டத்தையும் நடத்தவில்லை.

2017 ஆம் ஆண்டில், மொத்தம் 86 மாவட்டக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், சிவகங்கை, தேனி மற்றும் திருப்பூர் எனும் ஏழு மாவட்டங்கள் மட்டும் நான்கு கூட்டங்களையும் நடத்திமுடித்தன. 2018 ஆம் ஆண்டில், 118 கூட்டங்கள் நடத்தப்பட்டன – இதுவே அதிகபட்சமான எண்ணிக்கை. இந்த ஆண்டில் 2018 ஆம் ஆண்டில் மூன்று மாவட்டங்களின் (சென்னை, திருவள்ளூர் மற்றும் திருவண்ணாமலை) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலா ஐந்து கூட்டங்களை நடத்தினர். சட்டப்படியாக நடத்தவேண்டிய நான்கு கூட்டங்களையும் 17 மாவட்டங்கள் நடத்திமுடித்தன.

எல்லா 'கண்டிப்பான அறிவுறுத்தல்களையும்' மற்றும் 'தனிப்பட்டவிசேசமான' கண்காணிப்பையும் மீறி, 2016இல், நான்கு மாவட்டங்கள்(திருச்சி, சிவகங்கை, சென்னைமற்றும் மதுரை) ஒரு கூட்டத்தைக்கூட நடத்தவில்லை. 9 மாவட்டங்களில் ஒரு கூட்டம் மட்டுமே நடத்தப்பட்டது. 11 மாவட்டங்களில் இரண்டு கூட்டங்கள் நடந்தன. 8 மாவட்டங்கள் மூன்று கூட்டங்களை நடத்தின. கட்டாயமாக நடத்தவேண்டிய நான்கு கூட்டங்களை எந்த மாவட்டமும் நடத்தவில்லை. கூட்டங்களை நடத்துவதில் கணிசமான முன்னேற்றம் இருந்தபோதிலும், திருநெல்வேலி அதில் இணையவில்லை. 2017இல் ஒரு கூட்டமும் 2018இல் இரண்டு கூட்டங்களும் தான் அங்கே நடந்திருக்கின்றன. அந்த நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களாக டாக்டர் எம். கருணாகரன், (25 மே 2016 முதல் 31 மே 2017 வரை), சந்தீப் நந்தூரி (2017 ஜூன் முதல்மே 2018 வரை) இருந்துள்ளனர். 25 மே 2018 முதல் இன்று வரை ஷில்பாபிரபாகர் சதீஷ் மாவட்ட ஆட்சியராக உள்ளார். கடந்த இரண்டு ஆண்டுகளில் கட்டாயமாக நடத்தவேண்டிய எட்டு கூட்டங்களுக்குப் பதிலாக, மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மூன்று கூட்டங்களை மட்டுமே நடத்தமுடிந்திருக்கிறது.

ஆனாலும் கூட எந்தவொரு ஒரு அதிகாரியும் கூட இதற்காககண்டிக்கப்படவில்லை அல்லது நிர்வாகரீதியான நடவடிக்கைஎதுவும் அதிகாரிகள் மீது எடுக்கப்படவில்லை.

இந்தநிலையை மேம்படுத்துவதற்கான பல்வேறு அதிகாரபூர்வமான பரிந்துரைகள் இருக்கின்றன. ஆவை அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாதமும் 22 ஆம் தேதியை மாதாமாதம் நடக்கிறகூட்டத்துக்காக நிர்ணயிக்கலாம் என்ற கூடுதல் தலைமைச் செயலாளரின் பரிந்துரையை கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து அதிகாரிகளும் ஒப்புக் கொண்டனர். (2019 பிப்ரவரி 7 அன்று ஆதிதிராவிடர் நலத்துறையில் நடைபெற்ற கூட்டத்தின் பதிவுகள் (AD&TW PA1) DEPT).

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கூடுதல் தலைமைசெயலாளர் வழிகாட்டியிருக்கிறார். வன்கொடுமைகள் தொடர்பான வழக்குகளை நடத்துவதிலும் பாதிக்கப்பட்டோருக்கு மறுவாழ்வு அளிப்பதிலும் தேக்கம் ஏற்பட்டு விடாமல் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் வழிகாட்டப்பட்டுள்ளது.

கொடூரமான குற்றங்கள் தொடர்பான வழக்குகளை இறுதி செய்வதில் சமூகநீதி மற்றும் மனிதஉரிமைகள் துறை கவனம் செலுத்தி வருவதாக காவல்துறையின் கூடுதல்தலைமை இயக்குநர் ஷைலேஷ்குமார் யாதவ் தெரிவித்தார். தற்போது இத்தகைய எட்டு வழக்குகள்தான் சில குறிப்பிட்ட காரணங்களுக்காக நிலுவையில் உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2019 அக்டோபர் 22 அன்று நடைபெற்ற கூட்டத்தின் பதிவுகள் (AD&TW PA1) DEPT)).

மாவட்ட அளவிலான கூட்டங்களை நடத்துவதற்கு முன்னர் பிரச்சினைகளைப் பற்றியும் அவற்றின் தீர்வுகளைப் பற்றியும் நன்கு விவாதித்திருக்கவேண்டும். மேலும், சுருக்கமாகவும் கச்சிதமாகவும் கருத்துகளை முன்வைக்கவேண்டும். இதனால், கூட்டத்தின் தலைவரால் கருத்தில்கொள்ளவேண்டிய விஷயத்தில் கவனம் செலுத்தமுடியும் என்று கூடுதல் தலைமைச் செயலாளர் சொல்லியிருக்கிறார். (2019 அக்டோபர் 22 அன்று நடைபெற்றகூட்டத்தின் பதிவுகள் AD&TW PA1) DEPT)).

| அட்டவணை 17: மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டங்கள் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sl | மாவட்டம் | வருடத்தில் நடைபெற்ற கூட்டங்கள் | | | | | | | | | | |
| | | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | Total | % |
| 1 | அரியலூர் | 3 | 3 | 1 | 3 | 3 | 2 | 2 | 3 | 4 | 24 | 67 |
| 2 | சென்னை | 3 | 3 | 2 | 3 | 2 | 2 | – | 4 | 5 | 24 | 67 |
| 3 | கோவை | 3 | 4 | 3 | 4 | 3 | 4 | 2 | 4 | 4 | 31 | 86 |
| 4 | கடலூர் | 3 | 3 | 2 | 3 | 2 | 2 | 1 | 2 | 4 | 22 | 61 |
| 5 | தர்மபுரி | 3 | 3 | 2 | 3 | 4 | 4 | 3 | 3 | 4 | 29 | 81 |
| 6 | திண்டுக்கல் | 3 | 3 | 3 | 1 | 2 | 2 | 2 | 2 | 3 | 21 | 58 |
| 7 | ஈரோடு | 3 | 4 | 2 | 2 | 3 | 4 | 4 | 3 | 4 | 29 | 81 |
| 8 | காஞ்சிபுரம் | 3 | 3 | 2 | 3 | 2 | 2 | 1 | 3 | 3 | 22 | 61 |
| 9 | கன்னியாகுமரி | 3 | 3 | 1 | 2 | 2 | 3 | 1 | 2 | 3 | 20 | 56 |
| 10 | கரூர் | 3 | 3 | 3 | 2 | 2 | 3 | – | 1 | 4 | 21 | 58 |
| 11 | கிருஷ்ணகிரி | 3 | 3 | 3 | 4 | 2 | 2 | 3 | 3 | 4 | 27 | 75 |
| 12 | மதுரை | 3 | 3 | 2 | 2 | 3 | 3 | – | 4 | 3 | 23 | 64 |
| 13 | நாகப்பட்டினம் | 3 | 3 | 2 | 3 | 3 | 2 | 2 | 2 | 4 | 24 | 67 |
| 14 | நாமக்கல் | 3 | 3 | 1 | 3 | 2 | 3 | 3 | 3 | 4 | 25 | 69 |
| 15 | நீலகிரி | 3 | 3 | 2 | 2 | 2 | 2 | 3 | 3 | 4 | 24 | 67 |
| 16 | பெரம்பலூர் | 3 | 4 | 2 | 2 | 2 | 4 | 3 | 2 | 4 | 26 | 72 |
| 17 | புதுக்கோட்டை | 3 | 3 | 2 | 3 | 1 | 1 | 1 | 2 | 3 | 19 | 53 |
| 18 | ராமநாதபுரம் | 3 | 3 | 3 | 1 | 4 | 2 | 2 | 2 | 4 | 24 | 67 |
| 19 | சேலம் | 3 | 4 | 1 | 2 | 2 | 4 | 3 | 4 | 4 | 27 | 75 |
| 20 | சிவகங்கை | 3 | 3 | 3 | 3 | 2 | 1 | – | 4 | 4 | 23 | 64 |
| 21 | தஞ்சாவூர் | 3 | 3 | 1 | 3 | 2 | 2 | 1 | 2 | 3 | 20 | 56 |
| 22 | தேனி | 3 | 3 | 1 | 3 | 2 | 4 | 1 | 4 | 3 | 24 | 67 |
| 27 | திருவள்ளூர் | 3 | 4 | 2 | 2 | 1 | 1 | – | 1 | 5 | 19 | 53 |
| 23 | திருவண்ணாமலை | 3 | 3 | 1 | 2 | 3 | 2 | 1 | 3 | 5 | 23 | 64 |
| 28 | திருவாரூர் | 3 | 3 | 1 | 3 | 1 | 2 | 3 | 3 | 4 | 23 | 64 |
| 24 | தூத்துக்குடி | 3 | 4 | 2 | 2 | 1 | 2 | 2 | 2 | 3 | 21 | 58 |
| 25 | திருநெல்வேலி | 3 | 3 | 1 | 1 | 3 | 2 | 2 | 1 | 2 | 18 | 50 |
| 26 | திருப்பூர் | 3 | 3 | 1 | 4 | 2 | 3 | 3 | 4 | 4 | 27 | 75 |
| 29 | திருச்சி | 3 | 3 | 3 | 1 | 0 | 2 | – | 3 | 3 | 18 | 50 |
| 30 | வேலூர் | 3 | 3 | 1 | 2 | 2 | 2 | 2 | 2 | 3 | 20 | 56 |
| 31 | விழுப்புரம் | 3 | 4 | 3 | 2 | 2 | 2 | 1 | 3 | 3 | 23 | 64 |
| 32 | விருதுநகர் | 3 | 3 | 2 | 2 | 2 | 4 | 1 | 2 | 4 | 23 | 64 |
| | மொத்தம் | 96 | 103 | 61 | 78 | 69 | 80 | 53 | 86 | 118 | 744 | |
| | ஆண்டுநிலை % | 75 | 80 | 48 | 61 | 54 | 63 | 41 | 67 | 92 | 65 | |

| அட்டவணை 17: மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டங்கள் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sl | மாவட்டம் | வருடத்தில் நடைபெற்ற கூட்டங்கள் | | | | | | | | | | |
| | | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | Total | % |
| ஆதாரம்: தமிழ்நாடு எஸ்சி மற்றும் எஸ்டி (வன்கொடுமைகள் தடுப்புச்சட்டம்) ஆண்டுஅறிக்கைகள் 2010–2018) | | | | | | | | | | | | |

**குடிமக்கள் விழிப்பு மற்றும் கண்காணிப்பு கூட்டம் கீழ்கண்டவற்றை வலியுறுத்தி பரிந்துரைசெய்கிறது.**

வன்கொடுமைகள் தடுப்புச்சட்டத்தை தசெயல்படுத்துவதைக் கண்காணிக்கும் முக்கியமான மாநில அரசு நிர்வாக கட்டமைப்புகளில், மாவட்ட அளவிலான தயார்நிலை மற்றும் கண்காணிப்புக் குழு என்பது மிக முக்கியமான அமைப்புகளில் ஒன்றாகும்.

1. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடக்கவேண்டிய மாவட்ட அளவிலான கூட்டங்கள், நிலையான தேதிகளில் தவறாமல் நடத்தப்படவேண்டும். ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் 21ஆம் தேதியில் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ஒரேமாதிரியாக இந்தக் கூட்டங்கள் நடைபெறுவது என்பது விரும்பத்தக்கது. இது அவர்களின் கலந்துரையாடல்களுக்கு நல்லநேரமும் அளிக்கும். அவர்களின் கூட்டம் நடந்து ஒரு வாரம் கழித்து மாநில அளவிலான கூட்டங்களுக்குத் தேவையான விவரங்களை அளிப்பதற்கும் உதவியாக இருக்கும்.

2. சட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கவேண்டிய அனைத்து அறிக்கைகளும் மாவட்ட அளவிலான கமிட்டியின் உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே வழங்கப்படவேண்டும். [வழக்குகளின் நிலை – புலன் விசாரணை, நீதிமன்ற விசாரணை மற்றும் TAME, சிறப்பு அரசு வழக்கறிஞர்கள் மற்றும் விசாரணை அதிகாரிகளின் செயல்திறன் மறுஆய்வு அறிக்கைகள், மற்றும் பாதிக்கப்பட்டோரின் வாழ்க்கையையும் வாழ்வாதாரங்களையும் சரியான நேரத்தில் மீட்டு, போதுமான இழப்பீடுதந்து மறுபடியும் கட்டியெழுப்புதல் – ஆகிய அனைத்தும் மாவட்ட அளவிலான உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே கிடைக்கச் செய்யவேண்டும்].

3. மாவட்ட அளவிலானதயார் நிலைமற்றும் கண்காணிப்பு குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும், அவர்களின் உரிமைகள், பொறுப்புகளும் கடமைகள், அவர்களுக்கு கொடுத்தாகவேண்டிய அறிக்கைகளும் மறுஆய்வுகளும் என்ன என்பதைப் பற்றி நன்கு அவர்களின் மனதில் பதியவைக்கப்படவேண்டும். அவர்களின் கருத்துக்கள் எவ்வாறு பதிவுசெய்யப்படுகின்றன என்பதைப் பற்றியும் அவர்களுக்கு தெரியப்படுத்தவேண்டும்.

4. மாவட்ட அளவிலான அனைத்துகுழுக்களும் 2020 ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப்படவேண்டும். அதைப் பற்றி விரிவாக விளம்பரம் செய்யவேண்டும். அப்போதுதான் தகுதியான அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்கள் அதில் சேர்வதற்காக விண்ணப்பிக்கமுடியும்.

## 9.3 துணைக்கோட்ட (சப்–டிவிஷனல்) அளவிலான தயார்நிலைமற்றும் கண்காணிப்பு குழுக்கள்

*வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் விதி17(A)–ன் படி சப்–டிவிஷனல் அளவிலான தயார்நிலை மற்றும் கண்காணிப்புக்கான குழுக்கள் அமைக்கப்படவேண்டும். அவற்றுக்கு சப்–டிவிஷனல் மாஜிஸ்திரேட்டுகள் தலைவர்களாகவும், வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் உறுப்பினர் செயலாளர்களாகவும் இருக்கவேண்டும் என்று விதி 17(A)(3) நிச்சயித்துள்ளது. சப்–டிவிஷனல் அளவிலான கூட்டங்கள் ஒரு வருடத்தில் குறைந்தது நான்கு முறைநடத்தப்பட வேண்டும் என்கிறது விதி 17(A)(4).*

வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் மேற்கண்டவிதிக்கும் மேலதிகமாக, தமிழக அரசின் கூடுதல்தலைமைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், 2015 ஜனவரி 20 அன்று வெளியிட்ட அரசு ஆணையிலும் (எண் 6) அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் சப்–டிவிஷனல் அளவிலான குழுக்களை அமைக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

2018 ஆம் ஆண்டிற்கான மாநில அரசின் ஆண்டு அறிக்கையின்படி, தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களில் ஐந்து மட்டும்தான் (16 சதவீதம்) சப்–டிவிஷனல் அளவிலான குழுக்களை அமைத்துள்ளன. ஒரு ஆண்டில் கட்டாயம் நடத்தவேண்டிய நான்கு கூட்டங்களில்

திண்டுக்கல் மாவட்டம் மூன்று கூட்டங்களை நடத்தியிருக்கிறது. கிருஷ்ணகிரி இரண்டையும், திருச்சி இரண்டையும் திருநெல்வேலி இரண்டையும் திருவாரூர் நான்கு கூட்டங்களையும் நடத்தியிருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் நடந்திருக்கவேண்டிய கூட்டங்களில் இதுவெறும் 3 சதவீதம்தான்.

ஒரு மாநிலத்தின் இரண்டாவது மிக மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரியான கூடுதல்தலைமைச் செயலாளர், வழங்கிய நேரடியான அரசாணையை, பணி மூப்பில் இரண்டவதாக உள்ள மிகவும் இளைய ஐ.ஏ.எஸ் அதிகாரியான மாவட்ட ஆட்சித்தலைவரால், எந்தவொரு எதிர் நடவடிக்கையும் எடுக்காமல் மிக எளிதாக மீறமுடியும் என்பது விந்தையானதாக இருக்கிறது. வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் விதி 17 ஏ–யின் படி நாம் சென்றால், சப்–டிவிஷனல் மாஜிஸ்திரேட் ஆக இருப்பவர் கூடுதல்தலைமைச் செயலாளர் வெளியிட்ட உத்தரவை மீறுவது என்பதும் அதற்கான எந்தவொரு தண்டனையும் அவருக்கு கிடைக்காது என்பதும் இன்னும் மோசமானது. சட்டத்தை அப்படியே நடைமுறைப்படுத்துவதில் உள்ளபொருத்தப்பாடு என்பது, வன்கொடுமைகள் நிகழ்த்தியதாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் தண்டிக்கப்படும் விகிதத்தைவிட மிகவும் மோசமானதாக இருக்கிறது என்பது இங்கே ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய முக்கியமான புள்ளியாக இருக்கிறது.

பட்டியல் சாதியினருக்கான தேசிய ஆணையத்தின் கூட்டத்துக்கான தயாரிப்புகளுக்காக, கூடுதல்தலைமைச் செயலாளர் 2019 நவம்பர் 8 ஆம் தேதி அழைப்புவிடுத்த ஆரம்பகட்ட கூட்டத்தில், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை செயலாளர் வருகைதரவில்லை. அந்தத் துறையின் வருகை என்பது இல்லாமல் போனதால், *'சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை செயலாளருக்கு இந்த நிலையை தெரிவிக்கவும், எதிர்காலத்தில் இத்தகைய நடைமுறையை மீண்டும் செய்யவேண்டாம்'* என்று கேட்டுக்கொள்ளும் நிலைக்கு கூடுதல்தலைமைச் செயலாளர் தள்ளப்பட்டார்.

## குடிமக்களின் விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவின் பரிந்துரைகள்

1. பஞ்சாயத்து கூட்டங்கள் நிச்சயிக்கப்பட்ட நாட்களில் நடப்பதைப்போல, சப்–டிவிஷனல் கூட்டங்களும் தவறாமல் நடத்தப்படவேண்டும். மாவட்டக் கூட்டங்களைவிட ஒரு வாரம் முன்னதாக அவை நடத்தப்படலாம். அதாவது ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் 14 ஆம் தேதிகளில் அவை நடத்தப்படலாம்.

2. அனைத்து சட்டரீதியான அறிக்கைகளும் உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே வழங்கப்படவேண்டும்.

3. அனைத்து உறுப்பினர்களுக்கும் அவர்களின் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் கடமைகள், அவர்கள் பெறதகுதியுள்ள அறிக்கைகள் மற்றும் மறுஆய்வு அறிக்கைகள் மற்றும் அவர்களின் கருத்துக்கள் எவ்வாறு பதிவுசெய்யப்படும் என்பது உள்ளிட்டவை மனதில் பதியும் வண்ணம் உணர்த்தப்படவேண்டும்.

4. அனைத்து சப்–டிவிஷன் அளவிலான குழுக்களும் 2020 ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப்படவேண்டும். அந்த மறுசீரமைப்பு பற்றி விரிவானஅளவில் விளம்பரம் செய்யப்படவேண்டும். அப்படி செய்தால்தான், பஞ்சாயத்து உறுப்பினர்கள் இந்த குழுக்களில் தங்களின் பதவிகளின் காரணமாக, தாங்கள் இயல்பான உறுப்பினர்களாக தானாவே ஆகிறோம் என்பதை அறிந்து கொள்ளமுடியும். கூட்டதேதிகள் பற்றியும் இந்த குழுக்கள் தொடர்பான இதரவகை முன்னேற்றங்கள் குறித்தும் அவர்கள் தாங்களே அறிந்துகொள்ளும் வகையில் இருப்பார்கள்.

## 10. காலமுறை அறிக்கைகளும் ஆய்வுகளும்

10.1. மாதாந்திர அறிக்கைகள்

*(a) இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை, b) சட்டத்தின் அத்தியாயம் ஐஏல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ், பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவது ஆகியவற்றை ஆய்வுசெய்வதும், அரசு வழக்குத்துறை இயக்குநர் மற்றும் மாநில அரசுக்கு, ஒவ்வொரு மாதம் 20ம் தேதியன்று அல்லது அதற்குமுன்னதாக ஒரு மாதாந்திர அறிக்கை அளிப்பதும் மாவட்ட மாஜிஸ்ட்ரேட் ஆட்சியர்) மற்றும் மாவட்ட அளவில் வழக்குக்குப்பொறுப்பான அதிகாரியின் சட்டப்பூர்வப்பணி என்று விதி 44) கட்டாயப்படுத்துகிறது.*

மாதாமாதம் தயாராகும் அறிக்கைகள் எதுவும் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை தகவல் அறியும் கோரிக்கைகளுக்கான பதில்களாக அரசாங்கங்கள் தரும் தகவல்கள் அரசாங்க கடிதம் எண் 8486 / ஆர்டிஐ எண் 82 / பிஏ 1 / 2020–2, 17 ஜூலை 2020 தேதியிட்டது) உறுதிப்படுத்துகின்றன.

*அதிகாரப்பூர்வ நடைமுறை 2018 ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது: சமூகநீதி மற்றும் மனிதஉரிமைகள் பிரிவு அன்றாட நிலைமைகளை அறிக்கைகளாக சமர்ப்பிக்கிறது. அதில் மாவட்ட அளவிலான வன்கொடுமைகள் பற்றிய விவரங்களும் சம்பந்தப்பட்ட காவல்துறை ஆணையர் / காவல்துறை கண்காணிப்பாளர் எடுத்த நடவடிக்கைகளும் உள்ளன. பாரா 9, பக்கம் 6].*

*சமூகநீதி மற்றும் மனிதஉரிமைகள் பிரிவுக்கு பொறுப்பாக உள்ள காவல்துறையின் கூடுதல்தலைமை இயக்குநரோடு இணைந்து, நடத்தப்படும் மாதாந்திர மறுஆய்வுக் கூட்டங்களில் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் செயல்பாடு மறுஆய்வு செய்யப்படுகிறதுபாரா 17].*

இத்தகைய மறு ஆய்வுகள் மாதந்தோறும் செய்யப்படுகிறதென்றால், அவற்றை எழுத்துபூர்வமானதாக மாற்றுவதேசிறப்பானது. அப்படிச் செய்வதன் மூலம் மறுஆய்வுகளைத் தொடர்ந்து அவற்றுக்குப் பொருத்தமான செயல்பாடுகளாகமாற்றலாம்.

சட்டம் – ஒழுங்கு நிலைமைகள் பற்றி அன்றாடம் உருவாகிற அறிக்கைகள் வேறுநோக்கத்திற்காக உள்ளன. வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் விதிகள்கோரும் குறிப்பான விவரங்கள் அவற்றில் இல்லை – குறிப்பாக, இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை, அல்லது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகளை செயல்படுத்துதல் உள்ளிட்டவை இத்தகைய அறிக்கைகளில் இருப்பதில்லை. இத்தகைய விவரங்கள் விடுபட்டுப் போவது என்பது வன்கொடுமைகளிலிருந்து தப்பித்துப் பிழைத்திருப்பவர்கள் தவிர்க்கக்கூடிய மிரட்டலுக்கு ஆளாவதற்கு வழிவகுக்கிறது. வன்கொடுமைகளிலிருந்து தப்பித்துப் பிழைத்திருப்பவர்களும் சாட்சிகளும் அரசுத் தரப்புக்கு விரோதமான முறையில் தலைகீழ் மாற்றங்களுக்கு ஆளாகும் வாய்ப்புகளை அதிகரிக்கிறது. இதன் விளைவு என்பது வன்கொடுமைகள் நிகழ்த்தியதாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் தண்டிக்கப்படுவதை மிகவும் குறைவான அளவுக்கே நடைபெறும் சூழலை உருவாக்குகிறது.

10.2. காலாண்டுஆய்வுகள்

*3xi], 73], 9 ஆகிய மூன்று விதிகளின்படி காலாண்டு ஆய்வுகள் நடத்தப்பட்டாகவேண்டும் அறிக்கைகள் அளிக்கப்பட்டாகவேண்டும்.*

விதி 3xi]ன்படி சிறப்பு அரசுவழக்குரைஞர், விசாரணை அதிகாரிகள் ஆகியோரது செயல்பாடுகள் பற்றிய
மாதாந்திர ஆய்வுகள் நடத்தப்படவில்லை. விதி 73] கூறுவது போல, இச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வழக்குகள் குறித்த மாதாந்திரஆய்வுகளும் நடத்தப்படவில்லை. *RTI* பதில் எண் 23047/*RTI* எண் 1/*PA2*/2017–1, தேதி 05.01.2018].

காலாண்டு அறிக்கைகள் எதுவும் அரசாங்கத்துக்கு இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை தகவல் அறியும் கோரிக்கைகளுக்கு தமிழக அரசு அளித்துள்ள பதில்களில் 26 ஆகஸ்ட் 2020 தேதியிட்டது] உள்ள தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.
ஆனால், மாநில அளவிலான மறுஆய்வுகள் 2019 இல்நடந்தன. ஒவ்வொரு சிறப்பு அரசுவழக்கறிஞர் தொடர்பாகவும், ஒவ்வொரு விசாரணை அதிகாரி தொடர்பாகவும் குறிப்பான மறுஆய்வு அறிக்கைகள் இல்லை என்றாலும் கூட, மறுஆய்வுக் கூட்டங்களின் ஒட்டுமொத்ததொனி என்னவென்றால், சிறப்பு அரசுவழக்கறிஞர்கள் தாங்கள் ஆற்றவேண்டிய கடமையை ஆற்றுவதில் தவறியிருக்கிறார்கள் என்றும் அவர்கள் கண்காணிக்கப்படவேண்டும் என்றும் காவல்துறையின் கூடுதல்தலைமை இயக்குநரோடு இணைந்து நடத்தப்பட்ட, மறு ஆய்வுகூட்டங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 26 மார்ச் 2019 அன்று நடைபெற்ற மறுஆய்வுக் கூட்டத்தின் பதிவுகள். கூடுதல் விவரங்கள் சிறப்பு அரசுவழக்கறிஞர் பற்றிய பிரிவில் உள்ளன].
வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தை அமலாக்குவதில் உள்ள பிரச்சினை தொடர்பாக, அரசு நிர்வாகத்தின் உள்ளே மிகுந்தஉள் விழிப்புணர்வு இருக்கிறது. ஆனால், 'செய்யவேண்டிய கடமையை செய்யத்தவறுதல்' என்ற கூட்டத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பது உள்ளிட்டவை] இத்தகைய விழிப்புணர்வு என்பது செயல்பாடாக மாறவில்லை. தங்களது கடமையை செய்யத் தவறுகிறவர்கள் மீது புலன் விசாரணை மேற்கொள்வது என்பதை ஒரு ஓரமாக எடுத்துவைப்போம். கடமையைச் செய்யதவறிய சிறப்பு அரசுவழக்கறிஞர்களை குறைந்தபட்சம் மாற்றுவது கூட நடைபெறவில்லை.

### 10.3. அரையாண்டு ஆய்வுகள்

*விதி 42]: வரையறுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட சிறப்பு அரசு வழக்குரைஞர்கள், தனிசிறப்பு அரசுவழக்குரைஞர்களின் செயல்பாட்டை காலண்டர் ஆண்டில் குறைந்தது இரண்டு முறை, ஜனவரி, ஜூலை மாதங்களில், மாவட்ட ஆட்சியர், அரசுவழக்குத்துறை இயக்குநர்/வழக்குப்பொறுப்பு அலுவலர் ஆய்வு செய்யவேண்டும்.*

விதி 42] கூறுவதுபோல அறிக்கை எதையும் அரசாங்கம் கிடைக்கப்பெறவில்லை [RTI பதில் எண்
23047/RTI எண் 1/PA2/2017-1, தேதி 05.01.2018, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை].
மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து அறிக்கை எதுவும் வந்ததில்லை. துகவல் உரிமைச் சட்டத்தின் கீழ்
விவரங்கள் கேட்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் "உரிய விதியைக் கறாராகப் பின்பற்றவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன." இதற்குக் கூறப்பட்ட காரணம் வேடிக்கையானது. "ஏனெனில் விதி 4 செயலாக்கம் தொடர்பாக இத்துறைக்கு பல மனுக்களும் RTI மனுக்களும் வந்துள்ளன" என்பதே அந்தக் காரணம்
கடிதம் எண் 13952/ PA1/2017-6, தேதி 12.09.2017 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை].
சிறப்பு அரசு வழக்குரைஞர்கள் செயல்பாட்டு ஆய்வுகள் [ விதி 142]] நடத்தப்படவில்லை [RTI பதில் எண்
23047/ PoA/1]/2017-10, தேதி 15-11-2017].
2013ம் ஆண்டிலிருந்து மாநில கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக் குழு கூடவில்லை என்பதால், விதி 142]ன் கீழ் ஜனவரி, ஜூலை மாதங்களில் நடத்தப்படவேண்டிய ஆய்வுகள் நடத்தப்படவில்லை. 8 செப்டம்பர் 2020 எஸ்.வி.எம்.சி கூட்டத்திற்குப் பிறகும் கூட நிலைமை பெரிதாக முன்னேறவில்லை.

**11.வன்கொடுமைகள் உள்ளாகக் கூடிய பகுதிகள்**

*SC/ST மக்கள் வன்கொடுமைகளுக்கு உள்ளாகக்கூடிய பகுதிகளை அரசாங்கம் அடையாளம் காணவேண்டும், அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வகுக்கவேண்டும் என்று விதி 212)vii] கூறுகிறது. SC/ST பாதுகாப்புபிரிவின் பொறுப்புகளில் இதுவும் ஒன்றாகும் [ விதி8i].*

1994ம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்துவரும் விதிமுறைகளின்படி, ஒரு தாய்க்கிராமத்தில் அல்லது அதன் குக்கிராமங்களில், அடுத்தடுத்த மூன்று காலண்டர் ஆண்டுகளுக்குள் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட உண்மையான வழக்குகள் பதிவாகுமானால், அல்லது ஒரு மிகக்கொடூரமான குற்றம், சாதி சார்ந்த பதற்றம் அல்லது மோதல் பதிவாகுமானால், அது வன்கொடுமைக்கு இலக்காகக்கூடிய கிராமம் APV] என்று கருதப்படுகிறது. கொலை, வன்புணர்வு, சூறையாடல் அல்லது கடுமையானகாயம் போன்றகொடூரமான குற்றம் சார்ந்த ஒரே ஒரு சம்பவம் பதிவாகுமானால் கூட, வன்கொடுமைக்கு இலக்காகக்கூடிய அந்தக் கிராமம் 'மிகவும் பதற்றமான பகுதி' என்று அறிவிக்கப்படுகிறது.

ஹஞஏ என்று அறிவிக்கப்பட்ட கிராமங்கள், கடைசியாக சம்பவம் பதிவான தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு உயர் முக்கியத்துவப் பட்டியலில் வைக்கப்படுகின்றன. பின்னர் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு சாதாரணப் பட்டியலுக்கு மாற்றப்படுகின்றன. சாதாரணப் பட்டியல் காலக்கட்டத்தில் ஒரு வன்கொடுமைச் செயல் நடைபெறுமானால் அந்தக் கிராமம் மறுபடியும் உயர் முக்கியத்துவப் பட்டியலுக்குக் கொண்டுவரப்படும்.

இந்திய அரசின் சமூகநீதி மற்றும் மனிதஉரிமைகள் அமைச்சகத்திலிருந்தும், உள்துறை அமைச்சகத்திலிருந்தும் பெறப்படும் வழிகாட்டல்கள் அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/ மாநகரங்களின் காவல்துறை ஆணையர்கள்/ காவல்துறை கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு அனுப்பப்படுகின்றன.

முன்தடுப்பு நடவடிக்கைக்கான வழிகாட்டல்கள் உருவாக்கப்பட்டு அரசாணை Ms.2, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தேதி 11–01–1994, அரசாணைஆ.எ.140, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தேதி 18–06–1993, தமிழக அரசின் தலைமைச் செயலரிடமிருந்து அரசுக் கடிதம் எண் 7233/PA–1/2009–2 தேதி 15–06–2009, அரசின் முதன்மைச் செயலரது கடிதம் D.O.Lr No.17316/PA/2009-1 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

நலத்துறை தேதி 15.09.2009 ஆகியவற்றின் மூலமாக அனுப்பப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாவட்டமும் ஐந்து கிராமங்களில் அமைப்புக்கான வழிமுறைகளின்படி ஆய்வு நடத்துகின்றன ஆண்டறிக்கை 2016, இணைப்புX). அனைத்து அலுவலகங்களிலும் உள்ள புள்ளிவிவர ஆய்வாளர்கள் இந்த ஆய்வை நடத்துவதில் உதவுகின்றனர். இந்த ஆய்வுகள் 1) 1955ன் சமூகஉரிமைகள் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 15A2)vi) பிரிவின்படி அடையாளம் காணப்பட்ட தீண்டாமை நிகழக்கூடிய பகுதிகள், 2) வன்கொடுமை




தடுப்புச் சட்டம் 1989, பிரிவு 17 மற்றும் பிரிவு 212)vi)vii) பிரிவின்படி அடையாளம் காணப்பட்ட வன்கொடுமைக்கு இலக்காகக்கூடிய பகுதிகள் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

2018–ம் ஆண்டிற்கான 226 கிராமங்கள் 'வன்கொடுமைக்கு உட்பட்ட' எனவும் 366 கிராமங்கள் 'செயலற்ற வன்கொடுமைக்கு உட்பட்ட' எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளன. 2017–ம் ஆண்டின் தரவுகளின் அடிப்படையில்) எதுவுமே அதிக உணர்ச்சிவயப்படுகிறதாக வகைப்படுத்தப்படவில்லை. மாவட்டங்களிலுள்ள எஸ்.ஜே.எச்.ஆர் அலகுகளின் ஊழியர்களால்

கிராமங்கள் கணக்கெடுக்கப்பட்டு, முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்புநடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக எஸ்.பி. மற்றும் மாவட்ட ஆட்சியர் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன.

செயல்திறனுயை காவல் 2011 முதல் 2018 வரையிலான ஆண்டு அறிக்கைகளின்படி,

சமூகநீதி மற்றும் மனிதஉரிமைகள் காவல்துறை துணைகண்காணிப்பாளர்கள் அனைவருமே செயல்திறன் மிக்க காவல் தேவைப்படும் கிராமங்களின், முக்கியமாக அதிக உணர்ச்சிவயப்படுகிற மற்றும் வன்கொடுமைக்கு உட்படுகிற இடங்களின், பட்டியலைத் தயாரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இத்தகைய செயல்திறன் மிக்க காவலானது பதட்டங்கள் மற்றும் சாதிமோதல்களைத் தடுப்பதை உறுதிசெய்யும்.

ஹஞர கிராமங்களில் அடிப்படை வசதிகளை வழங்குவது வன்கொடுமைகளைக் குறைக்கும் என்பதை தமிழக அரசு அங்கீகரிக்கிறது கூட்டநிகழ்ச்சிக் குறிப்பேடு, 22 அக்டோபர் 2019]. 30ரு—க்கும் மேற்பட்ட பட்டியல் சாதிகளைக் கொண்ட கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குவதற்காக 2018—2019 மற்றும் 2019—2020 ஆகிய ஆண்டுகளில் மொத்தம் ரூ.2 பில்லியன் ரூ.200 கோடி] ஒப்பளிக்கப்பட்டுள்ளது. ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இந்த ஆலொசனையை ஏற்றுக்கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்க ஒப்புக்கொண்டுள்ளது.

2007 முதல் 2018 வரை, வன்கொடுமைகளுக்கு உட்பட்ட கிராமங்களில் ஹஞர] 'அதிக உணர்ச்சிவயப்படுகிற' எண்ணிக்கை 2017—ல் 168 ஆக உயர்வில் இருந்தது, 2018—ல் ஒன்றுமில்லை என்று படிப்படியாக குறைந்தது. வன்கொடுமைகளுக்கு உட்பட்ட கிராமங்கள் 2011—ல் 136 ஆக இருந்து 2014—ல் 323 ஆக மாறுபடுகிறது. 2012—ம் ஆண்டு வரை 370 ஆகக் குறையும் போக்கைக்காட்டிய

மொத்த ஹஞுஏ–கள் மற்றும் செயலற்ற ஹஞுஏ–களின் எண்ணிக்கை 2013–க்குப் பின்னர் 396–லிருந்து 2018–ல் 592 ஆக உயர்ந்துள்ளது.196 கிராமங்களின் அதிகரிப்பு, கிட்டத்தட்ட 50ளூ அதிகரிப்பு, இது மிகவும் பரவலான, குறைவான தீவிர சமூகமோதலைக் குறிக்கிறது. இது ஒரு நல்ல அறிகுறி அல்ல, மேலும் அதிகரிக்கும் என்று மட்டுமே எதிர்பார்க்கமுடியும்.

| Table 18: Atrocity Prone Villages APV) | | | | |
|---|---|---|---|---|
| **Year** | **AP Villages** | **Dormant** | **Highly Sensitive** | **Total 2+3)** |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 2007 | 207 | 200 | 168 | 407 |
| 2008 | 186 | 230 | 166 | 416 |
| 2009 | 211 | 296 | 173 | 507 |
| 2010 | 174 | 295 | 139 | 469 |
| 2011 | 136 | 275 | 124 | 411 |
| 2012 | 150 | 220 | 82 | 370 |
| 2013 | 186 | 210 | 102 | 396 |
| 2014 | 323 | 148 | 142 | 471 |
| 2015 | 286 | 259 | 106 | 545 |
| 2016 | 277 | 304 | 99 | 581 |
| 2017 | 223 | 374 | 73 | 597 |
| 2018 | 226 | 366 | – | 592 |
| Source: Additional Director General of Police, Social Justice and Human Rights and annual reports | | | | |

## 11. சட்டத்தின் கீழ் வழக்குகளை விரைவாக விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் பிரத்தியேக சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டது.

*வழக்குகளை விரைவாக விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் பிரத்தியேக சிறப்பு நீதிமன்றங்கள் குடியியல் உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 15 ஏ 2]iii) மற்றும் வன்கொடுமை தடுப்புசட்டம் பிரிவு 14—ன் கீழ் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளன.*

| **அட்டவணை 18: பிரத்தியேக சிறப்பு நீதிமன்றம்** | | | |
|---|---|---|---|
| **எண்** | **இடம்** | **நீதிமன்றத்தின் பெயர்** | **மாவட்டங்கள் மீதான அதிகார எல்லை** |
| **குடியியல் உரிமைகள் பாதுகாப்பு சட்டம் நீதிமன்றங்கள்** | | | |
| 1. | திருச்சிரப்பள்ளி | I கூடுதல் அமர்வுநீதிமன்றம், திருச்சிரப்பள்ளி | திருச்சிகாவல் மாவட்டம், திருச்சி. |
| 2. | தஞ்சாவூர் | I கூடுதல் அமர்வுநீதிமன்றம், தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 3. | மதுரை | III கூடுதல் அமர்வுநீதிமன்றம், மதுரை | மதுரை காவல் மாவட்டம், மதுரை |
| 4. | திருநெல்வேலி | II கூடுதல் அமர்வுநீதிமன்றம், திருநெல்வேலி | திருநெல்வேலி காவல் மாவட்டம் திருநெல்வேலி, தூத்துக்குடி, மற்றும் கன்னியாகுமரி |
| **பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் [வன்கொடுமை தடுப்பு] சட்டம் நீதிமன்றங்கள்** | | | |
| 5. | விழுப்புரம் | மாவட்ட நீதிபதி நிலையில் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம் | விழுப்புரம் மற்றும் கடலூர் |
| 6. | சிவகங்கை | மாவட்ட நீதிபதி நிலையில் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம், சிவகங்கை | சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் |
| 7. | விருதுநகர் | மாவட்ட நீதிபதி நிலையில் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம், ஸ்ரீவில்லிபுத்தூர் | விருதுநகர் |
| ஆதாரம்: கொள்கை குறிப்பு 2019—20 மற்றும் ஆண்டு அறிக்கை 2018—லிருந்து தரவு | | | |

12 மாவட்டங்கள் மற்றும் 3 ஆணையரகங்களை உள்ளடக்கிய மதுரை, சிவகங்கை, தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி

மற்றும் விழுபுரம் ஆகிய இடங்களில் 38 பிரத்யேக சிறப்பு நீதிமன்றங்களில் PCRA மற்றும் வன்கொடுமை தடுப்புசட்டத்தின் கீழ்) ஏழு மட்டுமே தமிழகம் அமைத்துள்ளது. கொள்கைக் குறிப்பு அந்தந்த சட்டங்களின் கீழ் அவற்றைப் பிரித்தாலும், நடைமுறையில் அவை பகுதியளவில் இரு சட்டங்களுக்குமான பிரத்யேக சிறப்பு நீதிமன்றங்களாக செயல்படுகின்றன, ஏனெனில் ஞஊசுஹ—ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் ஒற்றை இலக்கத்தில் மட்டுமே உள்ளன.

சரியாக, இந்த சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரிக்க ஒரு மாவட்டத்திற்கு ஒரு பிரத்யேக சிறப்பு நீதிமன்றம் என்றளவில் 38 இருக்கவேண்டும்.
இருப்பினும், மீதமுள்ள மாவட்டங்களில் தற்போதுள்ள அமர்வு நீதிமன்றங்கள் சிறப்பு நீதிமன்றங்களாக நியமிக்கப்பட்டு, வன்கொடுமை தடுப்புசட்டம் மற்றும் ஞஊசுஹ கீழ் வழக்குகளை விசாரிக்க அதிகாரம் அளிக்கப்படுகின்றன.

அதிகரித்து வரும் நிலுவையில், அதிகமான பிரத்யேக சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படுவது முக்கியம். ஆனால் அரசு தனது அறிவிப்புகளைக்கூட செயல்படுத்துவதில் தீவிரமாக இருப்பதாகத் தெரியவில்லை. கொள்கைக்குறிப்பு நமக்குச் சொல்வதுபோல்உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைதுறை, நீதிநிர்வாகம், தேவை எண் 3, கொள்கை குறிப்பு 2019—2020, பக்கம் 14).

2016—2017 முதல் 2019 வரை நான்கு கட்டங்களாக 16 மாவட்டங்களில் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989—ன் கீழ் வழக்குகளை விசாரிப்பதற்காக மாவட்ட நீதிபதிநிலையில் உள்ள 16 சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2016—2017 மற்றும் 2018—2019 ஆண்டுகளில்

கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் எட்டு நீதிமன்றங்கள் அதாவது, 1 வது கட்டத்தில் 4 நீதிமன்றங்கள் மற்றும் 2 வது கட்டத்தில் 4 நீதிமன்றங்கள்) அமைப்பதற்கு நிதி அனுமதி வழங்கப்பட்டது:

1. திண்டுக்கல்
2. ராமநாதபுரம்
3. விருதுநகர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர்
4. புதுக்கோட்டை
5. கடலூர்
6. நமக்கல்
7. தேனி
8. திருவண்ணாமலை

மேற்கண்டநீதிமன்றங்களில்ஸ்ரீவில்லிபுத்தூர்நீதிமன்றம்செயல்பட்டுவருகிறது.

மீதமுள்ள மாவட்டங்களைப் பொறுத்தவரை, மேற்கூறிய சட்டங்களின் கீழ் வழக்குகளை விசாரிக்க சம்பந்தப்பட்ட முதன்மை மாவட்ட மற்றும் அமர்வுநீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

இதை நேராகச் சொல்வதென்றால் – 2016—ல் எட்டு நீதிமன்றங்கள் அனுமதிக்கப்பட்டன, பணம் ஒதுக்கப்பட்டது, ஐந்து வருடங்களுக்குப் பின்னரும் ஒன்று மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது.

அதே கோரிக்கைக் குறிப்பின் 24 ஆம்பக்கத்தில், அரசு அமைத்தது

*மாநிலத்தில் குடியியல் நீதிபதியின் நிலையில் இருபத்திஆறு சிறப்பு நீதிமன்றங்கள். ஆவை அவசியமானவை என்பதே நியாயம். மாநிலத்தின் அனைத்து நகரங்கள் மற்றும் மாவட்டங்களில் 39 நில எதிர்ப்பு அபகரிப்பு சிறப்பு பிரிவுகள் உருவாகியதன் விளைவாக, இந்த கலங்களில் ஏராளமான புகார்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்ட நில அபகரிப்பு எதிர்ப்பு சிறப்பு பிரிவுகளில் நில அபகரிப்புபுகார்கள் குவிந்துவருவதால், இந்த வழக்குகளை விரைவாக முடிவுக்கு கொண்டுவர தவிர்க்க முடியாதபடி ஒரு சிறப்பு நீதிமன்றத்தின் முன்விசாரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.*

வேறுபாடு இன்னும் அப்பட்டமாக இருக்க முடியாது, மற்றும் முரண்பாடு ஏற்றுக்கொள்ள முடியாதது. அபகரிக்கப்பட்ட பெரும்பாலான நிலங்கள் தலித்துகள் மற்றும் ஆதிவாசிகளிடமிருந்து வந்தவை. நில அபகரிப்பு வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் உள்ளது பிரிவுகள் 2 (f) மற்றும் 2 (g). வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வழக்குகளுக்கும் நிலுவையில் உள்ளது. ஏனவே அரசுக்கு நீதியில் உண்மையிலேயே அக்கறை கொண்டிருந்தால், அனைத்து மாவட்டங்களிலும் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் பிரத்யேக சிறப்பு நீதிமன்றங்களை அமைப்பதுதான் மேற்கொண்டு செல்வதற்கான வழி. மிகவும் போற்றப்பட்ட நிர்வாக அமைப்பில் உள்ள நட்சத்திர உள்ளங்கள் எவ்வாறு இணைப்பை தவறவிட்டது என்பது புரிந்துகொள்ள முடியாதது.

## 12.சிறப்பு அரசு வழக்கறிஞர்கள் மற்றும் தனி அரசு வழக்கறிஞர்கள்

*பிரிவு 15 1 மற்றும் 2] மற்றும் விதி 4 1A) ஆகியவை சிறப்பு அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படவேண்டும் என்று ஆணையிட்டு அறிவுறுத்துகின்றன. இந்த நியமனங்கள் அதிகாரபூர்வ அரசிதழில் அறிவிக்கப்படவேண்டும் என்று விதி 4 1B ] வலியுறுத்துகிறது.*

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சிறப்பு நீதிமன்றங்களில்/குறித்த பணிக்கான தனி நீதிமன்றங்களில் அரசுத் தரப்பு வழக்குகளை நடத்துவதற்காக 33 சிறப்பு அரசுவழக்கறிஞர் பணியிடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. எனினும், 'தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடிவகுப்பினர் வன்கொடுமைகள் தடுப்பு] சட்டம், 1989—ன் கீழ் வழக்குகளை நடத்துவதற்காக கன்னியாகுமரி, திருநெல்வேலி, வேலூர் ஆகிய மாவட்டங்களில் மட்டுமே மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் அமர்வு நீதிமன்றங்கள்/சிறப்பு நீதிமன்றங்களில் சிறப்பு அரசுவழக்கறிஞர்கள் நியமனத்துக்கான அரசிதழ் அறிவிக்கைகளின் நகல்கள் மட்டுமே இப்போதைக்கு கிடைக்கின்றன' என்றுபதிலில் கடிதம் எண்.26477/ஊவள. ஏஐஹ/2020—1, 12ஆகஸ்ட் 2020 தேதியிட்டது] குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு அந்த அரசு அறிவிக்கைகளின் நகல்கள் கிடைக்கவில்லையா அல்லது அரசு அறிவிக்கைகளே ஒருபோதும் வெளியிடப்படவில்லையா என்பது தெளிவாகவில்லை.

ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, கடந்த 2016—18—ல் 2233 வழக்குகளில் குற்றத்தில் இருந்து விடுதலை அளிக்கப்பட்டுள்ளது 2016—ல் 942, 2017—ல் 671, 2018—ல் 648]. என்றபோதிலும், ஒரு வழக்கில் கூட குற்றத்தில் இருந்து விடுதலை அளித்ததை எதிர்த்து அரசு மேல்முறையீடு செய்யவில்லை. குற்றத்தில் இருந்து விடுதலை அளித்ததை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கு சட்டவல்லுநர்களிடம் கருத்துகேட்கப்பட்டுள்ளது என்பதுதான்

ஆண்டு அறிக்கைகளில் நிரந்தரக் காரணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த 2019 மார்ச் 16—ல் நடைபெற் றஆய்வுக் கூட்டத்தில், 'சிறப்பு அரசு வழக்கறிஞர்கள் ஒத்துழைப்புதராமல் இருப்பதுதான், வன்கொடுமை வழக்குகளில் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கும் விகிதத்தை உயர்த்த முடியாமல் இருப்பதற்கு முக்கியத் தடையாக இருக்கிறது' என ஏற்கெனவே 2019 பிப்ரவரி 7 ஆய்வுக் கூட்டத்தில் குறிப்பிட்டதையே] போலீஸ் கூடுதல் டி.ஜி.பி. மீண்டும் கூடுதல்தலைமைச் செயலரிடம் கூறியிருக்கிறார்.

இதைசட்ட நடவடிக்கைக்கான இயக்குநர் ஒப்புக் கொண்டது மட்டும் அல்லாமல் 'சிறப்பு அரசுவழக்கறிஞர்கள் ஆட்சி அதிகாரத்தில் உள்ள அரசினால் நியமிக்கப்படுகிறார்கள், பல வழக்குகளில் அவர்களது மனப்பான்மை பாகுபாடற்றதாக இருப்பதில்லை, அவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் பெரும்பாலும் குற்றவாளிகள் எனத்தீர்ப்பளிப்பதில் முடிவதில்லை, சட்டத்தில்கடும் தண்டனை நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், அரசு அதிகாரிகள் கடமையில் அலட்சியமாக இருப்பதால், அரசு வழக்கறிஞர்கள் தேவைப்படும் அளவுக்கு செயல்படுவதில்லை, வன்கொடுமை வழக்குகளை ஆய்வுசெய்து அரசுக்கு அறிக்கை அளிக்குமாறு சட்டநடவடிக்கைக்குப் பொறுப்பான மாவட்டநிலையிலான அதிகாரிகளுக்கும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன, எனினும் அரசு வழக்கறிஞர்களும்/சிறப்பு அரசு வழக்கறிஞர்களும் அந்த அறிவுறுத்தல்களின்படி நடப்பதில்லை' என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆத்திரமடைந்த காவல்துறை கூடுதல் டி.ஜி.பி. ஒத்துழைப்புதராத அரசு வழக்கறிஞர்கள்/சிறப்பு அரசுவழக்கறிஞர்களின் பெயர்ப் பதிவேட்டைதயார் செய்து இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்துக்குக் கொண்டுசெல்லவேண்டும் என்று சட்ட நடவடிக்கைக்கான இயக்குநரிடம் கூறியிருக்கிறார்.

வன்கொடுமைகள் தடுப்புவழக்குகள் தொடர்பாக மாவட்ட அளவில் பொறுப்பான அதிகாரிகள் மீது அழுத்தம் தரவேண்டும் என்றும் குறிப்பிட்டகால முறைப்படி பணிகளை செய்யவைக்கவேண்டும் என்றும் சட்ட நடவடிக்கைக்கான இயக்குநருக்கு கூடுதல்தலைமைச் செயலாளர் அறிவுறுத்தியிருக்கிறார்.

மாவட்ட அளவிலான உயர்நிலைக் குழுக்களின் கிருஷ்ணா பாய்வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு இணங்க தமிழ்நாடு காவல்துறை தலைவர் அலுவலகம் பிறப்பித்த RC.No.053884/Crime.43]/2014 26.04.2016 தேதியிட்ட சுற்றறிக்கையின்படி அமைக்கப்பட்டவை] அறிக்கைகள் இதையே உறுதிப்படுத்துகின்றன. இந்தக் குழுவில் மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளரும் சட்டநடவடிக்கைக்கு பொறுப்பானவரும் அடங்கியுள்ளனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலைசெய்யப்படும் வழக்குகள் குறித்து இந்தக் குழு ஆய்வுசெய்து பொறுப்பை நிர்ணயிக்கும். எல்லா வழக்குகளிலும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவதற்கு அரசுவழக்கறிஞர்தான் காரணமாக இருக்கிறார் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

பிரச்சினை குறித்து பெருமளவில் சான்றுகளும் உள்ளுக்குள் விழிப்புணர்வும் இருந்த போதிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2008—ம் ஆண்டுக்கான பழங்குடிவகுப்பினர் தேசிய ஆணையத்தின் 4—வது அறிக்கையின் பரிந்துரைகள்அடிப்படையில், சிறப்பு அரசு வழக்கறிஞர்களை[SPP] தேர்வுசெய்வதற்கு ஒரு கொள்கை வகுக்குமாறு பழங்குடியினர் அலுவல்கள்துறை அமைச்சரிடம் இருந்து DO No 18012/3/2011-C&LM-I – 24 ஜூன் 2016 தேதியிட்டது]1 தெளிவாகப் பரிந்துரைசெய்யப்பட்டிருக்கிறது. இது ஏற்கெனவே 1994—96 மற்றும் 1998—99—ம் ஆண்டுகளுக்கான, தேசிய தாழ்த்தப்பட்டோர், பழங்குடிவகுப்பினர் ஆணையத்தின் NCSCST] அறிக்கைகளில் அடங்கியுள்ள சட்டநடவடிக்கைக்கான

இயக்குனர் சிறப்பு அரசு வழக்கறிஞர்கள் SPP] தேர்வு செய்யப்படுவதை உறுதிசெய்யவேண்டும் என்றபரிந்துரைகளை மீண்டும் வலியுறுத்துகிறது.

*13. [...]நன்கு வகுக்கப்பட்ட நடைமுறைகளின் மூலமாக செய்யப்படவேண்டும். para 6.12.8]*

*14. எனவே, வன்கொடுமைக் குற்றங்களைத் தடுப்பதற்கு பயனுள்ள முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கும், அந்த வழக்குகளில் 1989—ம் வருடத்திய தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடிவகுப்பினர் வன்கொடுமைகள் தடுப்பு] சட்டத்தை பயனுள்ள முறையில் அமலாக்குவதை உறுதிப்படுத்துவதற்கும் முழு கவனத்தை செலுத்தக்கூடிய அணுகுமுறையை மேற்கொள்வதற்கு ஒரு கொள்கையை வகுக்கவேண்டியது தவிர்க்க முடியாத தேவை என்று ஆணையம் பரிந்துரை செய்துள்ளது என்பதை சட்ட நடவடிக்கைக்கான இயக்குநரகம் உறுதிப்படுத்த வேண்டும் para 6.12.9].*

மேலே குறிப்பிட்டிருப்பது தமிழ்நாடு காவல்துறையின் இணையதளத்தில் உள்ளது. கோப்பில் அடிக்கோடிட்ட கொள்கையுடன் கோப்புக் குறியிடல்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த பத்தாண்டுகளில் ஏன் அத்தகைய கொள்கை வகுக்கப்படவில்லை என்பது புதிரா கஉள்ளது. பதிலாக, 2019 வாக்கில் போலீஸ்கூடுதல் டிஜிபியும் ADGP] சட்ட நடவடிக்கைக்கான இயக்குநரும் ஒருவர் மீது ஒருவர் பழிசுமத்துவதைப் பார்க்க முடிந்தது.

## 13. வேண்டுமென்றே கடமையை செய்யத் தவறியதற்காக SC/ST அல்லாதஅலுவலர்கள் தண்டிக்கப்படுதல்

*அதிகாரியின் கடமைகள், வேண்டுமென்றே கடமையை செய்யத் தவறுதல், அதற்கானதண்டனைகள் பற்றி பிரிவு 4 விளக்குகிறது.*

மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர், காவல்துறை ஆணையர் ஆகியோர் ஒவ்வொருமாதமும், அரசு வழக்குரைஞர்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுசெய்யவேண்டும்.

SC/ST அல்லாத அதிகாரிகள் யாருமே வேண்டுமென்றே கடமையைசெய்யத் தவறியதற்காக நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவில்லை. மோசமானசெயல்பாடு, வரையறுக்கப்பட்டுள்ள சட்டப்பூர்வதர நிலைகளை அடையாதது, அக்கறையற்ற செயல்பாடுகள் ஆகிய நிலைமைகளிலும் கூட அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

- 59ரூ வழக்குகளில் விசாரணை நடத்தப்படவில்லை, 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்படவில்லை. [விதி 72A)]
- 81ரூ வழக்குகளில் உரியநபர்/நபர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாய்வுத் தொகைவழங்கப்படவில்லை. (விதி 124) பாதிக்கப்பட்ட 5,104 பேரில் 71 பேருக்குமட்டுமே வெறும் 1ரூ போக்குவரத்து மற்றும் பராமரிப்புத் தொகை வழங்கப்பட்டது.
- 2018ஆம் ஆண்டில் மட்டுமே 648 வழக்குகளில், குற்றம் சாட்டப்பட்டோர் விடுவிக்கப்பட்டதில் முடிந்தன. 2016–18 காலகட்டத்தில் 2,233 குற்றவிடுதலைகள்). எனினும், ஒரு மேல்முறையீடு கூட செய்யப்படவில்லை.

கடமையைசெய்யத் தவறியதற்கான ஆவணப்பூர்வ ஆதாரங்கள் உள்ளபோதிலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை (விதி 42)ன் கீழ் எந்த அதிகாரியின் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை, அல்லது திறமைக் குறைவுக்காக வழக்குகளில் குற்றவாளிகள் என அறிவிக்கப்படுவது மிகக் குறைவாக இருப்பது, நிவாரணங்கள் தாமதமாக வழங்கப்படுவது உள்ளிட்ட நிலைமைகள்) பணியிலிருந்து மாற்றப்படவில்லை.

**14. பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் பாதுகாப்பு**
நீதியைப் பெறுவதற்குபாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உள்ள உரிமைகள் மற்றும் உரிமைத் தகுதிகள் குறித்து சட்டத்தின் 15 Aபிரிவு குறிப்பிடுகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உள்ள இந்த உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்வது மாநில அரசின் கடமையாகும். இந்த உரிமைகளை அவர்கள் பயன்படுத்த முடியும். 2018—ன் ஆண்டு அறிக்கை சட்டத்தின் அத்தியாயம் IVA, பிரிவு 15A, உள்பிரிவு 11—ல் குறிப்பிட்டுள்ளதைப்போல நீதியைப் பெறுவதற்கு பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உள்ள உரிமைகள் மற்றும் உரிமைத் தகுதிகள் இந்தச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படுகிற ஒவ்வொரு வழக்கின் உள்ளேயும் தொகுத்தளிக்கப்படுகின்றன பாரா 3, ஆண்டு அறிக்கை 2018) என்று குறிப்பிடுகிறது.

எனினும், அரசாங்கத்தின் ஒரே துறை மற்றும் எழுத்தாக்கம் செய்வோர் உள்ளே நடைபெறும் விவாதங்கள் இந்தக் கருத்து சரியானது என்று சொல்வதாகத் தோன்றவில்லை. குற்றத்தில் இருந்து விடுதலை செய்யப்படும் விகிதம் அதிக அளவில் இருப்பது குறித்து, கடந்த 2019 மார்ச் 26—ல் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கும்போது இடையீடு செய்த சட்டநடவடிக்கைக்கான இயக்குநர், பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பகுதியினர் வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் இருக்கும் போது வழக்குக்கு எதிராகமாறி விடுகின்றனர் என்பதைவிளக்கினார். குற்றம் இழைத்தவர்கள்தரும் நிர்பந்தங்களும் மிரட்டல்களுமே பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் வழக்குக்கு எதிராகமாறுவதற்குக் காரணம். இந்தஅச்சுறுத்தல்களுக்குஉள்ளூர் போலீசார் உடந்தையாக இருப்பதை விட்டு விட்டாலும் கூட, கூட்டாகளுதுழசு மற்றும் காவல்துறையின், குறிப்பாகபுலன் விசாரணை அதிகாரியின் கடமைதவறலையே இது தெளிவாகக் காட்டுகிறது. ஏனெனில், பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள், தகவல்அளிப்போர் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களை பாதுகாக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை ஆகும் திருத்தப்பட்ட சட்டத்தின் பிரிவு 15A 9)).

ஒவ்வொரு சம்பவத்தின் போதும், சம்பவ இடத்தை பார்வையிட்ட பிறகு, விதி 127)—ன் கீழ் மாவட்ட ஆட்சியர் சிறப்பு

நீதிமன்றங்களுக்கு அறிக்கை தாக்கல் செய்யவேண்டும். பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள், தகவல் அளிப்போர் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு குறித்து நீதிமன்றங்கள் தொடர்ந்து குறிப்பிட்டகால இடைவெளியில் ஆய்வுசெய்து உரிய ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் என்று கருதப்படுகிறது பிரிவு 15A 7]].

இத்தனை ஆண்டுகளில் 127] விதியின் கீழ் அறிக்கைகள் அனுப்பப்படவில்லை என்பதையும், திருத்தப் பட்டசட்டத்தின் 15 A பிரிவின் கீழ் எந்தஆணைகளையும் அரசு பெறவில்லைஎன்பதையும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் RTI] கீழ் கேட்ட கேள்விகளுக்கு வந்த பதில்கள் காட்டுகின்றன. 15A7]பிரிவின் கீழ் தலைமை அதிகாரி பெற்ற ஆணைகள் குறித்த RTI வேண்டுகோள் உள்துறைக்கு நீதிமன்றங்கள் II] அனுப்பிவைக்கப்பட்டது; பின்னர் அதுசென்னை உயர் நீதிமன்றதுணைப் பதிவாளருக்கு அனுப்பப்பட்டது. எனவே, சட்டத் திருத்தத்துக்கு 5 ஆண்டுகளுக்குப் பிறகும், சட்டத்தின் 15 A பிரிவை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை என்பது தெளிவு.

**மத்திய விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவின் [CVMC] பரிந்துரைகள்**

வன்கொடுமையில் உயிர் பிழைத்தவர்கள், சாட்சிகள், தகவல் அளிப்பவர்கள் ஆகியோருக்கான பாதுகாப்பு என்பது, வன்கொடுமை தடுப்பு திருத்தச் சட்டத்தின் அத்தியாயம் IVA, 15 A பிரிவின் முக்கியமான சட்டப் புதுமை ஆகும். ஹிதை எழுத்திலும் செயலிலும் அமலாக்கவேண்டியது நீதிமுறையின் நோக்கங்களுக்காக மட்டுமல்லாமல், சட்டத்தின் ஆட்சியின் மீதும் அரசு வழிமுறைகளின் பாகுபாடற்றதன்மை குறித்தும் சமுதாயத்தினால் விலக்கிவைக்கப்பட்ட சமூகங்கள் நம்பிக்கை கொள்வதற்கும் அவசியமாகும்.

1. ‘சம்பந்தப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின்’ சூழுடஉ] பெயர்கள் முதல்தகவல் அறிக்கையிலும்/புகாரிலும் குறிப்பிடப்படுவதை உறுதிசெய்யவேண்டும்; இடையீட்டின் அனைத்துக் கட்டங்களிலும் அவர்களுக்கும் தகவ ல்தெரிவிக்கவேண்டும். இந்தத் தனிமனிதர்களை உயிர் பிழைத்தவர்கள், நீதிமன்றங்கள் மற்றும் போலீசாரின் சார்பில்

நீதியை எடுத்துக் கூறும் நண்பர்களாக நடத்தவேண்டும். அவர்கள் தங்கள் கடமையை சிறப்பாகச் செய்வதற்கு உதவி வழங்கவேண்டும்.

2. அவ்வப்போது நீதிமன்றங்கள் பிறப்பிக்கும் ஆணைகள் எழுத்துவடிவில் இருக்கவேண்டும்; இவை உள்கோட்ட, மாவட்ட, மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவின் கூட்டங்களில் விவாதிக்கப்பட வேண்டும்.

## 15. எதிர்பாரா நிலைமைக்கான மாதிரி திட்டம்

*சட்டத்தின் ஏற்பாடுகளை செயல்படுத்துவதற்காக, எதிர்பாரா நிலைமைக்கான ஒரு திட்டம் உருவாக்கப்படுதல் மற்றும் அரசிதழில் அது வெளியிடப்படுதல் [விதி 15].*

திருத்தப்பட்ட சட்டம், திருத்தப்பட்ட விதிகளின் அடிப்படையில் மாதிரி திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிக்கை அரசிதழில் 2017 செப்டம்பர் 1 அன்று வெளியிடப்பட்டது.

'எதிர்பாரா நிலைமைக்கான திட்டத்தை அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துவருகிறது, என்று ஆண்டறிக்கை 2016 கூறுகிறது. ஆனால், 2017 ஜுலை வாக்கில் தகவல்உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்டபதிலில் இது அரசின் பரிசீலனையில் உள்ளது' என்று கூறப்பட்டுள்ளது *RTI* பதில் எண்.12280/*RTI* எண்.148/*PA*–2/2017–1, தேதி: 14.72017]]. இறுதியாக அந்தத் திட்டம் அரசிதழில் 2017 செப்டம்பர் 1 அன்று வெளியிடப்பட்டது *RTI* பதில் எண்.14828/*RTI* எண்.208/*PA*–2/2017–2, தேதி:12.10.2017]].

**16. தமிழில் இருக்கிறதா?**

தமிழ் மொழிபெயர்ப்பை விரைவுபடுத்தவேண்டும் என்று கூடுதல்தலைமைச் செயலாளர் கேட்டுக் கொண்டபிறகும் ஆய்வுக் கூட்டம், 26 மார்ச் 2019], சட்டமும், விதிகளும் திருத்தப்பட்டு 5 ஆண்டுகள் ஆனதற்குப் பின்னரும், சட்டம் மற்றும் விதிகள் இன்னும் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை. தமிழ்நாடு அரசின் எதிர்பாரா நிகழ்வுகளுக்கான திட்டம் 15—வது விதியின் கீழ்] தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் இருக்கிறது.

**17. சட்ட உதவி**

சட்டஉதவிக்காக சட்டத்தின் 21 2] ை] பிரிவின் கீழ் திட்டவட்டமான நிதி எதுவும் இல்லை. ஹிலவச சட்ட உதவித் திட்டத்தின் கீழ் உள்ள நிதிகள்GO Ms] 373 உள்துறை நீதிமன்றம் I], 9 மார்ச் 1995 தேதியிட்டது]] வேண்டும் என்று கேட்போருக்காக பயன்படுத்தப்படுகின்றன. இந்தத் திட்டம் தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையத்தினால் நிர்வகிக்கப்படுகிறது.

சென்னையில் தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையத்தில் உள்ள சட்டஉதவிமையக் கட்டடத்தில் பொதுவான சட்டஉதவிக்காக இலவச உதவிக்கரம் **(helpline)** தொலைபேசி செயல்படுகிறது. க்ஷதாலைபேசி அழைப்புகளைக் கவனித்து ஆலோசனை கூறுவதற்காக எல்லாவேலை நாட்களிலும் காலையிலும் மாலையிலும் மாறி மாறி வழக்கறிஞர்கள் அனுப்பப்படுகிறார்கள் 044–25342441 or 1800–4252–441 கட்டணம் இல்லை]. இது ஒரு பொதுவான உதவி எண்; வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகளுக்கு என்று தனியாக எந்த எண்ணும் இல்லை.

## இணைப்பு1: மறுஆய்வுக் கூட்ட அறிக்கை, 7 பிப்ரவரி2019, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

பட்டியல் சாதிகள் / பட்டியல் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு] விதிகள் 1995 இன் விதி 16 ன் படி மாநில கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை குழு கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்க கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜேனரல், அரசு கூடுதல்தலைமைச் செயலாளரின் அரங்கிலுள்ள சமூகநீதிமற்றும் மனிதஉரிமைகள் மற்றும் கூடுதல்ஆதிதிராவிடர் நலம் இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆகியவர்களுடன் ஒரு கூட்டம் 07.02.2019 அன்று மாலை 03.30 மணிக்கு நடைபெற்றது.

பின்வரும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஓடெம் டாய், ஐ.ஏ.எஸ் | அரசு கூடுதல்தலைமைச் செயலாளர் |
| 2. | திரு. கே.வி.முரளிதரன், ஐ.ஏ.எஸ் | ஆதிதிராவிடர் நலம் இயக்குநர் |
| 3. | திரு. இ. இம்மானுவேல் கிருபாகரன் | அரசு துணைசெயலாளர் |
| 4. | திரு.ஷைலேஷ்குமார் யாதவ் ஐ.பி.எஸ். | கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜெனரல் |
| 5. | திரு. இ.விஜயகுமார் | உதவிகாவல்துறை கண்காணிப்பாளர், சென்னை |
| 6. | திரு. என்.கருணாநிதி | துணைகாவல்துறை கண்காணிப்பாளர் |

கூட்டத்தின் போது *பபி* கூடுதல்தலைமைச் செயலாளரின் அறிவுறுத்தல்களின் படி, இந்தவிஷயத்தைகையாளும் சம்பந்தப்பட்டஅதிகாரி, ஜூலை 2018ல் மாண்புமிகுமுதலமைச்சரின் அலுவலகத்திற்குமாநிலகண்காணிப்புமற்றும் மேற்பார்வை குழு கூட்டத்தின் தேதி மற்றும் நேரத்தை நிர்ணயிப்பதற்கான கோரிக்கையுடன் ஒரு கோப்பு அனுப்பப்பட்டதாகக் கூறினார்.

இதன் விளைவாக, மாண்புமிகு முதலமைச்சரின் முதன்மை செயலாளர் || ஆதிதிராவிடர் நலம் இயக்குநரை தொலைபேசியில் தொடர்புகொண்டு, முன்மொழியப்பட்ட கூட்டத்தின் நிகழ்ச்சிநிரலில் சேர்க்கப்படவேண்டிய விஷயங்களை குறித்து சில வழிமுறைகளை வழங்கினார். எனவே, 27.08.2018 தேதியிட்ட அரசு கடிதத்தில், ஆதிதிராவிடர் நலம் இயக்குநர், முதலமைச்சர் அலுவலகம் வழங்கிய அறிவுறுத்தல்களின் படி நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும் படி கேட்டுக்கொள்ளப்பட்டார், மேலும் கூட்டத்தை நிர்ணயம் செய்வதற்காக அதை அரசிற்கு அனுப்பினார். இதற்கிடையில், ஆதிதிராவிடர் நலம் இயக்குநர், மாநில கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை குழு கூட்டத்தில் உறுப்பினர்களாக இருக்கும் தகுதி இழந்த எம்.எல்.ஏக்கள் குறித்த விஷயத்தை எழுப்பினார். இது தொடர்பாக, கூடுதல்தலைமைச் செயலாளர் ஆதிதிராவிடர் நலம் இயக்குநருக்கு கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜேனரலிடமிருந்து பெறப்பட்ட தேவையான விவரங்களை அரசுக்கு உதவும் வகையில் முதலமைச்சர் அலுவலக அறிவுறுத்தல்களுக்காக கோப்பை சமர்ப்பிக்க உத்தரவிட்டார்.

இதனையடுத்து, வன்கொடுமைகளைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வழக்குகள் குறித்து விளக்கமளித்து கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜேனரல் விவரங்களை கூடுதல்தலைமைச் செயலாளருக்கு வழங்கினார். விவரங்களின்படி, 2018–ம்ஆண்டின் இறுதியில் 426 வழக்குகள் புலனாய்வின் கீழும் மற்றும் 4,594 வழக்குகள் குற்றவி சாரணை நிலுவையில் உள்ளன என்றும் மற்றும் தண்டனைவிகிதம் 7.83ரூ ஆகும் என்றும் இருக்கிறது. 2018–ம் ஆண்டில் மொத்தம் 30 வழக்குகள் கொலை வழக்குகளாகவும் 97 வழக்குகள் கற்பழிப்பு மற்றும் போக்ஸோ வழக்குகளாகவும் பதிவாகியுள்ளன. வன்கொடுமை தொடர்பான வழக்குகளில் தேவையான அளவிலான தண்டனையை அடைவதற்கு அரசு பொதுவழக்குரைஞர்கள் / சிறப்பு அரசுவழக்குரைஞர்கள் தரப்பில்

மோசமான செயல்திறன் மற்றும் ஒத்துழைப்பு இல்லாதது முக்கியதடையாக இருப்பதாக கூடுதல்காவல்துறை தலைமை இயக்குநர் தெரிவித்தார். மேற்கூறிய வழக்குகளில் முழு ஈடுபாட்டைப் பெறுவதற்காக, பிரமாணப் பத்திரம் தயாரித்தல் மற்றும் வன்கொடுமை தொடர்பான வழக்குகளை கையாள்வதற்கான பயிற்சி அரசு பொதுவழக்குரைஞர்கள் / சிறப்பு அரசு வழக்குரைஞர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று கூடுதல்தலைமைச் செயலாளர் பரிந்துரைத்தார். கூடுதல்தலைமைச் செயலாளர், மாதாந்திர கூட்டம் ஒவ்வொரு மாதமும் 22 ஆம் தேதி ஒரே மாதிரியாக நிர்ணயிக்கப்படவேண்டும் என பரிந்துரைத்தார். கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து அதிகாரிகளும் இந்த ஆலொசனையை ஒப்புக்கொண்டனர். மேற்கண்ட கலந்துரையாடல்களுடன், கூட்டம் நிறைவுற்றது.

அரசு கூடுதல் தலைமைசெயலாளர்.
// உண்மை நகல் //
எஸ்.உமாமஹேஸ்வரி, பிரிவு அதிகாரி.

**இணைப்பு 2: மறுஆய்வுக் கூட்ட அறிக்கை, 22 மார்ச் 2019, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை**

கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜேனரல், சமூகநீதி மற்றும் மனிதஉரிமைகள் மற்றும் அரசின் கூடுதல் சிவில் செயலாளர் அமைப்பிலுள்ள இதர சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பட்டியல் சாதி / பட்டியல் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு] சட்டம் 1989 வகையைக் குறிக்கும் மீள்பார்வை செய்யும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆகியவர்களுடன் ஒரு கூட்டம் 26,03.2010 அன்று மாலை 03.00 மணிக்கு நடைபெற்றது. பின்வரும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஓடெம் டாய், ஐ.ஏ.எஸ் | அரசு கூடுதல்தலைமைச் செயலாளர் |
| 2. | திரு. கே.வி.முரளிதரன், ஐ.ஏ.எஸ் | ஆதிதிராவிடர் நலம் இயக்குநர் |
| 3. | திரு. ரிட்டோசிரியாக், ஐ.எஃப்.எஸ் | பழங்குடிநல இயக்குநர் |
| 4. | திரு.ஷைலேஷ்குமார் யாதவ் ஐ.பி.எஸ். | கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜெனரல் |
| 5. | திரு. T.R.Sராமமூர்த்தி, பி.பி.ஏ., பி.எல்., | வழக்குரைஞர் இயக்குநர் பொறுப்பாளர்] |
| 6. | திரு. இ. இம்மானுவேல் கிருபாகரன் | அரசு துணைசெயலாளர் |
| 7. | திரு. என்.கருணாநிதி | துணைகாவல்துறை கண்காணிப்பாளர் |

நிகழ்ச்சிநிரலின் படி, கூட்டம் தொடங்கியதும் வன்கொடுமைகள்தொடர்பான வழக்குகளை மறுஆய்வு செய்தது. வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்து கூடுதல் காவல்துறை இயக்குநர் ஜேனரல் விளக்கினார் மற்றும் விவரங்களை அரசின் கூடுதல்தலைமைச் செயலாளரிடம் ஒப்படைத்தார். விவரங்களின்படி, பிப்ரவரி 2019 நிலவரப்படி 464 வழக்குகள் புலனாய்வின் கீழும் 4,633 வழக்குகள் விசாரணையிலும் உள்ளன. தண்டனை விகிதம் 7.14 ரூ இதுவரை, 50 வழக்குகள் கொலை வழக்குகளாகவும், 37 வழக்குகள் கொலைமுயற்சி வழக்குகளாகவும் பதிவாகியுள்ளன. 1,327 வழக்குகள் தொடர்பாக, பாதிக்கப்பட்ட 2,356 பேருக்கு 28.02.2019 நிலவரப்படி ரூ.2023.95 லட்சம் நிவாரணம் பணமாக வழங்கப்பட்டுள்ளதாக கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜேனரல் தெரிவித்தார். கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜேனரல், ’கொலை’ குற்றத்தைப் பொறுத்தவரை, மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது இந்த விகிதம் ஒப்பீட்டளவில் தமிழ்நாட்டில் குறைவாக உள்ளது என்று கூறினார். இருப்பினும், மோசமானவழக்குமற்றும் பொது அரசு வழக்குரைஞர்கள்/ சிறப்பு பொது அரசுவழக்குரைஞர்கள் தரப்பில் ஒத்துழைப்பு இல்லாதது வன்கொடுமை வழக்குகளில் தண்டனை விகிதத்தை உயர்த்துவதற்கான முக்கியதடையாக இருக்கிறது. இந்த சூழலில், வழக்கு விசாரணையின் போது பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பிறழ்கின்றவர்களாக இருக்கிறார்கள்என்றும், சிறப்பு நீதிமன்றங்கள் / அமர்வு நீதிமன்றங்கள் வழக்குகளை அற்பத்தனமான காரணங்களுக்காக விடுவிக்கின்றன என்றும் வழக்கு விசாரணையின் இயக்குநர் தலையிட்டு விளக்கினார். சட்டத்தில் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டிருந்தாலும், அரசு ஊழியர்களின் கடமைகளை அலட்சியம் செய்வதும், பொது அரசு வழக்குரைஞர்கள் வழக்கமான பணியாளர்களாக நியமிக்கப்படுவதில்லை, அதிகாரத்திலிருக்கும் அரசால் நியமிக்கப்படுகிறார்கள்,

அவர்களின் அணுகுமுறை பல வழக்குகளில் மற்றும் அவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் தண்டனைக்குரியவையாக முடிவடைகின்றன.

தண்டனையின் விகித அளவை உயர்த்துவதற்கும், பிரத்தியேக சிறப்பு நீதிமன்றங்களில் பணிபுரியும் அரசு வழக்குரைஞர்கள் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதற்கும் அரசுத்துறை மேற்கொண்ட நடவடிக்கை குறித்து கூடுதல்தலைமைச் செயலாளர் வழக்குரைஞர் இயக்குநரிடம் விசாரித்தார். இந்த வன்கொடுமை வழக்குகளை மறுஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் வழக்கு விசாரணைக்கு பொறுப்பான மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு பொருத்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று அரசு வழக்கறிஞர் பதிலளித்தார். இருப்பினும், அரசு வழக்குரைஞர்கள்/ சிறப்பு அரசு வழக்குரைஞர்கள் அறிவுறுத்தல்களுக்கு பதிலளிக்கவில்லை. ஒத்துழைக்காத அரசு வழக்குரைஞர்கள்/ சிறப்பு அரசு வழக்குரைஞர்கள் பெயர்களை பதிவுசெய்து இந்த விஷயத்தை அரசின் கவனத்திற்கு கொண்டுவருமாறு கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜெனரல் அரசு வழக்கறிஞருக்கு பரிந்துரைத்தார். மாவட்ட மட்டத்தில் பொறுப்பான அதிகாரிகள் மீது வன்கொடுமைகளைத் தடுக்கும் வழக்குகளை மறுஆய்வு செய்வது தொடர்பாக அழுத்தம் கொடுக்கவும், அவ்வப்போது பணிகளைச் செய்யவும் வழக்குரைஞர் இயக்குநருக்கு கூடுதல்தலைமைச் செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட பணநிவாரணத்திற்கான செலவு குறித்து கூடுதல்தலைமைச் செயலாளர் ஆதிதிராவிடர்நல இயக்குநரிடம் விசாரித்தார்.7 அல்லது] 8 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரங்களைப் பெறவும், பணநிவாரணம் வழங்க அனுமதிபெறும் வழிமுறையை நிறைவேற்றவும் அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதற்கிடையில், கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜேனரல் பதவியில் உள்ள காலியிடங்கள் குறித்து விவாதித்தார்:

1. மானிடவியலாளர் 1 இடுகை] – கடலூர், திருவள்ளூர், நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர்
2. மூன்று சிறப்பு நீதிமன்றநீதிபதிகள் – விழுப்புரம், மதுரை மற்றும் திருநெல்வேலி உள்ள சிறப்பு நீதிமன்றங்கள்
3. சமூகவியலாளர் பதவி மற்றும் சமூகநீதி மற்றும் மனிதஉரிமைகள் பிரிவில் பொருளாதாரநிபுணர் பதவியை நிரப்புதல்.
4. புள்ளியியல் ஆய்வாளர்களின் 16 பதவிகளை நிரப்புதல்.

இறுதியாக, கூடுதல்தலைமைச் செயலாளர் திராவிடர் நலம் இயக்குநருக்கு பட்டியல் சாதிகள் / பட்டியல் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு] விதிகள் 1995–ன் மொழிபெயர்ப்பின் பணிகளை விரைவுபடுத்தவும், பணிகளை விரைவாக முடிக்கவும் அறிவுறுத்தினார். மேற்கண்ட கலந்துரையாடல்களுடன், கூட்டம் முடிவடைந்தது.

ஓடெம் டாய்,
அரசு கூடுதல்தலைமை செயலாளர்.
// உண்மைநகல் //
எஸ்.உமாமஹேஸ்வரி, பிரிவு அதிகாரி.
.

## இணைப்பு 3: மறுஆய்வுக் கூட்ட அறிக்கை, 22 மே 2019, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

பட்டியல் சாதிகள் / பட்டியல் பழங்குடியினர் வன்கொடுமைதடுப்பு] சட்டம் 1989 அமுல்படுத்துவது தொடர்பாக மீள்பார்வை செய்திட கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜேனரல், சமூகநீதி மற்றும் மனிதஉரிமைகள் மற்றும் கூடுதல்தலைமைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அறையில் சம்பந்தப்பட்ட பிற அதிகாரிகளுடன் 22.05.2019 அன்று மாலை 04.00 மணிக்கு ஒரு கூட்டம் நடைபெற்றது.

பின்வரும் உறுப்பினர்கள்கலந்துகொண்டனர்.

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஓடெம் டாய், ஐ.ஏ.எஸ் | அரசு கூடுதல்தலைமைச் செயலாளர் |
| 2. | திரு. கே.வி.முரளிதரன், ஐ.ஏ.எஸ் | ஆதிதிராவிடர் நலம் இயக்குநர் |
| 3. | திரு.ஷைலேஷ்குமார் யாதவ் ஐ.பி.எஸ். | கூடுதல் காவல்துறை இயக்குநர் ஜெனரல் |
| 4. | திருமதி. ஜி.சுபுலட்சுமிஐ.பி.எஸ் | உதவி காவல்துறை இயக்குநர் ஜெனரல் |
| 5. | திரு. வி.ராஜேந்திரன் | அரசு துணைசெயலாளர் |
| 6. | திரு.என்.கருணாநிதி | துணைகாவல்துறை கண்காணிப்பாளர் |
| 7. | திரு. யுவராஜ் | துணைகாவல்துறை கண்காணிப்பாளர் |

பட்டியல் பழங்குடியினர் சமூக சான்றிதழ்களை சரிபார்ப்பது தொடர்பான விவாதத்துடன் கூட்டம் தொடங்கியது. சரிபார்ப்பு செயல்முறையின் நிலை, மானுடவியலாளர்களிடமிருந்து அறிக்கைகள் தேவைப்படும் நிலையில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை குறித்து கூடுதல்தலைமைச் செயலாளர் கூடுதல்காவல்துறைதலைமை இயக்குநரிடம்

விசாரித்தார். குறிப்பிடப்பட்ட மொத்தமுள்ள 2,374 வழக்குகளில், 1,438 வழக்குகளில் விசாரணைதுணை போலீஸ் சூப்பிரண்டு / உதவி காவல்துறை கண்காணிப்பாளரால் முடிக்கப்பட்டதாக கூடுதல் காவல்துறை இயக்குநர் ஜேனரல் அறிக்கையிட்டார். விசாரணை முடிந்த வழக்குகளில், 1,260 வழக்குகள் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளன, மேலும் 178 வழக்குகள் மானுடவியலாளர்களிடமிருந்து அறிக்கை பெறவேண்டிய நிலையில் நிலுவையில் உள்ளன. இதுதொடர்பாக, சரிபார்ப்பு செயல்முறையை விரைவாக முடிப்பதற்காக மானுடவியலாளர்களுடன் ஒரு சந்திப்பை நடத்துவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கூடுதல்தலைமைச் செயலாளர் சம்பந்தப்பட்ட பிரிவுக்கு உத்தரவிட்டார். சமூக சான்றிதழ்சரிபார்ப்பு பிரிவில் இருந்து விவரங்களை சேகரிக்கவும், அடுத்தடுத்த மாதாந்திர கூட்டங்களில் வழக்குகளின் கட்டத்தை வழங்கவும் கூடுதல் தலைமைசெயலாளர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். துணைகாவல்துறை கண்காணிப்பாளர் பதவிகளை நிரப்புவதைப் பொறுத்தவரை, கூடுதல்தலைமைச் செயலாளர் காவல் / உள்துறைதுறை இயக்குநர் ஜேனரலை உரையாற்ற அறிவுறுத்தினார்.

இதனையடுத்து, வன்கொடுமைதடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்து கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜேனரல் விளக்கமளித்து விவரங்களை கூடுதல்தலைமைச் செயலாளரிடம் ஒப்படைத்தார். விவரங்களின் படி, 511 வழக்குகள்புலன் விசாரணையில் உள்ளன, 4,657 வழக்குகள் குற்றவிசாரணை நிலுவையில்உ ள்ளன. சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு மேற்கொண்ட பயனுள்ள நடவடிக்கைகள் காரணமாக, தண்டனை விகிதம் 7.85ரூ முதல் 11.40ரூ வரை உயர்த்தப்பட்டுள்ளதாக கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜேனரல் தெரிவித்தார். நிலுவையில் உள்ள குற்றவிசாரணை வழக்குகள்

குறித்து விவாதிக்கும் போது, கூடுதல்தலைமைச் செயலாளர் மேலும் 16 மாவட்டங்களில் பிரத்யேக சிறப்பு நீதிமன்றங்களை அமைப்பது குறித்து பிரிவு அதிகாரிகளிடம் விசாரித்தார், மேலும் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நீதிமன்றங்களை அமைக்க உள்துறைக்கு ஒரு குறிப்பை அனுப்பவும் அறிவுறுத்தினார்.

வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் ஆதிதிராவிடர் காலனிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதைப் பொறுத்தவரை, ஆதிதிராவிடர் நலம் இயக்குநர், கிராமஅபிவிருத்தி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை மூலம் நிதி ஒதுக்கீட்டின் 'நிதிபகிர்வு' கீழ் நிறைவேற்றப்படவுள்ள பணிகளை அடையாளம்காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தகவல் அளித்துள்ளார். கிராமப்புற மேம்பாட்டுத்துறையால் நிறைவேற்றப்படும் பணிகளைக் கண்காணிப்பதில் அரசு / மாவட்ட ஆட்சியர்கள் / முக்கிய பங்கு வகிப்பார்கள் என்று கூடுதல்தலைமைச் செயலாளர் கூறியுள்ளார், எனவே மேற்கூறிய பிரச்சினை மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் ஒரு பகுதி அதிகாரப்பூர்வ கடிதத்தைவைக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், ஊரக வளர்ச்சி இயக்குநருடன் அமர்ந்து பணிகளை நிறைவேற்ற முன்னுரிமை அடிப்படையில் கிராமங்களைத் தேர்ந்தெடுக்கவும் அறிவுறுத்தினார்.

வகுப்புவாதநல்லிணக்கத்தைப் பற்றி விவாதிக்கும் போது, கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜேனரல் சமூகத்தில்நிலவும் இரண்டு காரணிகள் உள்ளன, அவை பட்டியல் சாதியினருக்கும், பட்டியல் அல்லாத சாதிகளுக்கும் இடையிலான பகைமையை தீர்மானிக்கின்றன என்றார். அவை 1. கல்வி 2. மக்களின் மனநிலை. கல்வியறிவு விகிதம் அதிகமாக உள்ள நகரங்களில், சமூக அடிப்படையிலான பாகுபாடு குறைவாக உள்ளது. கிராமப்புறங்களில் நிலைமை அப்படியல்ல. கூடுதல்தலைமைச்

செயலாளர் தலையிட்டு, வகுப்புவாதநல்லிணக்கத்தைப் பொருத்தவரை, பட்டியல்ச ாதியினர் மற்றும் பட்டியல் அல்லாத சாதியினரின் இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அரசு இடைநிலை பங்கை வகிக்கவேண்டும் என்று கூறினார். பல்வேறு மாவட்டங்களில் கைகளால் துப்புரவுசெய்யும் தொழிலாளர்களின் மரணம் குறித்து பட்டியல் சாதியினருக்கான தேசிய ஆணையத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டிய அறிக்கையை விரைவுபடுத்துமாறு கூடுதல்தலைமைச் செயலாளர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இறுதியாக, கூடுதல்தலைமைச் செயலாளர், 2019–2020 வரவுசெலவுத் திட்டமதிப்பீட்டில் மொத்தமாக ரூ .11.87 கோடி ஒதுக்கீட்டில், வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நடவடிக்கைகளுக்கான செலவினங்களின் நிலை குறித்து விசாரித்து, அனைத்துநிதிகளையும் நிதிகளின் கூடுதல் தேவைகளின் உண்மையான நிலைமைக்கு ஏற்ப ஏற்கனவே மாவட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிகளை உறுதிசெய்ய ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அறிவுறுத்தினார்.

மேற்கண்ட கலந்துரையாடல்களுடன் கூட்டம் முடிந்தது.

ஓடெம் டாய்,
அரசு கூடுதல்தலைமை செயலாளர்.
// உண்மைநகல் //
எஸ்.உமாமஹேஸ்வரி, பிரிவு அதிகாரி.

## இணைப்பு 4: மறுஆய்வுக் கூட்ட அறிக்கை, 22 அக்டோபர் 2019, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் அடிப்படை வசதிகளை அமல்படுத்துவது மற்றும் பட்டியல் சாதிகள் / பட்டியல் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு] சட்டத்தை அமல்படுத்துவது குறித்து கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜேனரல், சமூகநீதி மற்றும் மனிதஉரிமைகள் மற்றும் கூடுதல்தலைமைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அறையில் சம்பந்தப்பட்ட பிற அதிகாரிகளுடன் 22.10.2019 அன்று மாலை 12.30 மணிக்கு ஒரு கூட்டம் நடைபெற்றது.

பின்வரும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

| | | |
|---|---|---|
| 1. | ஓடெம் டாய், ஐ.ஏ.எஸ் | அரசு கூடுதல்தலைமைச் செயலாளர் |
| 2. | டாக்டர். பழனிசாமி, ஐ.ஏ.எஸ் | ஊரகவளர்ச்சி இயக்குநர் மற்றும் பஞ்சாயத்துராஜ் |
| 3. | திரு. ரிட்டோசிரியாக், ஐ.எஃப்.எஸ் | பழங்குடி நல இயக்குநர் |
| 4. | திரு.ஷைலேஷ்குமார் யாதவ் ஐ.பி.எஸ். | கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜெனரல் |
| 5. | திரு. சு. யேசுதாஸ் கென்னடி | அரசு இணைசெயலாளர், ஊரகவளர்ச்சி இயக்குநர் மற்றும் பஞ்சாயத்துராஜ் |
| 6. | திருமதி. ராஜாஷ்ரி | கூடுதல்இயக்குநர், ஊரகவளர்ச்சி இயக்குநர் மற்றும் பஞ்சாயத்துராஜ், சென்னை – 15 |
| 7. | திரு.டி.செல்வன் | அரசு துணை செயலாளர் |
| 8. | திரு. யுவராஜ் | துணைகாவல்துறைகண் காணிப்பாளர் |

அறையில் இருந்த அதிகாரிகளின் பரஸ்பர அறிமுகத்துடன் கூட்டம் தொடங்கியது. 2018–2019 மற்றும் 2019–2020 ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்டஆதிதிராவிடர் வாழ்விடங்களில்

மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் குறித்து கூடுதல்தலைமைச் செயலாளர் கிராமஅபிவிருத்தி இயக்குநர் மற்றும் பஞ்சாயத்துராஜ் ஆகியோரிடம் விசாரித்தார். 2018–2019 ஆம் ஆண்டிற்கான ஆர்.டிஅபி.ஆர் துறை வழங்கிய உத்தரவுகளின் படி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட பணிகளின் பட்டியலை இயக்குநர் ஆர்.டிஅபி.ஆர் ஒப்படைத்தார். எஸ்சி மக்கள் தொகையில் 30ரூ க்கும் அதிகமான கிராமபஞ்சாயத்துகளில் உள்ள ஆதிதிராவிடர் வசிப்பிடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன, மேலும் சமூகத்தைப் பொருட்படுத்தாமல் தேவையான இடங்களில் பிற முன்னுரிமைப் பகுதிகள்அடையாளம் காணப்படுகின்றன, மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுவின் அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்கள் உள்ளடக்கிய மாவட்ட குழுவின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் விளக்கினார். ஒருவாழ்விடம் அடையாளம் காணப்பட்டவுடன், குறிப்பிட்ட பகுதியில் உள்ள அனைத்து அடிப்படை தேவைகளும் பூர்த்தி செய்யப்படும். வன்கொடுமை ஏற்படக்கூடிய கிராமங்களின் வரையறைமற்றும் இத்தகைய கிராமங்களில் அடிப்படை வசதிகளைஅமல்படுத்தவேண்டியதன் அவசியத்தை கூடுதல்தலைமைச் செயலாளர் விளக்கினார். ஆகவே, அடிப்படை வசதிகளின் திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஆதிதிராவிடர் வாழ்விடங்களை அடையாளம் காணும்போது, வன்கொடுமையால் பாதிக்கப்படும் கிராமங்கள் ஒரு அளவுகோலாக சேர்க்கவும் அவர் பரிந்துரைத்துள்ளார். இது தொடர்பாக, கிராமப்புறஅபிவிருத்திமற்றும் பஞ்சியத்ராஜ் துறைக்கு ஒரு கடிதத்தை எழுதுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார். ஆர்.டிஅண்ட் பி.ஆர் துறையின் அதிகாரிகள் ஏ.சி.எஸ்–ன் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு இந்த விஷயத்தில் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர். பழங்குடிநலன் இயக்குநர் கிராமஅபிவிருத்தி முகமை இயக்குனருடன் PMAGY திட்டத்தை செயல்படுத்துவது குறித்தும் விவாதித்தார்.

கிராமஅபிவிருத்தி பணிப்பாளருடனான கலந்துரையாடல்கள் முடிந்தபின், கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர் வன்கொடுமை வழக்குகளின் நிலையைவிளக்கினார். கொடூரமான குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை இறுதி செய்வதில் சமூகநீதி மற்றும் மனிதஉரிமைகள் பிரிவு இப்போது கவனம் செலுத்துகிறது என்று அவர்தெரிவித்தார். தற்போது, சில குறிப்பிட்ட காரணங்களுக்காக இதுபோன்ற 8 வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன. இது தொடர்பாக, கூடுதல்தலைமைச் செயலாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாவட்டக லெக்டர்கள் மற்றும் காவல்துறை மாவட்ட கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குமாறு அறிவுறுத்தினார். இந்தவன் கொடுமைகள், நிலுவைத் தொகையை குறைப்பதற்காக அனுமதிக்கப்படவேண்டிய இழப்பீடு தொடர்பான வழக்குகளை மறுஆய்வு செய்வதற்குமான அறிவுறுத்தல்களை வழங்கினார். மாவட்ட அளவிலான கண்காணிப்பு கமிட்டி கூட்டங்களை நடத்துவதற்குமுன்னர் பிரச்சினைகள் மற்றும் அவற்றின் தீர்வுகள் பற்றி நன்கு விவாதிக்கப்படவேண்டும், மேலும் சுருக்கமா கதெளிவாக முன்வைக்கப்படவேண்டும், இதனால் குழுவின் தலைவர் கருத்தில்கொள்ளவேண்டியவிஷயங்களில்கவனம் செலுத்தமுடியும். கூடுதல் காவல்துறை இயக்குநர் ஜேனரல் சமூக சான்றிதழ்களைசரிபார்க்கும் நிலுவையில்விவாதித்தார். 2,401 வழக்குகளில்1,345 வழக்குகளில் சரிபார்ப்பு நிறைவடைந்துள்ளதாகவும், 1,059 வழக்குகள்சரிபார்ப்பு நிலுவையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கூடுதல்காவல் கண்காணிப்பாளர் நாயகம் மற்றும் டி.டி.டபிள்யூஆகியோரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து பிரிவுகளையும் இணைப்பது குறித்து, கூடுதல் காவல்துறை இயக்குநர் ஜேனரல் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அலகுகள் அவற்றின் நிலுவையில் உள்ள சரிபார்ப்பு பணிகளை நிறைவுசெய்யும் என்பதால் இருக்கிற நிலையை அப்படியே பராமரிக்கலாம் என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. மேலும், டி.டி.டபிள்யூ கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கண்காணிப்பு பிரிவுகள் நிரந்தரமானது மற்றும் சரிபார்ப்பு பணிகளை

வழக்கமான அடிப்படையில் மேற்கொள்ளும். நிலுவையில் உள்ள வழக்குகளின் சரிபார்ப்பு முடிவடைவதற்கான சரியான நேரம் குறித்து கூடுதல்தலைமைச் செயலாளர் அவரிடம் விசாரித்தார், மேலும் ஆறு அல்லது ஏழு மாதங்களுக்குள் அனைத்து வழக்குகளையும் முடிக்கமுடியும் என்று கூடுதல் காவல்துறை இயக்குநர் பதிலளித்தார்.

மேற்கண்ட கலந்துரையாடல்களுடன் கூட்டம் முடிந்தது.

ஓடெம் டாய்,
அரசு கூடுதல்தலைமை செயலாளர்.
// உண்மைநகல் //
எஸ்.உமாமஹேஸ்வரி, பிரிவு அதிகாரி.

## இணைப்பு 5: மறுஆய்வுக் கூட்ட அறிக்கை, 8 நவம்பர் 2019, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

அரசின் கூடுதல்தலைமைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, 08.11.2019 அன்றுகாலை 11.00 மணிக்குநாமக்கல்கவிஞர் மாளிகைகட்டிடம், முதல்தளம், வேளாண்துறை, மாநாட்டு மண்டபத்தில் நடத்திய பட்டியல் சாதியினருக்கான தேசிய அளவிலான தொடக்கநிலைக் கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகள்.

கூட்டத்தில்பின்வரும் அதிகாரிகள்கலந்துகொண்டனர்: –

| | |
|---|---|
| 1 | எஸ்.மதுமதி, ஐ.ஏ.எஸ்.,<br>அரசாங்க செயலாளர் சமூகநலன் மற்றும்<br>சத்தானஉணவுதிட்டத்துறை |
| 2 | கே.வி.முரளிதரன், ஐ.ஏ.எஸ்.,.<br>இயக்குனர்,ஆதிதிராவிடர் நலன், சென்னை – 5 |
| 3 | சைஜான்சிங் ஆர்சவான், ஐ.ஏ.எஸ்.,<br>நிர்வாகஇயக்குநர்,<br>தஹ்தோ, சென்னை –19 |
| 4 | ஷைலேஷ்குமார் யாதவ், ஐ.பி.எஸ்.,<br>கூடுதல்போலீஸ் இயக்குநர் ஜேனரல்<br>சென்னை –வ 4 |
| 5 | எஸ்.அமிர்தஜோதி, ஐ.ஏ.எஸ்.,<br>துணைசெயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புதுறை. |
| 6 | அமர் குஷாவா, ஐ.ஏ.எஸ்.,<br>கூடுதல்இயக்குநர்,<br>ஊரகவளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை. |
| 7 | எம்.விஜயலட்சுமி, ஐ.பி.எஸ்.,<br>கூடுதல்போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜேனரல்.<br>சமூகநீதிமற்றும் மனிதஉரிமைகள் |
| 8 | எஸ்.மணிமேகலா பி.காம்.,<br>அரசுதுணைசெயலாளர். |
| 9 | வீரபாண்டி,<br>கூடுதல்செயலாளர்,<br>ஊரகவளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை |
| 10 | என்.ரவிசங்கர்,<br>வேளாண் துணைசெயலாளர், |

| | |
|---|---|
| | வேளாண்மைத் துறை. |
| 11 | எஸ்.முருகன்,<br>துணைசெயலாளர்,<br>வேளாண்மைத் துறை |
| 12 | கே.நாகநாததேவர்.<br>அரசு துணைசெயலாளர்<br>வருவாய் மற்றும் பேரழிவு மேலாண்மை |
| 13 | பி.வீரலட்சுமி<br>துணைசெயலாளர்<br>ஊரகவளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை |

நாமக்கல் கவிஞர் மாளிகைகட்டிடம், முதல்தளம், செயலகம், வேளாண்துறை, மாநாட்டு மண்டபத்தில் 14.11.2019 மற்றும் 15.11.2019 ஆகிய தேதிகளில் நடைபெற உத்தேசித்துள்ள தேசிய பட்டியல் சாதி ஆணையக்கூட்டத்திற்கு முன் முன்வைக்கப்படவேண்டிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்க அரசு கூடுதல்தலைமைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையினரால் தொடக்கநிலைக் கூட்டம் நடத்தப்பட்டது.

துவக்கத்தில், அரசின் கூடுதல்தலைமைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை: வந்திருந்த அனைத்து அதிகாரிகளையும் வரவேற்று, முன்மொழியப்பட்ட தேசிய பட்டியல் சாதி ஆணைய கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரல் மற்றும் திட்டஅட்டவணை குறித்து சுருக்கமாக விவரித்தார்.

சூதசிய பட்டியல் சாதி ஆணையக் கூட்டம் 14.11.2019 மற்றும் 15.11.2019 ஆகிய தேதிகளில் இரண்டு நாட்களுக்கு நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக கூடுதல்தலைமைச் செயலாளர் தெரிவித்தார். கடைசியாக 2014–2015 ஆம் ஆண்டில் தேசிய பட்டியல் சாதி ஆணையகூட்டம் நடைபெற்றது மற்றும் மத்திய அமைச்சரவை அமைச்சர் என்ற அந்தஸ்தில் தலைவர் திரு.ராம்சங்கர் கதரியாதலைமையில் நடைபெறவுள்ளதற்போதைய கூட்டத்தில், துணைத்தலைவர் திரு.எல்.முருகன், மூன்று உறுப்பினர்கள்மற்றும் புதுதில்லி, பட்டியல் சாதியினருக்கான தேசிய ஆணையத்தின் செயலாளர், அரசின் கூடுதல்தலைமைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, இயக்குநர் ஆதிதிராவிடர் நலம், மற்றும் தமிழ்நாடுஆதிதிராவிடர் வீட்டுவசதிமற்றும் மேம்பாட்டு

கழகத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் செயலகத்தின் 14 சம்பந்தப்பட்டதுறைகள்., கூடுதல்காவல்துறை இயக்குநர் ஜேனரல், கூடுதல்காவல்துறை கண்காணிப்பாளர் ஜேனரல், மற்றும் மாநிலத்தின் பிற இரண்டாம்நிலை அதிகாரிகள் கலந்துகொண்டனர். கூட்டத்தின் போதுபின்வரும் பொருள்களில் விவாதிக்கப்பட்டன,

1. எஸ்சி நலத்திட்டங்கள்

2. வன்கொடுமைகள் தடுப்பு

3. சிறப்பு மத்திய உதவி

4. பட்டியல் சாதி துணைதிட்டம்

5. நிதி ஒதுக்கீடு, செலவு விவரங்களுடன் ஒப்புதல் பெறப்பட்டது மற்றும் பயன்படுத்தப்பட்டது.

14.11.2019 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும் கூட்டத்தின் போது, அந்தந்த துறைகளின் வினாப்பட்டியல் மற்றும் தொடர்புடைய பதில்களுடன் குழு இருக்கும். அனைத்து துறைகளும் பதில்களை கவனமாக தயாரித்து மீள்பார்வை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. எழுப்பப்பட்ட கேள்விக்கான முக்கியநோக்கம் பதில்களில் இருக்கவேண்டும் என்றும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான ஆடியோ / காட்சி, பவர்பாயிண்ட் விளக்கக் காட்சியை ஆதிதிராவிடர் நலம் இயக்குநர் தயாரிப்பார் என்றும் கூடுதல்தலைமைச் செயலாளர் கூறினார்.

கூடுதல்தலைமைச் செயலாளரின் அறிவுறுத்தலின் படி அரசு துணைச்செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஒவ்வொன்றாக வினாப்பட்டியலைப் படித்து, அந்தந்ததுறை வினாப்பட்டியலுக்கான பதில்களை அளித்தது.

சிற்றிதழில் 21 முக்கிய விஷயங்களை உள்ளடக்கியது, அதில் அறிமுகத்தில் நமது மாநில விவசாய கணக்கெடுப்பு இருந்தது, இதில் பட்டியல் சாதிவி வசாயிகளின் பயனாளிகள் எண்ணிக்கையும் அடங்கும். விவசாய துறையிலிருந்து கூடுதல் விவரங்கள் தேவை என்று அரசின் கூடுதல்தலைமைச் செயலாளரும் வலியுறுத்தினார்.

மற்ற துறைகளை சேர்ந்த பல அதிகாரிகள் சிற்றிதழில் சேர்க்க தேவையான விவரங்களை தருவதாக தெரிவித்தனர். புதுப்பிக்கப்பட்ட விவரங்களை நிதி மற்றும் உயர்கல்வித் துறைகளிடமிருந்து மென்பொருள்நகலைப் பெறவும், சிற்றிதழில் சேர்க்கவும் அரசின் கூடுதல்தலைமைச் செயலாளர் தனது துணை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். சிற்றிதழில் கொண்டுவரப்படாத உள்ளீடுகளை எஸ்சி விடுதிகள் பெண்கள்] என்பதுபோல பொதுபத்தியிலும் மற்றும் சரியாக ஒழுங்குபடுத்துமாறு அரசுசெயலாளர், சமூகநலன் மற்றும் ஊட்டச்சத்து உணவுதிட்டத்துறை பரிந்துரைத்தார் மற்றும் முறையே கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள பட்டியல் சாதியினருக்கான வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் பழுதுபார்ப்பது குறித்து தெளிவான விவரங்களை அளிக்குமாறு அரசின் கூடுதல்தலைமைச் செயலாளர் கிராமஅபிவிருத்தி அதிகாரிகளுக்குஅ றிவுறுத்தினார்.

கூடுதல்காவல்துறை கண்காணிப்பாளர் ஜேனரல், கூடுதல்காவல்துறை இயக்குநர் அலுவலகம், வினாப்பட்டியலில் அளித்துள்ள விவரங்களை புதுப்பிக்க பரிந்துரைத்தது.

வினாப்பட்டியல் தொடர்பான விவரங்களை புதுப்பிக்கபின்வரும் துறைகள் உறுதிசெய்துள்ளன.

1. வேளாண்மைத்துறை
2. தொழிலாளர் மற்றும் பணியாளர் துறை
3. நகராட்சிநிர்வாகம் மற்றும் நீர் வழங்கல்துறை
4. ஊரகவளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை
5. பள்ளி கல்வித்துறை
6. சுகாதாரத்துறை
7. உள்துறை
8. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறை

கூமலே உள்ள துறைகள்அவர்களின் அனைத்து துறைகளிடமிருந்தும் விவரங்களை சேகரித்து ஒருங்கிணைந்த அறிக்கையை இந்தத் துறையிடம் சமர்ப்பிக்குமாறு கோருவது என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை தொடக்கநிலை கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அரசின் கூடுதல்தலைமைச் செயலாளர் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை செயலாளருக்கு இந்த நிலையை தெரிவிக்கும் படியும் எதிர்காலத்தில் இத்தகையநடைமுறையைத் தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், நன்றி தெரிவித்து, சம்பந்தப்பட்ட செயலகத்துறைகளின் இரண்டாம் நிலை அதிகாரிகள் அனைவருக்கும் ஒருங்கிணைந்த அறிக்கையையும் துறை தொடர்பான வினாப்பட்டியலையும் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

தலைமைக்கு நன்றி கூறி கூட்டம் நிறைவுற்றது.

ஓடெம் டாய்,
அரசு கூடுதல்தலைமை செயலாளர்.
// உண்மை நகல் //
எஸ்.உமா மஹேஸ்வரி, பிரிவு அதிகாரி.



மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை
8668091454 / justice@hrf.net.in / hrf.net.in

Commonwealth Foundation